24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 | கதிர் 115 | பங்குனி 08ஆம் நாள் | வெள்ளிக்கிழமை | 22 மார்ச் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

ஆட்சியிலிருந்த சில நாள்களில்

## வலி.வடக்கில் காணி சுவீகரிப்பை முடுக்கிவிட்டுள்ளது மகிந்த தரப்பு

### தல்செவனவுக்கு காணியைத் தாரைவார்க்க முயற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 22
அரசியல் சூழ்ச்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றி 51 நாள்கள் அதிகாரத்தில் இருந்த மகிந்த அணி, வலி. வடக்கில் காணி சுவீகரிப்பு நடவடிக்கையை முடுக்கி விட்டமை இப்போது அம்பலத்துக்கு வந்துள்ளது. இராணுவத்தினர் நடத்தும் தல்செவன ஹோட்டல், கடற்படையினர் நடத்தும் கார்பர் வியூ ஹோட்டல் என்பவற்றுக்குரிய காணிகளை சுவீகரித்து பாது காப்பு அமைச்சுக்கு வழங்குமாறு மகிந்த அணியினர் அழுத்தம் கொடுத்தமை தெரியவந்துள்ளது. வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 7 ஆயிரம் ஏக்கர்கள் வரையில் இராணுவத்தினர் >> 19

## ஒரு துண்டு நிலம்கூட சுவீகரிக்க முடியாது

### பிரதேச சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 22
வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் ஒரு துண்டு நிலம்கூட பாதுகாப்புத் தரப்பின் தேவைக்கு சுவீகரிக்க இடமளிக்க முடியாது. இவ்வாறு வலி. வடக்கு பிரதேச சபையின் நேற்றைய அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
வலி. வடக்கு பிரதேச சபையின் அமர்வு தவி >> 05

## காணி சுவீகரிப்பு விவகாரம் கொழும்பில் அவசரக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 22
வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 232 ஏக்கர் காணிகளை சுவீகரிக்க எடுத்த நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் இறுதி முடிவு எடுப்பதற்காக கொழும்பில் இன்று காலை அவசரக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள 232 ஏக்கர் காணிகளை சுவீகரிப்பதற்கான அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலை >> 05

## 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துக

### இலங்கையின் நிராகரிப்பைத் தாண்டி நிறைவேறியது மற்றொரு தீர்மானம்




கொழும்பு, மார்ச் 22
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளைமுன்னெடுக்கும் வகையில் 40/1 தீர்மானம் இலங்கையின் இணை அனுசரணையுடன் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது. >> 19

## வடமாகாண கார்ப்பந்தயம்

யாழ்ப்பாணம், மார்ச் 22
இலங்கை மோட்டார் றேசிங் சங்கம், யாழ்ப்பாணம் மோட்டார் விளையாட்டுக் கழகம், இராணுவ் மோட் >> 19

## தமிழ்ப் பாடல் ஒலிபரப்புமாறு கேட்டவரை இறக்கிவிட்டார் சாரதி?

சாவகச்சேரி, மார்ச் 22
தமிழ்ப்பாடல் ஒலிபரப்புமாறு கேட்ட பயணியை பேருந்தின் .சாரதியும், நடத்துனரும் இறக்கிவிட்ட சம்பவம் மிருசுவில் உசன் பகுதியில் இடம்பெற்றுள்ளது. எனினும், குறித்த நபர் தம்மிடம் இருந்த பணம் >> 19

## வெப்பத்தால் குடும்ப தலைவர் சாவு

பருத்தித்துறை, மார்ச் 22
கடும் வெப்பத்தால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை குடும்பத் தலைவர் ஒருவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார்.
பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த ஜீவகடாட்சம் கஜேந்திரன் (வயது -52) என்ற நபரே அவ்வாறு உயிரிழந்தவராவார். கூலித் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட இவர் நேற்றுமுன்தினம் கொழுத்தும் வெயிலில் கட்டட அமைப்புப் பணியில் வேலைசெய்து கொண்டிருந்த போது திடீரென மயங்கி விழுந்தார். அவர் உடனடியாகப் பருத் >> 19

## தமிழ்க் கூட்டமைப்பின் அழுத்தத்தையடுத்து காணி சுவீகரிப்பு தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 22
வலி. வடக்கில் கடற்படை முகாம் அமைப்பதற்கு காணி சுவீகரிப்பு நடவடிக்கை இன்று முன்னெடுக்கப்படவிருந்த நிலையில் அது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கிய >> 19

மன்னார்

## மனிதப் புதைகுழி தொடர்பில் இறுதியான தீர்மானம் இன்று!

மன்னார், மார்ச் 22
மன்னார் மனிதப் புதைகுழியைத் தொடர்ச்சியாக அகழ்வு செய்வதா அல்லது அதன் பணிகளை முடிவுறுத்துவதா என்பது தொடர்பான இறுதித் தீர்மானம் இன்று மேற்கொள்ளப்படவுள்ளது.
மன்னார் மனிதப் >> 06

## பாதிக்கப்பட்ட அப்பாவித் தமிழருக்கு நீதி கிடைக்கும்வரை பாடுபடுவோம்!

### ஜெனிவாவில் அரச குழுவிடம் இடித்துரைத்தார் இம்மனுவல்

ஜெனிவா, மார்ச் 22
'இலங்கையில் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களுக்கு இந்த விசாரணை ஊடாக நீதி கிடைக்க வேண்டும். இது நிறைவேறும்வரை நாம் அயராது பாடுபடுவோம்' இவ்வாறு >> 19

2009ஆம் ஆண்டு கொழும்பில்

## தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டமையை கடற்படைத் தலைமைகள் அறிந்திருந்தன

கொழும்பு, மார்ச் 22
2009ஆம் ஆண்டு கொழும்பில் வெள்ளை வானில் தமிழ் இளைஞர்கள் இருவர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டமை தொடர்பில், அந்தக் காலப்பகுதியில் கடற்படைக்குத் தலைமை வகித்தவர்கள் அறிந்தி >> 19

DFCC WINNER
சேமிப்புக் கணக்கு




ரூ. 2500/= அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்து சேமிப்புகளுக்கும் இலங்கையின் அதிகூடிய வட்டி.


DFCC சேமிப்பு

நீங்களும் இன்றே DFCC வங்கிக் கிளைக்கு வந்து DFCC WINNER சேமிப்புக் கணக்கை ஆரம்பியுங்கள்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

24 மணிநேர அழைப்பு நிலையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி



# திருநங்கைகளை ஆதரிப்போம்-விஜய்சேதுபதி

நடிகர் விஜய் சேதுபதி வித்தியாசமான கதைகளை தேர்வு செய்து நடித்து வருகிறார். சீதக்காதியில் வயதான தோற்றத்தில் வந்த அவர் ரஜினியின் பேட்ட படத்தில் வில்லன் வேடம் ஏற்றார்.

சமீபத்திய படங்களில் 96 அவருக்கு பெரிய திருப்புமுனை படமாக அமைந்தது. இந்த படத்தை பிற மொழிகளிலும் போட்டி போட்டு தயாரிக்கின்றனர்.

அடுத்து சூப்பர் டீலக்ஸ், கடைசி விவசாயி, மாமனிதன், தெலுங்கு, தமிழில் தயாராகும் சைரா நரசிம்ம ரெட்டி ஆகிய படங்களில் நடித்து வருகிறார். இதில் சூப்பர் டீலக்ஸ் படத்தில் விஜய் சேதுபதி திருநங்கை வேடத்தில் வருகிறார். அவரது தோற்றத்தைப் படக்குழுவினர் வெளியிட்டு உள்ளனர்.

இதில் கதாநாயகியாக சமந்தா நடிக்கிறார். மலையாள நடிகர் பகத் பாசிலும் முக்கிய கதாபாத்திரத்தில் வருகிறார். விஜய் சேதுபதியின் திருநங்கை வேடத்துக்கு வலைத்தளத்தில் பாராட்டுகள் குவிகின்றன. படத்துக்கும் பெரிய எதிர்பார்ப்பு ஏற்பட்டு உள்ளது.

விஜய் சேதுபதி இந்த தோற்றத்துக்காக மிகவும் சிரமப்பட்டதாக தெரிவித்துள்ளார். அந்த கதாபாத்திரம் பற்றி பேசும்போது, "படத்தில் ஆணாக இருக்கும் நாம் எளிதாக திருநங்கை கதாபாத்திரத்தை செய்து விடலாம் என்றுதான் ஆரம்பத்தில் நினைத்தேன். ஆனால் அந்த மாதிரி நடிக்க ரொம்பவே கஷ்டமாக இருந்தது. இந்த சமூகம் இந்த திருநங்கைகளை ஏன் இப்படி பிரித்து வைத்துள்ளார்கள் என்று தெரியவில்லை. அவர்களும் மனிதர்கள்தான். சாதி ஏற்றத்தாழ்வு போல் இதையும் தனித்தனியா பிரித்து வைப்பது தவறு. இது பெரிய அவமானம் ஆகும்" என்றார்.









கைபேசிகள் சார்ஜ் செய்யும் போது பாதுகாப்பாக வைக்கக் கூடிய பிளாஸ்ரிக் கவர்கள் அறிமுகமாகியுள்ளன. இவை 450 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இது புதுசு










## புடவை கடையில்....



**மன்னவி** : " இந்த கேட்லாக் பாத்தீங்களே.. இதுல எதாவது நல்லா இருக்கா..? "
கணவர் : " ஒண்ணு., ரெண்டு ஓ.கே.. "
மனைவி : " எங்கே குடுங்க பார்க்கலாம்...! "
மனைவி கேட்லாக்கை வாங்கி பார்த்தாங்க..
மனைவி : " ஏங்க... இந்த 17ம் பக்கம் **பாருங்க...**
இது நல்லா இல்ல...? "
கணவர்: " ம்ஹீ‌ம்... நல்லா இல்ல..! "
மனைவி : " இந்த 32ம் பக்கம்... இது எப்படி..? "
**கணவர்** : " சுமார் தான்....! "
கொஞ்ச நேரம் கழிச்சி..
**மனைவி** : " இந்த 59ம் பக்கம் பாருங்க.. "
**கணவர்** : " ம்ஹீ‌ம்.... இதுவும் எனக்கு பிடிக்கலை.....
மூக்கு சப்பையா இருக்கு..! "
**மனைவி** : " என்னாது மூக்கு சப்பையா இருக்கா..? "
மனைவி முகத்துல ஒரு தீப்பொறி தெரிஞ்சது..
**மனைவி** : " அப்ப இவ்ளோ நேரம் நீங்க இதுல
இருந்த பொண்ணுங்களதான் பாத்துட்டு இருந்தீங்க..?? சேலையை பார்க்கல...?! "
**கணவர்** : " சேலையைதான் பார்க்கணுமா...? அதை நீ சொல்லவே இல்ல.....

## ருவீற்ஸ்

**கோழியின் கிறுக்கல்!!@Kozhiyaar**
நாம மேல ஏற ஏற கீழ இருப்பவர்கள் சிறிதாய் தெரிய ஆரம்பித்தால், 'தன்னடக்கம்' என்னும் கண்ணாடி அணிந்து கொள்வது அவசியம்.

**சிவா @@ShivaP_Offl**
மிகவும் எளிமையாக வாழ்ந்துகொண்டு இருப்பவர்கள், இந்த உலகம் அவர்களைபற்றி என்ன சொல்லிக்கொண்டு இருக்கிறது என்று நினைத்து கவலைப்படமாட்டார்கள்...

**கோவை சிவா @shivafreedom**
மனிதர்களால் தரமுடியாத ஆறுதலை
சில நேரங்களில் தனிமை தந்து விடுகிறது....

**சிதறல்கள் @mujib**
அவரவர் அனுபவங்களை திணிக்கிறார்களே தவிர
புரிந்து கொள்ளும் படி புத்திமதி சொல்பவர் குறைவு.

## மரண அறிவித்தல்

# கனகசபை கதிர்காமநாதன்

(உரிமையாளர் - K.S.K.மோட்டோர்ஸ், சாவகச்சேரி)



தோற்றம் 03.09.1942 மறைவு 19.03.2019

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாக வும் கொண்ட கனகசபை கதிர்காமநாதன் 19.03.2019 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை (உரிமையாளர் - K.S.K.மோட்டோர்ஸ்) இலட்சுமிபிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர் களான கணபதிப்பிள்ளை ( ஓய்வுபெற்ற - ஆசிரியர்) பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், சிவகாம சௌந் தரியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி பரமநாதன் (கனடா), குமாரசாமி (முன்னாள் சிறாப்பர் யாழ். பல்க லைக்கழகம்), சிவஞானேஸ்வரி, தவேந்திரன் (ஓய்வு பெற்ற ஆசிரியை - பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி) ஆகி யோரின் அன்புச் சகோதரனும் கேதீஸ்வரி (உமா - UK), கௌரி (ஆசிரியை - இல்மா முஸ்லீம் வித்தியாலயம், பாணாந்துறை), கேசவன் UK), கௌரீசன் (ஆஸ்திரே லியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பகீரதன் UK), முரளி(அதிபர் - தெஹிவளைதமிழ்மஹாவித்தியாலயம்), பங்கஜவாணி UK), ஜெசிக்கா (ஆஸ்திரேலியா) ஆகியோ ரின் அன்பு மாமனும், கீர்த்தனன், ஹரிணி, தசாரகன், மேகா அபித், அபியோனா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பரமநாதன் (தாபலதிபர்), கு.பரமேஸ்வரி, தவேந்திரன் (ஓய்வு நிர்வாக உத்தியோகத்தர் - தென்மராட்சி கல்வி வலயம்), கணேஷ மூர்த்தி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24.03.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணியளவில் தகனக் கிரியைகள் கல்கிசை பொது மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

E - 6, சொய்சாபுர தொடர்மாடி,
மொரட்டுவ.

தகவல்
**மனைவி, பிள்ளைகள்,**

077 6513056, 077 198 0967,
077 308 6738, 071 838 8303

## மரண அறிவித்தல்

# மதியாபரணம் பரமேஸ்வரி (தேவி)



அன்னை மடியில் 24.05.1950 ஆண்டவன் மடியில் 18.03.2019

யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட மதியா பரணம் பரமேஸ்வரி (தேவி) 18.03.2019 திங்கட்கிழமைஅதிகாலை அகாலமரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.03.2019) வெள்ளிக் கிழமை அவரது இல்லத் தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

197/1, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS/24159)(11.17)

## மரண அறிவித்தல்

# திருமதி மனோன்மணி துரையப்பா



தோற்றம் 24.04.1926 மறைவு 20.03.2019

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யாழ். அச்சுவேலி தெற்கு, கொழும்பு வெள்ளவத்தை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட மனோன் மணி துரையப்பா கடந்த (20.03.2019) புதன்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கனக சபை - தெய்வானைப்பிள்ளை தம்பதி களின் அன்புப் புதல்வியும் ஊரெழு கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர் களான இராமலிங்கம் - சிவகாமன் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற துரையப்பாவின் (மேலதிக மாவட்டப் பெரும்பதிவுகாரர்) அன்பு மனைவியும் றதிமதி (கனடா), பாமதி (கொழும்பு), வான்மதி (கொழும்பு), கோகிலமதி (லண்டன்), இந்துமதி (அவுஸ்திரேலியா), சிவகுமாரன் (கனடா), ஸ்கந்தகுமார் (லண்டன்), விஜய குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலசிங்கம் (கனடா), காலஞ்சென்ற கணேஷமூர்த்தி, சபாரத்தினம் (கொழும்பு), மயில்வாகனம் (லண்டன்), பாக்கியசோதி(அவுஸ்திரேலியா), சுதனி(கனடா), சிவனேஸ்வரி(லண்டன்), அருந்தா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான முருகேசு, K.K பிள்ளை, சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜனனி - சிறீ காந்தன், ஜனா - சுனித்தா, சுரேன் - தனுஜா, ஜெகன், ஜெயந்தன் - நித்திலா, சிந்துஜா - முகுந்தன், மனோஜா - வேணியன், ஷிரோமி - கிறீஸ்ரி, ரோஷினி, தர்மிலா - கவி, சதுர்ஷா, சஜீக்கா, சுஜீக்கா, அரவின், விஷ்னி, கிஷானா, பிரீத்திக்கா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆதிகேசன், ஆரணி, அபிராமி, அனிஷ், ஆதிரையன், அஞ்சனா, அக்ஷயன், வர்ஷா, தானியா, றியன், கைலா, மாயா, சாயியன், ரியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 45/28 Fredrica Road, Wellawatte, இல்லத்தில் நாளை (23.03.2019) சனிக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு எதிர்வரும் (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் இல்லத்தில் நடைபெற்று காலை 11.30 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக பொரளை கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 45/28 Fredrica Road,
Wellawatte. 0112589466

தகவல்:
**குடும்பத்தினர்.**

(C 11872/15/17)

## துயர் பகிர்கின்றோம்



உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபை உறுப்பினர் திரு. த.ஞானசுந்தரம் (லம்போ) அவர்களின் அன்புத் தாய்

**சின்னம்மா தம்பையா**

அவர்களது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபம் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய கற்பக விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

**பரிபாலன சபையினர்,**
**ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம், உரும்பிராய்.**

(CS/24167)(11.17)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன் றெஜிமல்
**றஜனிகாந் மனுவேற்பிள்ளை**

தோற்றம்: 07.05.1971 மறைவு: 22.03.2014

எங்கள் அன்பான றஜனா உனது பிறந்த நாள்தான் எங்கள் மனதில் குதூகல கொண்டாட்டம் அப்போ றஜனா இப்போ எங்கள் மனதில் பிறந்த நாள் அல்ல இருண்ட நாளகி கண்ணீரில் வாடுகிறோம்.

பெற்றோர், ஜீவரெட்ணம், நவரெட்ணம்,
றதிசித்தி, துரைரெட்ணம்.
கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 . 12 . 1950



மறைவு 23 . 03 . 2018

# திருமதி யசிந்தா லோகநாதன்

எமது அன்னையின் முதலாவது நினைவு நாளாகிய நாளை (23.03.2019) சனிக்கிழமை எமது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

சந்தை வீதி,
சுன்னாகம்.

(CS 24147)(14.17)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வசந்தாதேவி தர்மராசா


பிறப்பு 27.07.1952 இறப்பு 21.03.2019

மூணாமலைலேன் சுதுமலை மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தாதேவி தருமராசா நேற்று (21.03.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா மாணிக்கம் தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற மார்க்கண்டு செல்லம்மா தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற தர்மராசாவின் மனைவியும் சிவச்சந்திரராசா, கலாவதி, சிறிராசா, சாந்தராசா, ரேவதியின் அன்பு சகோதரியும் தர்மலதா, ரஜித்காந், தினேஸ்காந், நிஷாந்தி, பிறேம்காந் ஆகியோரின்தாயாரும் பிரவீன், அக்ஷயன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2019) வெள்ளிக்கிழமை மதியம் 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## தம்பித்துரை அம்பிகைபாகன்


தோற்றம் 30.06.1939 மறைவு 20.03.2019

கொழும்பைப் பிறப்பிடமாகவும் 62, முதலி கோவில் வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட தம்பித்துரை அம்பிகைபாகன் 20.03.2019 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - மங்கையற்கரசி தம்பதி களின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற வர்களான குணரத்தினம் - கனகம்மா தம்பதிகளின் அருமை மருமகனும் ராஜா ராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அருணபாலனின் சகோதரனும் ரட்ணகுமார், பாலகுமார், ஆனந்த ரூபினி (லண்டன்), ரவீந்திர குமார், துளசிதா, காலஞ்சென்ற பருந்தாமன் மற்றும் ரிஷிகேஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குகலக்ஷ்மி, சோபா, சந்திரகலா, ராஜேஸ்வரன், பிரசாத் ஆகியோரின் மாமனாரும் கிருஷிகா, பானுஷிகா, கீர்த்தனா, தனுஷன், றொஷான், கிருஷாந்தன், அக் ஷனா, சதுயா, திவ்யா, மயூரிகா, விதுஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2019) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தாவடி தெற்கு, கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 24156/11/17)

## திருவருள் விஜயசிங்கம் (அப்புகண்டு)

*(மகாஜனா கல்லூரி பழையமாணவர்)*


பிறப்பு 20.12.1938 இறப்பு 19.03.2019

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருவருள் விஜயசிங்கம் கடந்த (19.03.2019) செவ்வாய்க்கிழமை இறை பதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலேசியா "இறப்பர் தோட்ட முகாமை யாளர்" முருகர் திருவருள் - சின்னத் தங்கம் தம்பதிகளின் 5 ஆவது மகனும் காலஞ்சென்ற திருமதி லீலாவதியின் கணவரும் லட்சுமி, சரஸ்வதி, சுபாங்கினி ஆகியோரின் தந்தையும் ஜெயசிங்கம் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், குலசிங்கம், தர்மகுலசிங்கம், பரராஜ சிங்கம், துரைராஜசிங்கம், திருமதி கு.சரஸ்வதி ஆகியோரின் சகோதரரும் சஞ்ஜீவன், ரஞ்சித், ரமணன், ஆகியோ ரின் அன்பு மாமனாரும் மதுமிதா, மானசா, விக்ரம், ஹர்சிகா, ஹன்சிகா, லஹரிகா, ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 - 20.30 மணியளவில் Manorpark cemetory and crematorium, Sebert Road, Forest Gate, London E7 ONP மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: பிள்ளைகள்.**
**44 2036740919, 44 7960143846**

## வீடு வாடகைக்கு

நல்லூர் குறுக்கு வீதியில்
மாநகரசபைக்கு மிக
அண்மையில் வாகனத்
தரிப்பிடத்துடன் ஐந்து அறைகள்,
ஹோல் என்பவற்றுடன் கூடிய
வீடு வாடகைக்குண்டு.

***அலுவலகப் பயன்பாட்டிற்கு உகந்தது***

**071 815 1719**

## Vacancies

**01. Civil Engineer**
**02. Quantity Surveyor**
➢ NVQ Level 5 or Equivalent with minimum three years experience
**03. Technical Officer** (two years experience with preparing BOQ & Bills)
E-mail: **bestbuilders9@hotmail.com**
Contact: **077 724 5399**

## விண்ணக வாழ்வின் 29 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணுலகில் 30 . 12 . 1930

விண்ணுலகில் 22 . 02 . 2019

அமரர்

### நடராசா ஞானம்மா ராசமணி

கடந்த 22.02.2019 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப தலைவி அமரர் நடராசா ஞானம்மா ராசமணி அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (22.03.2019) வெள்ளிக்கிழமை மு.ப 11.30 மணிக்கு கொழும்புத்துறை பரிசுத்த செபமாலை அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் கலந்துகொண்டு செபிக்கவும் அதனைத்தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**27/1 ஆனந்தன் வடலி வீதி**
**கொழும்புத்துறை,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**
**077 880 5830**

# மரண அறிவித்தல்

## நாகமணி விசாலாட்சி


தோற்றம் 16.02.1927 மறைவு 21.03.2019

அளவெட்டி மாரிட்டியை பிறப்பிடமாக வும் மல்லாகம் நரியிட்டானை வசிப்பிடமா கவும் தற்பொழுது மானிப்பாய் லோட்டன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி விசாலாட்சி நேற்று (21.03.2019) வியாழக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர் களான ஆறுமுகம் - ஆச்சிமுத்து தம்பதிய ரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகமணியின் அன்பு மனைவியும், இராமச்சந்திரன், பாலச்சந்திரன் ஆகியோ ரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற கலாநிதி, குணபூபதி ஆகியோரின் அன்பு மாமியும், கிருஸ்ணவதனி, கிசாந்தன், கர்சிகா, அனுசாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தி யும், கினிசன், கிரிசன், கிசாயினி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2019) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு லோட்டன் வீதி, மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**லோட்டன் வீதி, மானிப்பாய்.**

**தகவல் குடும்பத்தினர்.**

**077 724 0488**

## ஒரு...

சாளர் சோ.சுகிர்தன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்த அமர்விலேயே மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் பல்வேறு தேவைகளுக்காக காணிகள் சுவீகரிப்பு இடம்பெற்றது. போராட்டங்கள் மூலம் காணிகள் மீட்கப்பட்டன. ஆனாலும் முழுமையாக காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. மக்கள் உடனடியாகக் குடியேறும் அளவுக்கு நிலமைகள் இல்லை. மீண்டும் காணி சுவீகரிப்புக்கான வேலைகள் நடைபெறுகிறன. மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இது தொடர்பில் பிரதேச செயலர், மாவட்டச் செயலர் ஊடாக அரச தலைவரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்று தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஓ.5,7,26)

## காணி...

யீடு செய்ததைத் தொடர்ந்து இன்று முன்னெடுக்கப்பட இருந்த காணி சுவீகரிப்பு நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

காணி சுவீகரிப்பு நடவடிக்கையை நிரந்தரமாகக் கைவிடுவதா, அல்லது மாற்று வழிகளை முன்னெடுப்பதா என்பது தொடர்பில் காணி அமைச்சில் இன்று இடம்பெறும் அவசரக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்படவுள்ளதாக அறிய முடிகின்றது.

(ஓ.5)


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம்,
12.07.1985 பரணி நட்சத்திரம்,
கி.பா 22, சூரி. செ.6 இல்
குற்றமில்லை. சொந்த நிறுவனம்
நடத்தும் மணமகனுக்கு
மணமகள் தேவை.

**குறிப்பு:-** சூரி.செ. உள்ள ஜாதகம் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**077 316 4769, 077 197 1667**

(JN/6024)(11)

## HOMEOPATHIC வைத்தியசேவை

**I.A.S வைத்திய சேவை நிலையம், A9 வீதி, பரந்தன் சந்தி கூட்டுறவுச் சங்க வளாகத்தில் நாளை (23.03.2019)** சனிக்கிழமை நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், ஆஸ்துமா உட்பட 19 நோய்களை முற்றாகவே மாற்றிக் கடந்த 37 வருட அனுபவம் வாய்ந்த வைத்தியசேவை நடைபெறும்.

**பதிவுக்கும் முற்பதிவுக்கும்**
**077 444 1082**

**13.04.2019 அன்று நடைபெறவிருக்கும் யாழ்.வைத்தியசேவை சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 18.04.2019 வியாழக்கிழமை நடைபெறும்.**

**077 908 8991** (AVA/580)(11)








## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 561
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.03.21

இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 54,135,480/-

வெற்றி இலக்கங்கள்
14 24 30 53 M

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AKoti என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
| --- | --- | --- |
| 21.03.2019 | 2482 | கபிலம் |

சிம்மம்

வெற்றி இலக்கங்கள்
03 15 42 59

வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2, 135, 218/=

22.03.2019ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | சீட்டிழுப்பு திகதி |
| --- | --- |
| 1554 | 21.03.2019 |

வெற்றி இலக்கங்கள்
01 46 54 58 Y

அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ 28, 323, 452/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
மஞ்சள் நிற டிக்கெட்டுக்கள் 2019.03.25 திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


## நல்லூர் பிரதேசசபை
## பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

**இடம்** :- தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேசசபை 14/5,கருவப்புலம் வீதி,கொக்குவில்.

**காலம்** :- 28.03.2019 (வியாழக்கிழமை)

**நேரம்** :- மு.ப. 9.00

**ஏலப்பொருட்கள்** :- கூரைத் தகரம், கூரைசீற், கூரை ஓடுகள், பழைய பனை மரங்கள்,தீராந்திகள், ஜன்னல்கள்,கதவுநிலைகள், இரும்புக் கம்பிகள்,பாவித்தரயர்,பலகைத்துண்டுகள், இரும்புப் பைப்புகள்,தகரப் பீலிகள்,தகரங்கள்,கொங்கிறீட் தூண்.

ஆர்வமுள்ளோர் ஏலப்பொருள்களை அலுவலக நாள்களில் 27.03.2019 வரைமு.ப 9.00 – பி.ப 3.00 மணிவரையும் பார்வையிடலாம் என்பதுடன், விண்ணப்பப்படிவம் ரூபா.100.00 (வரிகள் நீங்கலாக), மீளப்பெறக் கூடிய பாதுகாப்புவைப்புப் பணம் ரூபா.1,000.00 (வரிகள் நீங்கலாக) செலுத்தி,ஏலத்தில் கலந்துகொள்ளலாம் என்பதுடன், சித்திபெறுவோர் அதற்கான பெறுமதியினைச் செலுத்திஅன்றையதினம் மாலை 3.00 மணிக்கு முன்பாகப் பொருள்களை அப்புறப்படுத்தவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு.தா.தியாகமூர்த்தி**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**
**22.03.2019**

## கண்ணீர் அஞ்சலி



எமது
யா/ சுதுமலை வடக்கு தமிழ் கலவன்
வித்தியாலய அதிபர்
**சுப்பிரமணியம் துரைரத்தினம்**
அவர்களின் அன்புச் சகோதரி
**திருமதி சறோஜினி சிவானந்தன்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**பாடசாலைச் சமூகம்,**
**யா/ சுதுமலை வடக்கு, த. க. வித்தியாலயம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
**திருமதி வசந்தா ஸ்ரீஈஸ்வரன்** அவர்களின்
பாசமிகு தந்தை
**சீராளர் சிவலிங்கம்**
*(ஓய்வுபெற்ற பொலிஸ் சாஜன்ட், மேஜர்)*
அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயருறுகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

ஆசிரியர் கழகம்
**யா/ஸ்ரீ சோமஸ்கந்தா இந்து ஆரம்பப் பாடசாலை - புத்தூர்**


Colombo City Centre வழங்கும்
"கொழும்பில் சித்திரைக் கொண்டாட்டம்"
தமிழ் - சிங்களப் புத்தாண்டு கோலாகல நிகழ்வுகள்.



Colombo City Centre இன் சர்வதேசத் தரத்திலான அதிசொகுசு கடைத்தொகுதிகள் திறந்து வைக்கப்பட்ட பின்னர், வரும் முதலாவது தமிழ் மற்றும் சிங்களப் புத்தாண்டை மிகவும் கோலாகலமான முறையில் கொண்டாடவும், பல்வேறு சலுகைகளுடன் பல கொடுப்பனவுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கவும், வேடிக்கை, வினோதம் நிறம்பிய பல்வேறு நிகழ்சிகளை Colombo City Centre ஏற்பாடு செய்துள்ளது.

Colombo City Centre வளாகத்தில் நமது கலாசார விழுமியங்களை உள்ளடக்கிய நவீன பாணியிலான தமிழ் சிங்களப் புத்தாண்டு கிராமம் ஒன்று உருவாக்கப்பட்டு, இதில் புதுவருடத்திற்கே உரித்தான இனிப்புப் பண்டங்கள் மற்றும் உணவு வகைகளை உள்ளடக்கிய உணவகமொன்றும், கிராமிய ஆராச்சி ஒருவரின் பிரசன்னமும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. சித்திரைப் புத்தாண்டு காலங்களில் மிகவும் பிரசித்தமான ரப்பன் பாடல்ளை நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஆக்கபூர்வமான முறையில் டிஜிட்டல் முறையில் திரையில் இசைத்து பாடும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதோடு, இது குழந்தைகளுக்கான ஒரு விளையாட்டு போட்டியாகும். மேலும், LED திரையினுடாக கண்கட்டி முட்டியுடைத்தல், கயிறிழுத்தல், தலையணைச் சமர் உள்ளிட்ட பல்வேறு பாரம்பரிய புத்தாண்டு விளையாட்டுக்களை நவீன முறையில் விளையாடும் வாய்ப்பு உள்ளதோடு, மேலும் ரூ. 10,000/- இற்கும் அதிகமான தொகையில் பொருள்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள் மற்றும் வவுச்சர்கள் இலவசமாக வழங்கப்படும். தெரிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு சிங்கப்பூருக்கான இலவச விமானடிக்கெட்டுகள் அன்பளிப்பாக வழங்கப்படும்.

Colombo City Centre புதுவருட குமாரன் மற்றும் குமாரியை தேர்ந்தெடுக்கும் போட்டிகள் இங்கு இடம்பெறுவதோடு, இதில் பங்கேற்கும் ஆர்வத்தைக் கொண்டுள்ள இளைஞர் மற்றும் யுவதிகள் Colombo City Centre Facebook பக்கத்திற்கு பிரவேசித்து உங்கள் பெயர்களை முன்பதிவு செய்திடவும். இதில் வெற்றிபெறும் குமாரர்கள் மற்றும் குமாரிகளுக்கு Colombo City Centre கடைத் தொகுதிகளில் உள்ள விற்பனை நிலைய அனுசரணையில் பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.

Colombo City Centre கூட்டுத் திட்டமானது, முதலீட்டு வாரியத்தின் அனுமதியைப் பெற்றுள்ள இலங்கையின் முதலாவது கூட்டுத்திட்டமாகும். 180 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் உருவாக்கப்பட்டுவரும் இந்த கூட்டுத்திட்டத்தை அபான்ஸ் நிறுவனம் மற்றும் சிங்கப்பூரின் Next Story Group ஆகிய நிறுவனங்கள் கூட்டிணைந்து உருவாக்கி வருகின்றன. அண்மைக் காலமாக இலங்கையில் உருவாக்கப்பட்டுவரும் பிரம்மாண்ட முதலீட்டுத் திட்டமான இது 47 அடுக்கு மாடிகளுடன் கொழும்பின் மையப் பகுதியில் மிகவும் பிரம்மாண்டமாக அமைந்துள்ளது. புகழ்பெற்ற வணிக இதழான AsiaOne Magazine இனால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிய விருதுகள்' மற்றும் தலைமைத்துவ விருது வழங்கும் விழாவில் 'ஆசியாவின் மிகச் சிறந்த விற்பனை நாமம்" மற்றும் "வருடத்தின் மிகச்சிறந்த கூட்டுத்திட்டம்" என்ற விருதினையும், கோல்டன் குளோப் டைகர்ஸ் Brand Excellence விருதினையும், சிறப்பம்சங்களுக்காக சிங்கப்பூரில் இடம்பெற்ற CMO ஆசிய விருது வழங்கும் விழாவில் உயர் மதிப்புமிக்க நாளைய எதிர்ப்பார்ப்பிற்கான கூட்டுத் திட்டத்திற்கான விருதினையும் Colombo City Centre தனதாக்கிக் கொண்டது. உலகின் தலைசிறந்த நகரங்களில் காணக் கூடிய சௌகரியத்தையும், சொகுசையும் இலங்கையின் தலைநகருக்கு Colombo City Centre தந்திடும் என்பதனை மிகவும் உறுதியாக சொல்ல முடியும்.

துரித கதியில் அசுர வளர்ச்சியை காணும் கொழும்பு நகரத்தின் அதிசொகுசு வாழ்க்கை முறையின் கேந்திர நிலையமாக விழங்கும் Colombo City Centre இல் பல்வேறு சர்வதேச விற்பனை நாமங்களின் கீழ் பன்முகசேவைகள் பலமேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உலகின் முன்னணி விற்பனை நாமங்களை உள்ளடக்கிய விற்பனை நிலையங்கள், 700 இருக்கைகளைக் கொண்டுள்ள சர்வதேச தரத்திலான உணவகம், பிரம்மாண்டமான 6 திரைகளைக் கொண்ட அதிசொகுசு திரையரங்கம், 164 அதிசொகுசு அறைகளை உள்ளடக்கிய Next ஹோட்டல் மற்றும் 194 அதிசொகுசு மாடிக் குடியிருப்புகளை கொண்டுள்ளதால் Colombo City Centre என்றும் தனித்துவமாக காணப்படுகின்றது. மனம் கவரும் பேய்ரே ஏரியின் தோற்றமும், தொலைதூர இந்து சமுத்திரத்தின் அழகும் Colombo City Centre யை மேலும் மெருகேற்றுகிறது.


## ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்
### வலிகாமம் தெற்கு பிரதேசசபை
### உப அலுவலகம், ஏழாலை
### வட்டாரம் - 15, மல்லாகம் புன்னாலைக்கட்டுவன் வீதி.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத்துக்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் வடக்கு என்னும் முகவரியில் வட்டாரம் - 15,மல்லாகம் புன்னாலைக்கட்டுவன் வீதியில் ஆதன இலக்கம் 393 இல் உள்ள ஆதனமானது எமது ஆதனவரிப் பதிவேட்டில் P.செல்லையா என்னும் பெயரில் உள்ளது.

வடக்கு மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்று புன்னாலைக்கட்டுவன் இறை கிராம சேவகர் பிரிவு J/ 208, புன்னாலைக்கட்டுவன் வடக்கு என்னும் முகவரியில் உள்ள **"கிளுவையவத்தை"** நில.பர. 12 இதில் சொரியலாய் நில.பர 4.½ உம் நெடுங்கால ஆட்சிப்படியும் மறுபங்காளரின் சம்மதத்துடனும் வடக்குப் பக்கமாக நிந்தமாக்கப்பட்ட பாகம் நில.பர 4½ இதற்கு எல்லைகள் கிழக்கு துரைசிங்கம் ஜெயக்குமாரின் ஆதனம் வடக்கு சொர்ணலிங்கம் மனைவி இராசம்மாவின் ஆதனம், மேற்கு சின்னத்தம்பி நடராசாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு மேற்குறித்த முதலாம் ஆதனம் இதடங்கலும் இன்னும் வடமேற்கு மூலையில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் எனக்குறிப்பிடப்பட்ட ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு கதிரேசு சிவசுப்பிரமணியம் அவர்களால் 2018.01.04 ஆம் திகதி எழுதப்பட்ட 11466 ஆம் இலக்க உறுதியின் இரண்டாவது ஆதன அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஆதனம் தியாகராசா மன்மதகுமார் என்பவரை வந்தடைந்துள்ளது. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.கமலசேகரம் அவர்களால் தயாரிக்கப்பட்ட 4026 ஆம் இலக்க 2018.10.16 ஆம் திகதிய நில அளவை வரைபடத்தின்படி துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்ட நிலப்பரப்பு 03 குழி 16.40 அளவுடையதாகக் காணப்படுகின்றது. குறித்த ஆதனத்தினைப் பிரதேச சபையின் ஆதனவரிப் பதிவேடுகளில் தியாகராசா மன்மதகுமார் என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த ஆதனமானது புன்னாலைக்கட்டுவன் தற்சமயம் கனடாவில் வதியும் செல்லையா சிவசுப்பிரமணியம் என்பவரால் தியாகராசா மன்மதகுமார் ஆகியவருக்குப் பிரசித்த நொத்தாரிசு கதிரேசு சிவசுப்பிரமணியம் அவர்களால் 2018.01.04 ஆம் திகதி எழுதப்பட்ட 11466ஆம் இலக்க அறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது. இவ் உறுதியின் இரண்டாவது ஆதன அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஆதனத்தில் இவ்வாதனம் எனது காலஞ்சென்ற பேரன் பொன்னையாவின் சொந்தமும் அவர்வழியில் அவரது ஒரே வாரிசான எனக்கு வந்தடைந்த முதுசமும் நீண்டகால ஆட்சியுமானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாதனத்தில் முற்பட்ட உறுதி இலக்கம் மற்றும் விவரங்கள் குறிப்பிடப்படவில்லை. மேலும் குறித்த உறுதியின் 2ஆம் ஆதனத்துக்குரிய வரலாற்றுத்தாள் (தோம்பு), முற்பட்ட உறுதிகள் எதுவும் பெறமுடியவில்லை என குறித்த ஆதன உரிமையாளரால் அற்றோனித்தத்துவம் வழங்கப்பட்ட அற்றோனித்தத்துவக்காரர் முத்துமாரன் தியாகராசா அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்குறித்த ஆதனத்தினை தற்போதைய உரிமையாளர் **தியாகராசா மன்மதகுமார்** என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் **இன்றிலிருந்து 30 நாள்களுக்குள் தகுந்த ஆதாரங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **தியாகராசா மன்மதகுமார்** என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேசசபை எந்தவகையிலும் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

(CS/24160)(11,17)

## தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

### B.A. தமிழியல் (Tamilology) சிறப்புப் பட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

- க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தி (பழைய பாடத்திட்டமாயின் 4 பாடங்கள்)
- உயர்தரத்தில் எந்தப் பிரிவில் பயின்றவர்களும் பட்டப்படிப்பைத் தொடரமுடியும்.
- இலங்கை மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) அங்கீகாரம் பெற்றது.
- கல்வியாண்டில் 50 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
- நேர்முகத் தேர்வின் மூலமே மாணவர்கள் இணைத்துக் கொள்ளப் படுவர்.
- 2019 கல்வியாண்டுக்கான விரிவுரைகள் ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகும்.

பதிவுகளை மேற்கொள்ளும் இறுதித் திகதி 22.04.2019 வரை மட்டும்.

தொடர்புகளுக்கு,
077 805 1173,
070 305 1173

தமிழ் இணையக் கல்விக்கழகம்,
பாரதி இன்ஸ்ரிரியூட்,
காளிகோவில் வீதி, மீசாலை மேற்கு, மீசாலை, சாவகச்சேரி


## மனிதப்...

புதைகுழி தொடர்பான கார்பன் பரிசோதனை அறிக்கை வெளியாகியபின்னர் கடந்த 8ஆம் திகதி மன்னார் புதைகுழி அகழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டன. அதன் பின்னர் கடந்த 9ஆம் திகதி முதல் நேற்று வரை அகழ்வுப் பணிகள் இடம்பெறவில்லை. இந்த நிலையில் இன்று வெள்ளிக்கிழமை மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா தலைமையில் கூட்டமொன்று இடம்பெறவுள்ளது. குறித்த கூட்டத்தின் பின்னரேயே குறித்த மனிதப் புதைகுழியை தொடர்சியாக அகழ்வு செய்வதா? அல்லது மனிதப் புதைகுழி அகழ்வுப் பணியை முடிவுறுத்துவதா? என்பது தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

மன்னார் நீதிமன்ற வளாகத்தில் இன்று மாலை குறித்த கூட்டம் இடம்பெறவுள்ளது. அதே நேரத்தில் குறித்த கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மன்னார் மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம், சம்மந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக்காக வாதிடும் சட்டத்தரணிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக பிரதிநிதிகளும் இன்றையதினம் இடம்பெறும் கூட்டத்துக்குச் சமூகமளிக்கவுள்ளனர்.

இதுவரை மன்னார் மனிதப் புதைக்குழி அகழ்வுப் பணிகளின் போது 336 முழு மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அதில் 316 என்புகள் அப்புறப்படுத்தப்பட்ட நிலையில் மன்னார் மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-56)


## திருத்தி வாசிக்கவும்

20.03.2019 பத்திரிகையில் பிரசுரமான
இவ் அறிவித்தலை திருத்தி வாசிக்கவும்

வலி.கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - நீர்வேலி
கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்
கிளைப்பொதுச் சபைக்கூட்டங்கள் தொடர்பான விவரம் (24.03.2019)

| கிளை இல. | கிளையின் பெயர் | நேரம் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்களின் விவரம் | உத்தியோகத்தர் பெயர் |
|---|---|---|---|---|
| 02 | அச்செழு வடக்கு | மு.ப. 10.00 மணி | அச்செழு M.M.T.M. பாடசாலை | திரு. ச.சுவர்ணன் |
| 04 | நீர்வேலி விக்கினேஸ்வரா | மு.ப. 10.00 மணி | R.C. தமிழ் கலவன் பாடசாலை, நீர்வேலி வடக்கு. | திரு. க.பிரதீபன் |
| 18 | கோப்பாய் மத்தி | மு.ப. 10.00 மணி | றோமன் கத்தோலிக்க பாடசாலை, வேதக் கோவிலடி, கோப்பாய் தெற்கு. | திரு. தா.தவமன்னன் |
| 27 | உரு. சிவன் வீதி | மு.ப. 10.00 மணி | றோமன் கத்தோலிக்க பாடசாலை, வேதக் கோவிலடி, உரும்பிராய். | திரு. இ.உதயகுமார் |
| 29 | உரும்பிராய் வடக்கு | மு.ப. 10.00 மணி | சரஸ்வதி சனசமூக நிலையம், உரும்பிராய் வடக்கு | திரு. இ.கஜேந்திரன் |


கூ.ஆ.உ.ஆணையாளர் பணிமனை,
857, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
12.03.2019

ஒப்பம் : செல்வி பரீன் ஹஸ்ஸான அப்துல் சமியூ
கூ.அ.உ. ஆணையாளர்,
யாழ்.மாவட்டம்.


## மரண அறிவித்தல்கள்

### சீராளன் சிவலிங்கம்

(ஓய்வுநிலை பொலிஸ் சார்ஜன் மேஜர்)



பிறப்பு 06.03.1937 இறப்பு 21.03.2019

அண்ணா வீதி அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சீராளன் சிவலிங்கம் நேற்று (21.03.2019) வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற சீராளன் நாகம்மா - தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - இலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும் பவளத்தின் பாசமிகு கணவரும் காலஞ் சென்ற குலசிங்கம், சித்திரவடிவேல் சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர்) மற்றும் இராமசாமி (சமாதான நீதவான்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் லதா (முகவர், இலங்கைக்காப்புறுதிக்கூட்டுத்தாபனம்), வசந்தா (ஆசிரியை, யா/ புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா இந்து ஆரம்பப்பாடசாலை), சிவாகரன் (சாரதி, இ.போ.ச பருத்தித்துறை), பத்மா (பதில் அதிபர், யா/ குட்டிப்புலம் அ.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவிச்சந்திரன் (அதிபர், யா/ நீர்வேலி அத்தியர் இந்துக்கல்லூரி), ஸ்ரீ ஈஸ்வரன் (சாரதி இ.போ.ச கிளிநொச்சி) யசோதா (யா/வட இந்து மகளிர்கல்லூரி) என்ஸிலிருக்மன் (பாடசாலை பணிப்பாளர், யா/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக்கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சர்மினி (பெறியியல் பீடம் 2 ம் வருடம், மொறட்டுவ), மயூரன் (யா/ இந்துக்கல்லூரி), சஜீபா (யா/இந்துமகளிர் கல்லூரி), விதுஷன் (யா/ ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்), றெனால்ட் (யா /இந்துக்கல்லூரி), சதுஸ்ரன் (யா/இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2019) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அண்ணா வீதி,
அச்சுவேலி தெற்கு , அச்சுவேலி

தகவல்: குடும்பத்தினர்.

## நினைவேந்தல் நிகழ்வு



### சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்

இடம்:- துர்க்காதேவி மணிமண்டபம், நல்லூர்
காலம்:- 24.03.2019, ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- காலை 9 மணிமுதல்

நிகழ்ச்சி நிரல்

- காலை 9.00– 9.20
  - மங்கல விளக்கேற்றல்
  - அக வணக்கம்
  - இறை வணக்கம்
- காலை 9.20 – 10.00
  - நினைவுரைகள்
- காலை 10.00 – 11.00
  - "பண்ணிசை மாலை"
- மு.ப. 11.00 – மதியம் 12.00
  - "சிவத்தமிழ் வித்தகம்" நூல் வெளியீடு
- மதியம் 12.00
  - நன்றியுரை
  - மதிய உபசாரம்

இதனைத்தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்
தங்கள் நல்வரவை நாடும்

"சிவசோதி", பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்.
021 221 2226

### சிவலிங்கம் வேதாரணியம்

(பெரியண்ணா)

YOHAS லொறி உரிமையாளர்



யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவலிங்கம் வேதாரணியம் நேற்று (21.03.2019) வியாழக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் பொன்மணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவதக்சினி (லண்டன்), சுவேந்திரணி சூட்டி (கனடா), சிவாஜினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பாஸ்கரன் (லண்டன்), பிரபாகரன் (கனடா), ஸ்ரீராஜயோகன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் சுந்தரலிங்கம், சண்முகலிங்கம், நாகேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

557, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: சி.சுந்தரலிங்கம்
(சின்னண்ணா) 021 222 7411

(CS 24175/13/18)







புத்தம்புதிய மிட்சுபிஷி வாகனமொன்றின் உரிமையாளராகும் உங்கள் கனவை நனவாக்குங்கள்
தற்போது நீங்கள் பாவிக்கும் வாகனத்தை எம்மிடம் ஒப்படைத்து,
உங்கள் புதிய மிட்சுபிஷி வாகனம் ஒன்றை எடுத்து செல்லுங்கள்.

MITSUBISHI MOTORS
Drive your Ambition

- உடனடி விலை மதிப்பீடு
- விசேட லீசிங் வசதிகள்
- டெஸ்ட் டிரைவ்கள்

இடம்: யாழ்ப்பாண காட்சியறை
திகதிகள்: 2019 மார்ச் 22 மற்றும் 23
நேரம்: மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை

**ECLIPSE CROSS** 1.5L Turbo Charged Engine | 8 Speed Automatic Transmission | Panoramic Sunroof | Roof Spoiler | 7 Airbags | Leather Seats | LED Daytime Running Lamp | 18" Alloy Wheels | Rockford Fosgate Premium Sound System with 9 Speakers & Subwoofer

**XPANDER** 1.5L MIVEC DOHC | 4 Speed Automatic Transmission (Front Wheel Drive) | Active Stability & Traction Control | Hill Start Assist | 16" Alloy Wheels | Front & Rear Air Conditioning | Black Leather Seats (7 Seater) | Steering Mounted Audio Control with Bluetooth Telephony Connectivity | Cruise Control

* Conditions Apply

United Motors Lanka PLC
Hotline: 0773 325 521

100, Hyde Park Corner, Colombo 2. | E-mail: info@unitedmotors.lk | Web: www.unitedmotors.lk

மக்களின் சக்தியே
எழுச்சி

# ஸ்ரீ லங்கா சுதந்திர தமிழர் ஒன்றிய

# மாநாடு - 2019

**இடம் : ஸ்ரீ லக்சுமி பிளாசா**
**(தட்டாதெரு சந்தி அருகில்)**

**காலம் : 23.03.2019**
**(சனிக்கிழமை)**

**நேரம் : காலை 10.00 மணி**



**அங்கஜன் இராமநாதன்**
பாராளுமன்ற உறுப்பினர், ஸ்ரீ லங்கா சுதந்திர தமிழர் ஒன்றிய தலைவர்
SLFP மாவட்டத் தலைவர் யாழ் - கிளிநொச்சி

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இனியாவது விழிப்பு வருமா?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் கொழும்பு அரசுக்குப் பல பரிந்துரைகளை முன்வைத்தது . அவற்றில் உருப்படியான ஒன்றாகப் பார்க்கப்பட்டது போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளுக்காக பன்னாட்டு நீதிபதிகள், வழக்குரைஞர்கள், வழக்குத் தொடுநர்களையும் உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றம் ஒன்றை அமைப்பதற்கான பரிந்துரைதான்.

போர்க்குற்றங்கள் எனப்படும், இறுதிப் போரில் நடந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் பன்னாட்டுக் குற்றவியல் விசாரணை ஒன்றே தேவை என்று தமிழ் மக்கள் வலியுறுத்தி வந்த நிலையிலும் அத்தகையதொரு விசாரணையை நடத்துவதற்குக் கொழும்பு அரசு முற்றாக மறுத்து வந்த நிலையிலும் இந்தக் கலப்பு நீதிமன்றப் பொறிமுறை பரிந்துரைக்கப்பட்டது.

கொழும்பு அரசின் பங்களிப்புடனான எந்தவொரு நீதி விசாரணையும் நீதியானதாகவும் சுயாதீனமானதாகவும் இருக்காது என்கிற நம்பிக்கை காரணமாக இந்தக் கலப்பு நீதி விசாரணையையும் தமிழ் மக்கள் எதிர்த்து வந்தனர். ஆனால் பன்னாட்டு அரசியல் அழுத்தத்தில் இருந்து தப்புவதற்காக இந்தக் கலப்பு நீதிமன்ற விசாரணையைக் கொழும்பு ஏற்றுக்கொண்டாலும், அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன அதனை உடனடியாகவே நிராகரித்தார். அதற்குப் பதிலீடாக உள்நாட்டு விசாரணை ஒன்றே முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிணக்கு வந்தபோது அரசதலைவரே இந்த விடயத்தில் எதிர்ப்பாக இருக்கிறார் என்றும் ரணில் தலைமையிலான அரசு இதற்குச் சாதகமாகவே இருக்கின்றது என்றும் சொல்லப்பட்டது. ஆனால், சிறிது காலத்திலேயே இத்தகைய ஒரு பொறிமுறை இலங்கை போன்ற நாடுகளுக்குச் சாத்தியமற்றது என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் வெளிப்படையாகக் கூறிவிட்டு பொறுப்புக்கூற வேண்டிய தனது கடப்பாட்டில் இருந்து மெல்ல நழுவிக் கொண்டார்.

அப்படியிருந்தபோதும் ஐ.நா. தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியது கொழும்பு அரசின் கடமை என்று கூறிக்கொண்டே, ரணில் அரசின் ஆட்சிக் காலம் முழுவதும் அதற்கு முண்டு கொடுத்துக் கொண்டே இருந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இப்போதும் கூட்டமைப்பின் முண்டிலேயே ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தனது ஆதரவை விலக்கிக் கொண்டால் உடனடியாகவே ஒரு பொதுத் தேர்தலை நாடு எதிர்கொண்டாக வேண்டும். அத்தகைய ஒரு பேரம் பேசும் சக்தியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கொண்டிருந்தபோதும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நேற்றுமுன்தினம் பேசிய கொழும்பு அரசின் பிரதிநிதியான அயலுறவு அமைச்சர் மாரப்பன, கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை நடைமுறைப்படுத்த முடியாது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்.

அரசதலைவருக்கும் ரணில் தலைமையிலான ஆட்சிக்கும் இடையில் காணப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த முடிவு ஐ.நாவில் அறிவிக்கப்பட்டது. அதாவது இந்த விடயத்தில் இதுவரையில் கூறப்பட்டு வந்ததைப் போல அரச தலைவர் மட்டுமே எதிரானவர் அல்லர், ரணிலும் அவரது ஆட்சியாளர்களும் அவருடன் ஒத்துப் போகின்றவர்களே என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஐ.நா. தீர்மானத்தில் இருந்த உருப்படியான ஒரு பரிந்துரையையும் ஏற்க முடியாது என்று ஆட்சியாளர்கள் வெளியப்படையாக அறிவித்துவிட்ட பின்னரும் இந்த ஆட்சிக்கு முண்டு கொடுத்து நிற்க வைத்திருப்பதற்கான காரணம் என்ன என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்படித் தெளிவுபடுத்தப் போகின்றது? கூட்டமைப்பின் கையறு நிலையை நன்கு புரிந்து வைத்திருப்பதாலும் தம்மைவிட்டு எத்தகைய நிலையிலும் கூட்டமைப்பு வெளியேறிச் செல்லாது என்று நம்புவதாலுமே தெற்கின் ஆட்சியாளர்கள் இவ்வாறு நடந்துகொள்கிறார்கள். கூட்டமைப்பு இனியாவது விழித்துக்கொள்ளுமா?



# தமிழர்கள் ஐக்கியப்படாத வரையில் எதையுமே சாதிப்பதற்கு முடியாது!

இந்துமதி

தமிழ்த்தேசியப் பேரியக்கமொன்றை அமைப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக நாடு கடந்த தமிழீழ அரசின் தலைமை அமைச்சரான ருத்ர குமாரன் குறிப்பிட்டுள்ளமை தமிழர் அரசியலில் முக்கியத்துவம் பெறுகின்றது.

தமிழர்கள் ஒற்றுமையாக வாழ்ந்ததாகச் சரித்திரமே கிடையாது. இதை இந்த இனத்தின் சாபக்கேடு என்றுதான் கூற வேண்டும். அன்று சேர, சோழ, பாண்டியர்களெனப் பிரிந்து தனி அரசுகளை அமைந்துக் கொண்டு இந்தியாவில் வாழ்ந்த தமிழர்கள் அடிக்கடி தமக்குள் சண்டையிட்டுக் கொண்டனர். இவர்கள் ஒருவரையொருவர் பரம எதிரிகளாகவே கருதினார்கள். இதனால் ஒற்றுமையை இவர்களிடத்தில் காண முடியவில்லை.



எமது நாட்டில் தமிழர்கள் வடக்கிலும், கிழக்கிலும் மட்டுமல்லாது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்கின்றனர். மலையகத்திலும் கூட இந்திய வம்சாவழித் தமிழர்கள் வாழ்கின்றனர். ஆனால் இவர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருப்பதாகக் கூறமுடிய வில்லை. வடக்கையும், கிழக்கையும் தமது தாயக பூமிகளெனச் சொந்தம் கொண்டாடுகின்ற தமிழர்கள் அரசியல் ரீதியில் பல்வேறு பிரிவுகளாகப் பிளவுபட்டு நிற்கின்றனர். விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் கூட ஒற்றுமை உணர்வை இவர்களிடம் காண முடியவில்லை. பதவியையும் வசதியான வாழ்க்கையயும் மட்டுமே மனதில் கொண்டு தமக்குள் போட்டியிடுவதைத் தவிர வேறு எதையும் உருப்படியாகச் செய்து முடிப்பதற்கு இவர்களால் முடியவில்லை.

தமிழ் தனித்துவ அடையாளம்

நாம் அனைவருமே தமிழர்கள். தமிழர் என்பது எமது இனத்தின் அடையாளம். அந்த அடையாளத்தின் கீழ் ஒரேயணியாக நாம் இணைந்து நின்றால் எமது உரிமைகளுக்கான போராட்டம் வெற்றி இலக்கை இலகுவில் அடைந்துவிடும். இதை எம்மவர்கள் ஏனோ சிந்திப்பதில்லை. சிந்திக்கின்ற எண்ணம்கூட அவர்களிடமில்லை. இந்த நிலையில் எந்தத் தீர்வையும் இவர்களால் எட்டிக்கூடப் பார்க்க முடியாது. ஏற்கனவே உள்ள அரசியல் கட்சிகள் யாவும் ஒன்றிணைந்து செயற்படவேண்டிய சூழ்நிலை இந்த நாட்டில் உருவாகியுள்ளது. இனவாதிகள் தமிழர்களின் பலவீனத்தை நன்கு புரிந்து கொண்டதால் தமிழர்களுக்கு எதையுமே வழங்காது ஏமாற்றுவதில் ஈடுபடுகின்றனர். ஆனால் புதிய அரசியல் கட்சிகளை அமைப்பதிலேயே தமிழர்கள் தமது முழுக்கவனத்தையும் செலுத்தி வருகின்றனர்.

முன்னாள் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூட்டமைப்பிலிருந்து விலகிச்சென்று புதிய கட்சியொன்றை அமைந்துவிட்டு அதை மக்களிடம் அறிமுகம் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றார். வடக்கில் மட்டுமல்லாது கிழக்கிலும் தமது அரசியல் எல்லைகளை பரவலாக்குவதே இவரது நோக்கமாக வுள்ளது. தமது நடவடிக்கைகள் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தி விடுமா? என்பது தொடர்பில் இவர் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. ஆனால் இதன் பின்விளைவுகள் தமிழர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடுமென்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழர்கள் அரசியல் ரீதியாகப் பிரிந்துநிற்கும்போது பேரினவாதக் கட்சிகளே நன்மையீட்டப்போகின்றன. கடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் இதைத் தெளிவாக எடுத்துக்காட்டிவிட்டன. இதன் பின்னராவது தமிழ் அரசியல் வாதிகள் விழிப்படைந்திருக்க வேண்டும். ஆனால் அதைக் காண முடியவில்லை. இனி மேல் இடம்பெறப்போகும் தேர்தல்கள் பேரினவாதிகளுக்கே வாய்ப்பாக அமைந்துவிடப்போகின்றன.

தமிழ்த் தேசியப் பேரியக்கம் தொடர்பாகவும் தாயகத்தில் தனியரசு அமைய வேண்டுமெனவும் கூறிவரும் புலம்பெயர்ந்து வாழுகின்ற உறவுகள் முதலில் தமது தாயகத்தில் வாழ்கின்ற தமிழர்களை ஒற்றுமைப்படுத்துவதில் தமது கவனத்தைத் திருப்பவேண்டும். அரசியல் ரீதியாக அவர்களை ஒன்றிணைக்கின்ற செயற்பாடுகள் எவையும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை.

தமிழர்கள் இனியொரு ஆயுதப்போராட்டத்தில் ஈடுபடுவர்களென எதிர்பார்க்க முடியவில்லை. மக்களும் இதை ஆதரிப்பார்களென எதிர்பாக்க முடியாது. அந்த அளவுக்குப் போரின் வலிகளை அவர்கள் இன்னமும் சுமந்து கொண்டிருக்கின்றனர். ஆகவே அரசியல் ரீதியில் தமது உரிமைகளுக்காகப் போராடுவதே அவர்களுக்கு உள்ள ஒரே வழியாகும். இதற்கு வழிகாட்டக்கூடிய சிறந்த தலைமையொன்று வேண்டும். அனைத்துத் தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்ளும் வகையிலும் அந்தத் தலைமை அமைந்திருத்தல் வேண்டும். தற்போது அத்தகையதொரு நிலையைக் காண முடியவில்லை.

ஆளுக்கொரு கட்சியும் தலைமையும் என்ற நிலையே காணப்படுகின்றது. இந்த நிலையில் தமிழர்களின் போராட்டங்கள் எவ்வாறு வெற்றிபெற முடியும்?

### ஐ.நா. 40ஆவது கூட்டத்தொடர் இலங்கைக்கு முக்கியமானது

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இந்த ஆண்டுக்கான கூட்டம் இலங்கையைப் பெறுத்த வகையில் முக்கியத்துவம் மிக்கதாக மாறிவிட்டது. பிரிட்டன் தலைமையிலான சில முக்கிய நாடுகள் இலங்கை மீது அழுத்தங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்தியுள்ளன. இலங்கை தொடர்பான தீர்மானயொன்றை நிறைவேற்றி வைப்பதிலும் ஈடுபட்டுள்ளன. இதற்கு இணை அனுசரணை வழங்குவதாக இலங்கையின் சார்பில் தெரிவிக்கப்பட்டபோதிலும் தீர்மானத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் இடம்பெறுவதையும் காண முடிகின்றது.

இதேவேளை மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைக்கப் பாடுபடப் போவதாக பிரிட்டனின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் கண்காணித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தமிழர்கள் அனைவரும் ஒரே தலைமையின் கீழ் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். சம்பந்தனும் சுமந்திரனும் மட்டுமே அனைத்து விடயங்களையும் அவதானித்துக்கொண்




டிருக்க முடியாது. ஏனையவர்களும் அவர்களுக்கு அனுசரணையாகச் செயற்படவேண்டும். இனியாவது தமிழர்கள் அனைவரும் ஒரே அணியில் செயற்படுவதுதான் அவர்களது எதிர்காலத்துக்கு நன்மை பயப்பதாகஇருக்கும்.

# மானிய உருளைக் கிழங்குகள் கறுப்புச் சந்தையில் விற்பனை

## யாழ். மாவட்ட விவசாயிகள் விசனம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாண மாவட்டத்தில் மானிய விலையில் வழங்கப்படும் உருளைக் கிழங்கு சில பயனாளிகளால் அதிக விலைக்கு விற்கப்படுகின்றது. இதனால் எதிர்காலத்தில் உருளைக்கிழங்கு செய்கையில் பாதிப்பு ஏற்படும் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது உருளை கிழங்கு செய்கை வெற்றியளித்துள்ளது. உருளைகிழங்குச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் 50 வீத மானிய அடிப்படையில் விதை கிழங்கு வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வழங்கப்படுகிறது.

50 கிலோ விதை கிழங்கு 16 ஆயிரத்து 200 ரூபாவாக காணப்படுகிறது. ஆகவே மானிய விலையில் 8 ஆயிரத்து 100 ரூபாவுக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. விவசாயி ஒருவருக்கு சுமார் 4 பெட்டி விதை உருளைக் கிழங்கு வழங்கப்பட்டு வருகிறது.

உருளைக் கிழங்குச் செய்கைக்கு விதை உருளைக் கிழங்கு வேண்டும் என்று கேட்டாலும் அதைவிட குறைவான அளவே விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

இதற்கு விதை உருளைக் கிழங்கின் விலை பன்னாட்டுச் சந்தையில் அதிகரிக்கும் மற்றும் சில கிழங்கு வகைநோய் வாய்ப்பட்டமையால் குறிப்பிட்ட அளவே அரசால் விதை கிழங்குக் கொள்வனவுசெய்துவழங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இதனால் விவசாயிகளுக்கும் சற்று குறைவான அளவிலேயே விதை உருளைக் கிழங்கு வழங்கப்பட்டு வருகிறது. இப்படியான நிலையில் வழங்கப்படும் விதை உருளைக்கிழங்கு சிலரால் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. 50 கிலோ 11 ஆயிரம் ரூபா வரைக்கும் விற்பனைசெய்யப்படுகிறது.

இந்த நிலை நீடித்தால் உருளைக் கிழங்கு செய்கையாளர்களின் மானிய விலையைச் சமப்படுத்துவதற்காக வெளிநாட்டு உருளைக் கிழங்கை இறக்குமதி செய்வதைக் கைவிட்டு உள்ளூர் விதை உருளை கிழங்கை விவசாய பிரிவு கொள்வனவு செய்து வழங்க நேரிடும்.

உள்ளூர் கிழங்கு ஏற்றுமதி சற்று குறைவாகக் காணப்படுகிறது. சில பிரதேசத்தின் தண்ணீருக்கு அந்தகிழங்கு அவியாது போன்ற நிலை காணப்படுகிறது.

இதனால் எதிர்காலத்தில் எமது உருளை கிழங்குச் செய்கை பாதிப்படையும். புகையிலைக்கு மாற்றுப்பயிராக உருளைக்கிழங்கை பயிரிடலாம் என்ற நிலை காணப்படுகிறது.

இது தொடர்பில் உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று விவசாயிகள் கோரிக்கைவிடுத்தனர்.

இந்த விடயம் தொடர்பில் மாவட்டச் செயலக விவசாய பிரிவுடன்தொடர்புகொண்டு கேட்ட போது:

மானிய விலையில் வழங்கப்படும் விதை உருளைக் கிழங்கு அதிக விலைக்குச் சிலரால் விற்கப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

விதை உருளைக்கிழங்கு வழங்கப்படும்போது பயிர்ச் செய்கை நிலம் ஒன்றைப் பயனாளி வைத்திருக்க வேண்டும்என்றநிபந்தனை உள்ளது. அதற்கு அமைவாகக் களத் தரிசிப்பு நடைபெற்று நிலம் பார்வையிடப் படுகிறது.

ஆனால் அதன் பின்னர் பயிரிடாமல் அதிகவிலைக்கு விற்கின்றனர் என்று தெரிய வருகிறது.

ஆகவே இது தொடர்பில் மாற்று வழிகள் ஆராயப் பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-7)

## கருத்துப் பகிர்வும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணம் சிந்தனைக் கூடத்தின் ஏற்பாட்டில் கருத்துப் பகிர்வும் கலந்துரையாடலும் சிந்தனைக் கூட கேட்போர் கூடத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 5.30 மணி வரை நடைபெறும். பாதீடு 2019 ஒரு பார்வை என்ற தலைப்பில் இடம்பெறும் நிகழ்வில் வடக்கு, கிழக்கு முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் கலாநிதி. எஸ்.சந்திரசேகரம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

ஆர்வலர்கள் அனைவரையும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பேராசிரியர். இரா. சிவசந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். (ஜ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் வலி.வடக்கு பிரதேசசெயலக பிரிவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் தமை. செல்வராசா, செயலாளர் பொ. கணேஸ்வரலிங்கம், பொருளாளர் வ. மார்கண்டு, உபதலைவர் சு. தளையசிங்கம், உபசெயலாளர் மா. வரராசசிங்கம் ஆகியோருடன் உறுப்பினர்களாக மு.நாராயணர், கு. றஜனி, கணக்காளர் த. சிவயோகி ஆகியோர் தெரிவுசெய்யப் பட்டனர். (ஜ)

## இலவசப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், மார்ச் 22

சண்டிலிப்பாய் பிரதேசசெயலக விதாதாவள நிலையத்தில் இலவச தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சிநெறிகள் இடம்பெறவுள்ளன.

விஞ்ஞான தொழில்நுட்பவியல் மற்றும் ஆராச்சி அமைச்சால் எல்.ஈ.டி மின்குமிழ், எல்.ஈ.டி பனல், தானியங்கி பாதுகாப்பு முறைமை, மறைகாணி பொருத்துதல், கணினி வரைவியல் மற்றும் கணினி வலையமைப்பு, உணவு உற்பத்தி, கடதாசி வர்ண வேலைப்பாடுகள், பனம் களி உலர்தல் போன்ற பயிற்சி நெறிகள் இடம்பெறவுள்ளன.

ஆர்வமுள்ளவர்கள் பிரதேச விதாதாவள நிலையத்தில் நேரில் வந்து பதிவினை மேற்கொள்ளமுடியும். மேலதிக விவரங்களுக்கு 0772549876, 0779788730 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஜ)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

இலவச மருத்துவ முகாம் யாழ்ப்பாணம் நல்லூர் சங்கிலியன் மன்றக் கட்டடத்தில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதன்போது குருதியில் கொழுப்பு அளவு பரிசோதனை, குருதியில் சர்க்கரை அளவு பரிசோதனை, சிறுநீரில் புரதம் வெளியேறுவதற்கான அளவைப் பரிசோதித்தல், கண்ணில் குறைபாடு உடையோருக்கு பரிசோதித்து இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம் நல்லூர் சங்கிலியன் மன்ற சனசமூக நிலையத்தின் 74 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 15 நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன. அதில் ஓர் அங்கமாக இது இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டது. (ஜ)

## பங்குனித் திங்கள் உற்சவத்தில் திருட்டுச் சம்பவங்கள் குறைவு

சாவகச்சேரி, மார்ச் 22

மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பங்குனித் திங்கள் உற் சவத்தின்போது பெரியளவில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சிறுமி ஒருவரின் சங்கிலி திருடரின் கைவரிசைக்கு இலக்கானது. இந்தச் சங்கிலி சுமார் ஒரு பவுண் நிறை கொண்டது எனவும் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக உற்சவ கால பொலிஸ் பணிமனையில் முறையிடப்பட்டது. கடந்த வருடம் நடைபெற்ற பங்குனித் திங்கள் உற்சவத்தின்போது இந்தக் குழந்தை அணிந்திருந்த காப்பு ஒன்று திருடரின் கைவரிசைக்குள்ளானது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஜ-131)



## குருதிக்கொடை நிகழ்வு

அளவெட்டி, மார்ச் 22

யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் 125ஆவது ஆண்டை முன்னிட்டு குருதிக்கொடை நிகழ்வு பாடசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நிகழ்வில் கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

குருதி சேகரிப்பில் தெல்லிப்பழை மருத்துவமனையினர் ஈடுபட்டனர். (ஜ-63)

## வீதியோரம் குளிர்பானம் விற்பனைசெய்யத் தடை

தென்மராட்சி, மார்ச் 22

வீதியோரங்களில் உள்ளூர் உற்பத்திகளான சர்பத் மற்றும் ஜூஸ் வகைகளை விற்பனை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

தற்போதைய வெயில் காலத்தில் வீதியோரங்களில் செல்வோர் நலன்கருதி பலர் உள்ளூர் தயாரிப்பான சர்பத் மற்றும் ஜூஸ் வகைகளை விற்பனை செய்து வருகின்றனர். இதனால் நோய்கள் பரவக்கூடிய அபாயம் உள்ளதால் அவ்வாறு உள்ளூர் தயாரிப்புகளை வீதியோரங்களில் விற்பனை செய்வதை நிறுத்துமாறும் தவறின் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவித்துள்ளனர். (ஜ-9)

## தேர்த்திருவிழா









யாழ்ப்பாணம் நீர்வேலி வடக்கு அருள்மிகு காளி அம்மன் ஆலயப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை வெகுவிமர்சையாக இடம்பெற்றது. நூற்றுக் கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (ஜ)

# சுகாதாரத்தைப் பேணாதுள்ள நிறுவனங்களுக்கு மூடு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் உள்ள உணவு கையாளும் நிலையங்கள் சுகாதார நியமங்களைப் பின்பற்றிச் செயற்பட வேண்டும். இல்லையேல் அதற்கு மூடு விழா செய்யப்படும் என்று மாநகர முதல்வர் இமானுவல் ஆனல்ட் தெரிவித்தார்.

மாநகர சபையின் முதல்வர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

**திண்மக் கழிவகற்றல்**

யப்பான் தூதரகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு அமைவாக யாழ்ப்பாண மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் செயற்பாட்டுக்கு 4 ரக் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இவை 83 ஆயிரத்து 452 டொலர் பெறுமதியானவை. மீள் திருத்தம் செய்யப்பட்ட வண்டிகளே வழங்கப்பட்டுள்ளன. மாநகரம் தூய நகரமாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் அவற்றைத் தந்துள்ளார்கள். சபை உறுப்பினர்களின் ஆளுமை விருத்தி. வெளி உலகத் தொடர்பாடல் விடயங்களை அவர்கள் செய்து தருவதாக நட்பு ரீதியாகக் கூறி இருந்தார்கள். எதிர் காலத்தில் அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி என்ன அபிவிருத்தி வேலைகளை செய்ய முடியும் என்பது தொடர்பில் ஆராயப்படும் என்றார்.

**மூடு விழா**

மாநகர எல்லைக்குள் உள்ள விடுதிகள், கடைகள், விடுதிகள், உணவகங்கள் முறைப்படி கழிவகற்றல் உள்ளிட்ட சுகாதார விதிகளை உறுதிப்படுத்தி சபையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவித்தல் வழங்கி இருந்தோம். அதில் யாரும் அக்கறை செலுத்தியதாகத் தெரியவில்லை. எதிர்வரும் 31 ஆம் திகதி பின்னர் ஒவ்வொரு வட்டார ரீதியாக எமது அணி முறைப்படி மேற்குறித்த இடங்களை அவதானிக்கும். அதில் கழிவகற்றல் முறை மாநகர சபையின் பொறிமுறைக்கு அமைவாக இருக்க வேண்டும்.

இரவில் பாலங்களின் கீழும், சுடலைகளிலும் மக்கள் நடமாற்றம் குறைந்த இடங்களிலும் அதனை வீசி விட்டு செல்கிறார்கள்.

இவ்வாறு சென்ற கழிவு அகற்றும் பவுசரை நானே துரத்திச் சென்று பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தேன். அது போல எல்லா வண்டிகளுக்கும் நடைபெறும். எமது வண்டிகள் தவிர வேறு வண்டிகள் கழிவகற்றல் சேவையை இவ்வாறு செய்ய முடியாது.

உணவு கையாளும் நிலையங்களும் நூறு வீதம் சுகாதார முறைப்படி இயங்க வேண்டும் என்று நாம் சொல்லவில்லை. அடிப்படை சுகாதார விடயங்களைப் பின்பற்றவேண்டும்என்று கூறுகிறோம்.

தொற்று நோய், தொற்றா நோய் போன்றன ஏற்படாதவாறு மக்களைப் பாதுகாக்க வேண்டும். இவற்றிலிருந்து தவறும் உணவு கையாளும் நிலையங்களுக்கு மூடு விழா நடைபெறும். உரிய சுகாதார விதி முறைகளைப் பின்பற்றினால் மீண்டும் திறக்கலாம். பலசரக்குக் கடைகளில் என்ன பொருள்களை விற்க கூடாது என்ற நியமம் உள்ளதோ அதன்படி வியாபாரிகள் செயற்பட வேண்டும். இல்லையேல் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**கொலை மிரட்டல்**

மார்ச் மாதம் 14 ஆம் திகதி கடிதம் ஒன்று கிடைத்தது. அதில், மூன்று பேருக்குச் சாவுத் தண்டனை உள்ளது. சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் திட்டமிடப்பட்டது. ஆனால் அது தவறி விட்டது. இப்போது உங்களைக் குறி வைத்துள்ளார்கள். நீங்கள் மாறி இருப்பது நல்லது. கம்பன் கழக விழாவுக்குச் செல்ல வேண்டாம். உங்கள் அன்பன் என்று எழுதப்பட்டிருந்தது. மறுநாள் எனது துணைவியாரின் தொலைபேசிக்கு சாவு தயார் என்று குறிப்பிட்ட வைபர் செயலி ஊடாக மிஸ் கோல் வழங்கப் பட்டது. அதன் பின்னர் அந்த இணைப்பு துண்டிக்கப்பட்டு விட்டது. இது தொடர்பில் மூத்த பொலிஸ் அதிகாரியுடன் கலந்துரையாடி முறைபாடு வழங்கினேன். எனக்கு எதிரி என்று யாரும் இல்லை. சமீப காலத்தில் மாநகர எல்லைக்குள் நடைபெறும் அத்து மீறல் செயற்பாடுகளை தடுக்கும் வண்ணம் பல நடவடிக்கைகளை முன்னெடுத்து இருந்தோம். அதன் அச்சுறுத்தலாகக்கூட இது இருக்கலாம். கம்பன் விழா என்று குறிப்பிடப்பட்டதால் அன்றைய நிகழ்வுக்கு பொலிஸ் பாதுகாப்புடன் சென்றிருந்தேன். இப்படியான அச்சுறுத்தல் செயற்பாடுகள் தொடருமானால் பொலிஸ் பாதுகாப்பைப் பெறவும் எண்ணியுள்ளேன் என்றார்.

**கம்பங்கள் நடுகை**

மாநகர சபை எல்லைக்குள் சட்டவிரோத கம்பங்களை, மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின்படி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டோம். நீதி மன்றம் வரை சென்றோம். சட்ட விரோத கம்பங்களை அகற்றும்போது ஏற்படும் பிரச்சினைகளைக் கையாள பொலிஸாரின் ஒத்துழைப்பைக் கேட்டிருந்தோம். பொலிஸார் மறுத்து விட்டனர்.

**தாமதம்**

பொதுப் பிரச்சினைகளைக் கையாள்வதற்குச் சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படினும் உடனடியாகச் செயற்படுத்த முடியாது. சட்ட ஏற்பாடுகளை பின்னரே செய்ய வேண்டும். இந்த விடயத்தில் அரச அதிகாரிகள் மந்த கதியில் செயற்படுகிறார்கள் என்று சபை உறுப்பினர்கள் குற்றம் சாட்டுவதை நான் மறுக்கவில்லை. நடவடிக்கைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இந்த வருடம் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி சபை இயங்கும்.

**விளம்பரங்கள் ஒட்ட முடியாது**

சகல நிறுவனங்களும் தங்களுடைய விளம்பரப் படுத்தல்களுக்காக எந்தஒரு சுவரொட்டியையும் பொது இடங்களின் சுவர்களில், மதில்களில் ஒட்ட முடியாது. இது தொடர்பில் எழுத்து மூலமாக அனைவருக்கும் தெரியப் படுத்தவுள்ளோம்.

விளம்பரப் படுத்தலுக்கு என்று இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. சபையின் அனுமதியுடன் அதனை மேற்கொள்ள முடியும் என்றார். (த-7)





## மாணவர்களின் மாதிரிச் சந்தை

கொடிகாமம், மார்ச் 22

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை மாணவர்களின் மாதிரிச் சந்தை நிகழ்வு வித்தியாலய மண்டபத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் என பெரும்பாலானோர் பார்வையிட்டு பொருள்களை கொள்வனவு செய்து மாணவர்களின் சந்தை தொடர்பான கற்றல் செயற்பாட்டை ஊக்குவித்தனர். (ஜ-159)



## அறிவிக்காது நடைமுறையான மின்சாரத் தடை

### பொதுமக்கள் சிரமம்

தென்மராட்சி, மார்ச் 22

மின்தடை ஏற்படாதென அறிவிக்கப்பட்ட நிலையில் நேற்று முற்பகல் 9 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை மின் தடை ஏற்பட்டதால் அரச திணைக்களங்களில் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

சாவகச்சேரி பகுதி முழுவதும் நேற்று மின்சாரம் தடைப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே மின்சாரம் தடையின்றி தொடர்ந்து வழங்கப்பட்டதால் அலுவலகங்களில் காணப்பட்ட மின்பிறப்பாக்கிகள் அறைகளில் வைத்து பூட்டப்பட்டிருந்தன.

நேற்று திடீரென மின்தடை ஏற்பட்டதால் அலுவலகங்களில் மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரம் பெற்ற போதிலும் அதலிருந்து பெறப்பட்ட மின்சாரம் அலுவலகங்களில் காணப்பட்ட ஒரு சில பிரிவுகளின் கணினிகளுக்கம் புகைப் படப் பிரதி இயந்தி ரங் களுக்கம் மட்டும் வழங்கப்பட்டன. அலுவலகங்களின் அனைத்துப் பிரிவுகளும் இருளாகக் காணப்பட்டன.

மதியம் 12 மணிக்குப் பின்னர் மின்சாரம் வழமைக்குத் திரும்பியது அதன் பின்னரே அலுவலகங்கள் செயற்படத்தொடங்கின. (ஜ-9)

## மயிலிட்டியிலுள்ள காசநோய் மருத்துவமனை மீளவும் இயங்கவேண்டும்

### வலி.வடக்குச் சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

இராணுவத்தினர் விடுவித்த மயிலிட்டி காச நோய் மருத்துவமனை இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்து சபையில் தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டது.

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் தலைமையில் நேற்று நடைபெற்றது. ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஜெயபாலசிங்கம் இது பற்றிய தீர்மானத்தைச் சபையில் முன்வைத்தார்.

அது ஏற்றுக் கொள்ளப்பட்டுத் தீர்மானமாக மாற்றப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

காச நோய் மருத்துவமனைப் பகுதி விடுவிக்கப்பட்டபோதிலும் மருத்துவ சிகிச்சைகள் நடைபெறவில்லை.

இராணுவத்தினர் தடையாக உள்ளனர் என்று ஆரம்பத்தில் கூறப்பட்டது. தற்போது அங்கு மருத்துவ சிகிச்சையை ஆரம்பிக்கக் கூடிய சூழ்நிலை காணப்படுகிறது.

அந்த மருத்துவமனை ஒரு மருத்துவருடன் என்றாலும் ஆரம்பிக்கப் பட வேண்டும்.

அல்லது ஆரம்ப சுகாதார நிலையம் போல செயற்பட்டு அதன் பின்னர் காச நோய் மருத்துவ மனையின் செயற்பாடுகள் நடைபெற வழிவகைகள் செய்ய வேண்டும் என்றுள்ளது.

சுகாதாரத் துறையினருக்கு இந்தத் தீர்மானம் தொடர்பில் அனுப்பி வைக்கப்பட்டு காச நோய் மருத்துவமனை செயற்பட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (த-7,26)

## வாழைப்பழ விலை சந்தையில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை திடீரென அதிகரித்துச் செல்கின்றன. தற்போதைய வறட்சியான காலநிலை மற்றும் கோவில் திருவிழாக்கள் அதிகளவில் நடைபெற்று வரும் நிலையில் வாழைப் பழத்தின் பயன்பாடும் அதிகரித்துள்ளன.

இந்த நிலையில் வாழைப்பழத்தின் விலை தினமும் அதிகரித்துச் செல்கின்றது. கடந்த வாரத்தில் கிலோ 20 ரூபாவாக விற்கப்பட்ட கதலிப்பழம் தற்போது கிலோ 50 ரூபா வரை அதிகரித்துள்ளது. இதரைப் பழமும் தற்போது கிலோ 60ரூபாவாக அதிகரித்து விற்கப்படுகின்றது.

நீர்வேலி வாழைக்குலை விற்பனைச் சந்தைக்கு வாழைக்குலையின் வருகை அதிகரித்துக் காணப்படுவதோடு அதன் விலையும் அதிகரித்துள்ளது.

வலி.கிழக்குப் பகுதியைச் சேர்ந்த வாழைச் செய்கையாளர்கள் கூடுதலாக இந்தச் சந்தைக்கே வாழைக்குலைகளை எடுத்து வந்து விற்பனை செய்து வருகின்றனர்.

வெளிமாவட்டங்களில் இருந்தும் கூடுதலான வியாபாரிகள் இந்தச் சந்தைக்கு வந்து வாழைக்குலைகளைக் கொள்வனவு செய்து செல்கின்றனர்.

நேற்றைய சந்தை நிலவரப்படி கதலி மற்றும் இதரை வாழைப்பழங்கள் இந்தச் சந்தையில் கிலோ நாற்பது ரூபாவாக விற்கப்பட்டன.

வாழைப்பழத்தின் விலை தினமும் மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக வாழைக்குலை வியாபாரிகள் தெரிவித்தனர்.

தற்போதைய வறட்சியான காலநிலை வெப்பம் போன்றவற்றால் வாழைப்பழ நுகர்வும் அதிகரித்துள்ளது. (த-17)



வவுனியா



காங்கேசன்துறை



யாழ்ப்பாணம்

## 155 ஆவது பொலிஸ் வீரர்கள் தினம்

யாழ்ப்பாணம்,மார்ச் 22

155 ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் நாடாளாவிய ரீதியில் உள்ள பொலிஸ் நிலையங்களில் நேற்று இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் அத்தியட்சகர் தினேஷ் கருணாரட்ன தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் கடமையின் போது உயிர்நீத்த பொலிஸ் அலுவலர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

காங்கேசந்துறைப் பொலிஸ் நிலயத்திலும் வீரர்கள் தினம் இடம்பெற்றது . காங்கேசந்துறையில் உள்ள பொலிஸாரின் நினைவுத்தூபியில் நேற்றுக் காங்கேசந்துறை பிராந்திய பொலிஸாரால் நினைவுகூரப்பட்டது.

காங்கேசந்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சர் புத்தி உடுகம சூரிய தலமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. இறந்த பொலிசாரின் உறவினர்களும் கலந்து அஞ்சலி செலுத்தினர்.

வவுனியா பொலிஸ் நிலைய வளாகத்தில் வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேயவிக்கிரம தலைமையில் நேற்று காலை 7 மணியளவில் பொலிஸ் வீரர்கள் தினம் கடைப்பிடிக்கப்பட்டது. வவுனியா பொலிஸ் நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்ட பொலிஸ் வீரர்கள் நினைவுத் தூபியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் சர்வ மதத் தலைவர்கள், உயிரிழந்த பொலிஸாரின் குடும்ப உறுப்பினர்கள், ஓய்வு பெற்ற பொலிஸார், வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் தென்னக்கோன், வவுனியாப்பிரிவிலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

1864ஆம் ஆண்டு இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தில் முதன்முறையாக உயிரிழந்த பொலிஸ் அலுவலகரான சபானை நினைவகூரும் வகையில் பொலிஸ் வீரர்கள் தினம் வருடா வருடம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை பொலிஸ் சேவையில் கடமையின் போது இதுவரை 3 ஆயிரத்து 124 அலுவலர்கள் உயரிழந்துள்ளனர். இதே வேளை கடமையின் போது இதுவரை ஆயிரத்து 534 பேர் அங்கவீனமுற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7,26)

# ஐஸ் தொழிற்சாலைக்கு தண்ணீர் எடுக்கத் தடை

## வலி.வடக்குப் பிரதேச சபை முடிவு

*யாழ்ப்பாணம், மார்ச் 22*

*யாழ்ப்பாணம் பொன்னாலைச் சந்தியில் உள்ள கூல்மென் ஐஸ் தொழிற்சாலையின் தண்ணீர் பவுசர்கள் வலி.வடக்குப் பிரதேசத்தின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் தண்ணீர் எடுப்பது தடைசெய்யப்பட்டுள்ளது என்று சபையில் நேற்று ஏகமதாகத் தீர்மானிக்கப்பட்டது.*

நீர்கொழும்பில் உள்ள நிறுவனம் ஒன்று அதை இயக்குகிறது. அதற்குத் தேவையான தண்ணீர் வலி.வடக்குப் பிரதேசத்தில் சில காலங்களாக எடுக்கப்பட்டது. அளவெட்டி பன்னாலையில் அண்மையில் தண்ணீர் எடுக்கப்பட்ட போது குழப்பம் உருவானது. வலி.வடக்குப்பிரதேச சபை உறுப்பினர்கள் சிலர் ஐஸ் தொழிற்சாலைக்குத் தண்ணீர் எடுக்கவிடாது தடுத்தனர். தண்ணீர் எடுப்பதால் தமது பிரதேச நன்னீர் வளம் பாதிக்கப்படும் என்று சம்பவத்தின்போது வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் தா.நிகேதன் தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் ஐஸ்தொழிற்சாலைக்குத் தேவையான தண்ணீர் தனியார் காணிகளிலுள்ள கிணறுகளில் அவற்றின் உரிமையாளர்களின் சம்மதத்துடன் பெறப்பட்டது.

வலி.வடக்கில் பிரதேச சபையின் அனுமதியுடன் தண்ணீர் எடுப்பதற்கு குறித்த ஐஸ் தொழிற்சாலையினர் விடுத்த கோரிக்கை சபையில் ஆராயப்பட்டது.

வலி.வடக்கு விவசாய நிலப்பரப்பு, அங்குள்ள தண்ணீர் ஏற்கனவே குறைந்துள்ளது என்று பல்கலைக்கழக மாணவர்கள் செய்த ஆய்வு ஒன்றில் கூறியுள்ளனர்.

எனவே தனியாராக இருந்தாலும், வலி.வடக்கிலிருந்து வெளியிடங்களுக்குத் தண்ணீர் வழங்கக்கூடாது. அளவுக்கு அதிகமான தண்ணீர் வலி.வடக்கில் இருந்து எடுத்துச் செல்லப்படுவதால் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று சபையில் தெரிவிக்கப்பட்டது. அது சபையின் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

பொன்னாலையில் இயங்கும் குறித்த ஐஸ் தொழிற்சாலையின் ஐஸ் உற்பத்திகளை குடாநாட்டைச்சேர்ந்த மீனவர்கள் மாத்திரமன்றி வடக்கு மாகாணத்தில் உள்ள மீனவர்களும் பயன்படுத்துகின்றனர்.

தண்ணீருக்குத் தடை ஏற்படுத்தும்போது மீனவர்களுக்கும் இதனால் பாதிப்பு ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-21,26)

## இளம் பெண் கடத்தல்

சாவகச்சேரி, மார்ச் 22

வீட்டிலிருந்த பெண்களைத் தாக்கிவிட்டு அங்கிருந்த 21 வயதுப் பெண்ணை பலவந்தமாக மகிழுந்தில் ஏற்றிச்சென்றுள்ளார் ஒருவர். சாவகச்சேரியில் நேற்று முன்தினம் இது இடம்பெற்றுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான இளம்பெண்ணின் தாயும், சகோதரியும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தம்மைத் தாக்கிவிட்டு மகளைக் கடத்திச் சென்றுள்ளார் என்று தாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (த-9)

## அருள்நெறி விழா

இந்து சமய அறநெறி தேசிய ஆக்கத்திறன் போட்டி2018 இல் தேசிய,மாவட்டரீதியில் சிறப்பான ஆக்கத்திறனை வெளிப்படுத்திய கொழும்பைச் சேர்ந்த மாணவர்கள் மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வு கொழும்பு முகத்துவாரம் நாவலர் மணிமண்டபத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஐ-ரி)

## திருநெல்வேலி சந்தைக்கு வலுக்கூடிய மின்விளக்குகள்

யாழ்ப்பாணம், மார்ச் 22

திருநெல்வேலி சந்தைக்கு வலுக்கூடிய மின்விளக்குகள் பொருத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்த வலுக்கூடிய மின்விளக்குகள் சந்தையின் உட்புறத்துக்குக் கடந்த வாரம் பொருத்தி வைக்கப்பட்டதாக நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார்.

சந்தையின் உட்புறம் போதிய வெளிச்சம் இன்றிக் காணப்படுவதால் வலுக்கூடிய மின்விளக்குகளைப் பொருத்தித் தருமாறு சந்தை வியாபாரிகள் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்தனர்.

அதிகாலை வேளையில் சந்தைக்கு மரக்கறி வகைகள் வந்து சேர்வதால் போதிய வெளிச்சம் இன்றி வியாபாரிகள் சிரமப்பட்டும் வந்தனர். இதேசமயம் இந்த வலுக்கூடிய மின்விளக்குகள் சந்தையின் வெளிச் சுற்றாடலுக்கும் பொருத்தி வைக்கப்படவுள்ளதாக பிரதேச சபை தெரிவித்தது. (ஐ-17)



## தரம் 5 புலமைப் பரிசிலில் சித்தி அடைந்தோருக்கு மதிப்பளிப்பு

சாவகச்சேரி, மார்ச் 22

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட கடந்த வருடம் தரப் புலமைப் பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு தென்மராட்சி கலைமன்றக் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கழகத்தலைவர்லயன்கு.பிரணவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக பன்னாட்டு லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தின் பிரதி மாவட்டச் செயலர் லயன் ஆர்.எல்.ராஜ்குமார் தம்பதியினர் கலந்து கொண்டனர். நிகழ்வில் பன்னாட்டு லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தின் பிராந்திய வலயத் தலைவர்களும் ஏனைய லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகளும், சாவகச்சேரி லயன்ஸ் கழகப் பிரதி நிதிகளும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் தமிழ்மொழியில் கூடுதல் புள்ளிகள் பெற்று முதலிடம் பெற்ற சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி செல்வி நவாஸ்கன்நதிக்கு சிறப்பு பரிசில்கள் வழங்கப்பட்டது. பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற மேலும் 100 மாணவர்களுக்கு விருதுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. நிகழ்வில் முதன்மை விருந்தினர் உரையாற்றுகையில்,

கல்வியை அடித்தளமாகக் கொண்டு வாழ்க்கையை முன்னெடுக்கக் கூடியவகை யில் மாணவப் பருவம் அமைந்துள்ளது. கல்விக்கு ஆசிரியர்கள் பெற்றோர் கடவுள் போன்றோரின் ஆசீர்வாதம் என்றும் இருக்க வேண்டும். இந்திய முன்னாள் அரச தலைவர் விஞ்ஞானி அப்துல் கலாம் மாணவர்களுக்கு சொல்லும் அறிவுரையானது உங்கள் வாழ்க்கையின் எதிர்காலத்தை கனவு காணுங்கள் என்பதே. இந்த அறிவுரையானது மாணவர்கள் தமது எதிர்காலத்தை நிர்ணயிக்கும்வாழக்கையை எப்போது அடைவது எவ்வாறு அடைவது ஏன் அடைய வேண்டமென்ற கனவு காண்பீர்களாயிருந்தால் அதனை வெகு சீக்கிரத்தில் அடைந்து விடுவீர்கள் எனக் கூறியிருந்தார்.

இந்தக் கேள்விகளை நோக்கிச் செல்வீர்களாயின் நிச்சயம் அது நல்லதொரு இலக்கினை அடையவைக்கும் எனத் தெரிவித்தார். (ஐ-9)

## குடமுழுக்கு

யாழ்ப்பாணம்,மார்ச் 22

கோப்பாய் வடக்கு இலுப்பையடி சிறி வீரகத்தி விநாயகர் ஆலய குடமுழுக்கு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

நாளை சனிக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரைக்கும் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் நடைபெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணிக்கு விநாயாகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி காலை 6.14 மணிக்கு குடமுழுக்கு நடைபெறும்.

கோப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன், செஞ்சொற்செல்வன் ஆறுதிருமுருகன் வாழ்த்துரை வழங்குவார்கள். தொடர்ந்து நண்பகல் மகேசுவரர் பூசையும் இடம்பெறும். அன்றையதினம் பிற்பகல் 5 மணிக்கு வசந்த மண்டபூசை இடம்பெற்று பஞ்சமுக விநாயகர் தங்கரத்தில் வீதி வலம் வருதலும் நடைபெறும். (ஐ-17)

## உருளைக்கிழங்குச் செய்கை இம்முறை அதிக விளைச்சல்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உருளைக்கிழங்குச் செய்கை மூலம் இம்முறை விவசாயிகள் அதிக விளைச்சலை பெற்றுக் கொண்டனர். உரிய காலநிலை மற்றும் உருளைக்கிழங்கு இறக்குமதிக்கான வரியை அரசு அதிகரித்தமை ஆகியவற்றால் செய்கையாளர்கள் எவ்வித பாதிப்பும் இன்றி நன்மை அடைந்துள்ளனர் என்று மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் இ. தெய்வேந்திரம் தெரிவித்தார்.

இம்முறை போகத்தின்போது குறைந்தளவு செய்கையாளர்களே இந்த உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட்டனர். 106 ஹெக்டேயர் வரையிலான நிலப்பரப்பில் இந்தச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. 50 கிலோ வரையிலான விதை கிழங்கு நடுகை செய்தவர்களுக்கு குறைந்த பட்சம் 600 கிலோ வரையிலான் கிழக்குகளைப் பெற்றுக் கொண்டனர்.

கடந்த போகத்தைக் காட்டிலும் இந்தப் போகத்தின்போது உருளைக்கிழங்கு செய்கை மூலம் விவசாயிகள் பெரும் நன்மையடைந்தனர் என்று அவர்தெரிவித்தார். (ஐ-17)

# யாழிலிருந்து கரைச்சி செல்லும் ஆசிரியர்கள் பளைக்கு மாற்றல்

## வலய இடமாற்ற சபையில் தீர்மானமென தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 22

கரைச்சிக் கோட்டத்தில் கடமையாற்றும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களில், யாழ்ப்பாணத்திலிருந்து வருபவர்கள் பளைக் கோட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். அந்த ஆசிரியர்களின் இடங்களுக்கு கரைச்சியிலுள்ள மேலதிக ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

கிளிநொச்சி கல்வி வலய இடமாற்ற சபையில் இது பற்றித் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வடக்கு மாகாணச் செயலரும், கிளிநொச்சி வலய இடமாற்ற சபை உறுப்பினருமான ஜெ.நிஷாகர் தெரிவித்தார்.

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கரைச்சிக் கோட்டத்தில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர்.

பளைக் கோட்டத்தில் பற்றாக்குறையாக உள்ளனர் என்பது கண்டறியப்பட்டு அதைச் சீரமைக்கும் நோக்கிலும், யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து இத்தகைய பாடசாலைகளுக்கு வரும் ஆசிரியர்களின் நலன் கருதியும் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தின் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இதுபற்றி ஆராயும் இடமாற்ற சபைக் கூட்டம் முறைப்படி ஆசிரியதொழிற்சங்கங்களை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. பல ஆசிரியர்கள் ஏற்றுக்கொண்டனர்.

**அமைச்சு பக்கச்சார்பு**

ஆசிரியை ஒருவர் தனால் இடமாற்றத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மேன்முறையீடு செய்தார்.

அதற்கான பதிலும் வலயக் கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட நிலையில், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு வலய இடமாற்ற சபையின் தீர்மானத்தை மீறி, குறித்த ஆசிரியை அதே பாடசாலையில் கடமையாற்ற அனுமதித்துள்ளது.

இது ஆசிரியப் பரம்பலைச் சீராக்கும் நடவடிக்கைகளுக்கு முரணானது.

இத்தகைய நடவடிக்கைகளுக்கு வடக்கு மாகாண ஆளுநர் சரியான தீர்வு வழங்காவிடில், வடக்கு மாகாணத்தில் நடைபெறும் சுற்றறிக்கைக்கு முரணான அத்தனை இடமாற்றங்களையும் தடுத்து நிறுத்தி அனைவரையும் நீதிமன்றில் நிறுத்த நடவடிக்கை எடுப்போம்.

வெற்றிடமான கல்வி வலயங்களுக்குப் பணிப்பாளர்களை நியமிக்க முடியாத வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு இத்தகைய சில்லறை வேலைகளை மட்டுமே செய்வது நல்லதல்ல என்று அறிக்கையில் செயலர் தெரிவித்துள்ளார். (த)

## முரண்பாடுகளைக் களைய சர்வ மதப் பேரவை முயற்சி

மன்னார், மார்ச் 22

திருக்கேதீச்சரத்தில் வீதி வளைவு உடைக்கப்பட்ட சம்பவத்தை அடுத்த ஏற்பட்டுள்ள நிலமையைச் சுமுகமாக்கும் வகையில் மன்னார் சர்வமதப் பேரவைக்கும், திருக்கேதீச்சரம் ஆலய நிர்வாகத்துக்கும் இடையே சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் மன்னாரில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

வீதி வளைவு அகற்றப்பட்ட சம்பவத்தை அடுத்து மன்னார் சர்வமதப் பேரவையில் இருந்து இந்து மதகுருமார்கள் விலகிக் கொள்வதாக அறிவித்திருந்திருந்தனர். இந்த நிலமையைச் சுமுகமாக்கும் நோக்குடனேயே இந்தச் சந்திப்பு நடைபெற்றது என்று கூறப்படுகின்றது.

இந்தச் சந்திப்பில் ஆலய நிர்வாகத்தினர் தமது தரப்பு நியாங்களை எடுத்துக் கூறியுள்ளனர். தம்மிடம் உள்ள ஆதாரங்களையும் காண்பித்துள்ளனர். சைவ மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு அந்த இடத்தில் வீதி வளைவு அமைக்க ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். சர்வமதப் பேரவை சார்பாகச் சந்திப்பில் கலந்து கொண்ட அதன் தலைவர் தமிழ்நேசன் இது தொடர்பாகத் தெரிவித்ததாவது;

சர்வமதப் பேரவை முரண்பட்ட இரு தரப்பினரின் கருத்துக்களைத் தனிதனியே கேட்டு வருகின்றது. பின்னர் சந்தர்ப்பம் கிடைத்தால் இரு தரப்பினரையும் அழைத்துப் பேசுவோம். அடுத்த கலந்துரையாடல் எவ்வாறு அமையும் என்று முடிவு செய்வோம். என்று தெரிவித்தார். (எ-213)

## பீடி சுற்றும் இலைகளோடு கடலில் இரண்டு பேர் கைது



தலைமன்னார் வெளிச்ச வீட்டிலிருந்து 5 கடல் மைல் தொலைவில் 912 கிலோ கிராம் பீடி சுற்றும் இலைகள் நேற்று அதிகாலை கைப்பற்றப்பட்டுள்ளன என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 27 மூடைகளில் பொதி செய்யப்பட்டு டிங்கிப் படகொன்றில் பீடி சுற்றும் இலைகள் கொண்டு வரப்பட்டபோதே கடற்படையினர் அவற்றைக் கைப்பற்றியுள்ளனர். இவை இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்டவர்கள் 32 மற்றும் 38 வயதானவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களையும், கைப்பற்றப்பட்ட பீடி சுற்றும் இலைகளையும் யாழ்ப்பாணம் சுங்கத்திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26,213)



## மதிநா சஞ்சிகை வெளியீடு

மன்னார்,மார்ச் 22

மன்னார், அல் மதீனா முஸ்லிம் பாடசாலையின் "மதிநா" சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் அ.ல.பிலால் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கைத்தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் ரிஷாட் பதியுதீனும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமாரும் கலந்து கொண்டனர்.

நூலின் வெளியீட்டுரையைக் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசனும் ஆய்வுரையை வவுனியா கல்வியியற் கல்லூரி மூத்த விரிவுரையாளர் ந.பார்த்திபனும் மேற்கொண்டனர்.

நிகழ்வில் மன்னார் பிரதேசசபைத் தலைவர் முஜாஹிர், மாந்தை மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ஏ. சந்தியோகு, முன்னாள் பிரதி அமைச்சர் சுந்தரமூர்த்தி அபூபக்கர், பிரதேச செயலர் பா.ஜெயகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மடு பிரதேச செயலர் பிரிவில் மதீனா நகர் என்ற கிராமம் உருவாக்கப்பட்ட பின்னர் அந்தக் கிராமத்தின் எழுச்சியையும் அதனோடு தொடர்புபட்ட பாடசாலையின் வரலாற்றையும் குறிப்பிடுவதாக நூல் உருவாக்கப்பட்டுள்ளது. (க)

## பௌர்ணமியில் சாராய விற்பனை: ஒருவர் கைது

வவுனியா,மார்ச்.22

பௌர்ணமி தினமான நேற்றுமுன்தினம் சாராய விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வவுனியா நெளுக்குளத்தில் வைத்து அதே இடத்தைச் சேர்ந்த 45 வயதான நபரே கைதுசெய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 17 பெரிய போத்தல்கள் சாரயமும்,9 கால்போர்த்தல்கள் சாராயமும் பறிமுதல் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வன்னிப்பிராந்திய பிரதிபொலிஸ்மா அதிபரின் கீழ்செயற்படும் சிறப்பு போதைஒழிப்பு பொலிஸாரால் இவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த நபர் வீட்டில் வைத்து சாரயவிற்பனையில் ஈடுபடுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதனையடுத்து சாராயத்தை கொள்வனவுசெய்பவர்கள் போல சென்ற பொலிஸார் அவரை கையும்,மெய்யுமாகப்பிடித்துள்ளனர். சந்தேகநபரை நீதி மன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-110)

## கம்பனின் நினைவு தினம்

கவிச்சக்கரவர்த்தி கம்பனின் நினைவு தினம் வவுனியா சூசைப்பிள்ளையார் குளம் சந்தியில் அமைந்துள்ள அவரது சிலையடியில் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.

தமிழ்மாமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் நகரசபைத் தலைவர் இ.கௌதமன்,உபநகரபிதா சு.குமாரசாமி, நகரசபைஉறுப்பினர்கள், தமிழ்மாமன்ற உறுப்பினர்கள், நகரசபை அலுவலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் கம்பரது சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு,மலரஞ்சலி செலுத்தபட்டது. தொடர்ந்து சிறப்புரைகளை தமிழருவி சிவகுமாரன்,தமிழ்மணி அகளங்கன், மருத்துவர் செ.மதுரகன் ஆகியோர் நிகழ்த்தியிருந்தனர். (ஐ-110)

## பொதுக்கூட்டம்

கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலய பழையமாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் பாடசாலை மண்டபத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் தலைமையில் நடைபெறும். பாடசாலையின் வளர்ச்சி கருதி தவறாது இக்கூட்டத்தில் அனைத்து பழைய மாணவர்களையும் சமூக மளிக்குமாறு பழைய மாணவர் சங்கச் செயலர் அ. றெஜிஅலோசியஸ் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)

## காணிப் பிணக்குகள் தொடர்பாக செட்டிகுளத்தில் 88 முறைப்பாடுகள்

வவுனியா,மார்ச் 22

செட்டிகுளத்தில் காணிப்பிணக்குகள் தொடர்பாக 88 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக வவுனியா சிறப்புக் காணி நடுவர் சபையின் தவிசாளர் இ.நவரட்ணம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா, செட்டிகுளம் பிரதேசத்திலுள்ள காணி உரிமம் மற்றும் உரிமை, காணி ஆவணம், காணி எல்லை என்பன தொடர்பான 88 பிணக்குகள் வவுனியா சிறப்புக் காணி நடுவர் சபையிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

இதில் முதல் கட்டமாக 40 பிணக்குகள் தொடர்பான கலந்துரையாடல் மற்றும் விசாரணைகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணியில் இருந்து 1 மணி வரை செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் இடம்பெறும். சம்மந்தப்பட்டவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவர்கள் வருகை தந்து தமது காணிப்பிணக்குகள் தொடர்பில் தீர்வைப் பெறுவதற்கு ரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன், காணிப் பிணக்கு உடையோர் வருகை தந்து புதிய முறைப்பாடுகளையும் அன்றைய தினம் செய்ய முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-110)





## குடமுழுக்கு

மருதங்கேணி,மார்ச் 22

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி மாசார் சோரன்பற்று மாஞ்சோலை கதிரமலைக் கந்தன் ஆலயக் குடமுழுக்கு நேற்று முற்பகல் 11:30 மணியளவில் இடம்பெற்றது.

முதன்மைக் குரு ஸ்கந்த பிரதிஷ்டா பிரதம குரு சிவாச்சார்ய திலகம் சிவசிறி ந.கரீத்திர குருக்கள், பிரதிஷ்டா கலா ஜோதி சிவசிறி குமார சரவணபவக் குருக்கள் ஆகியோர் தலைமையில் பிரம்மசிறி கு.சுவாமிநாத சர்மா பிரம்ம சிறி சிறிமேதா வத்சன் சர்மா உட்பட்ட பல சிவாச்சாரியார்கள் கலந்து கொண்டு குடமுழுக்குக் கிரியைகளை நடத்தினர். (ஐ-160)

# 26 ஏக்கர் வயல் நிலத்துக்கு நீர் வழங்குவதற்கு மறுப்பு

## கனகன்குளத்தின் கீழ் விதைத்த விவசாயிகள் குற்றச்சாட்டு

மன்னார், மார்ச் 22

மன்னார் கனகன்குளத்தின் கீழ் காலம் பிந்தி விதைத்த 26 ஏக்கர் வயல் நிலத்தை அழிவடையாது பாதுகாக்க மாவட்டச் செயலரும், கமநர சேவைகள் திணைக்களமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விவசாயியான வரதலட்சுமி சித்திவிநாயகம் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்தில் உள்ள கனகன்குளத்தின்கீழ் 2018/2019 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற் செய்கை மேற்கொண்டிருந்தோம். அவ்வாறு மேற்கொண்ட காலபோக நெற்செய்கையானது காலம் பிந்திய விதைப்பாக அமைந்த காரணத்தால் குளத்தில் உள்ள நீரில் இருந்து இரு தடவை அல்லது குறைந்த பட்சம் ஒரு தடவையாவது நீரை திறந்து தர வேண்டும் என்று மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்தோம்.

அதற்கு மாவட்டச் செயலாளர் சாதகமாகப் பதிலளித்திருந்தார். 26 ஏக்கர் வயலுக்கும் நீரை வழங்க சம்மதம் தெரிவித்திருந்தார். ஆனால் விவசாயக் குழுவின் வேண்டும் என்றே நீர் வழங்கலைத் தடுக்கின்றனர். அவர்கள் வேண்டும் என்றே எம்மை நசுக்குகின்றனர்.

எமது காணி புலவுக் காணிகள் என்று கூறுவதை நம்பி கடந்த ஆண்டு நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளரால் எமக்கான உரமானியம், இலவசக் காப்புறுதிகள் என்பன தடுக்கப்பட்டன. எமக்கு நீரைத் திறந்து விடவேண்டும் என்று மாவட்டச் செயலர் நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளருக்கு கடிதம் ஒன்றைத் தந்திருந்தார். அதைக் கொடுத்தும் எமக்கு நீர் வழங்கப்படவில்லை.

அதேவேளை கால்நடைக் கட்டுப்பாட்டுக் காலம் அடுத்த மாதம் 10 ஆம் திகதியே முடிவடையும். ஆனால் தமதும வயல் நிலங்கள் அறுவடை செய்யபபட்டதும் கமக்கார அமைப்பினர் தமது கால்நடைகளை அவிழ்த்துவிட்டுள்ளனர். எமது வயல் நிலங்கள் அழிவடைகின்றன. என்றார்.

இது தொடர்பாக மேலதிக மாவட்டச் செயலர் குணபாலனிடம் கேட்டபோது, “இந்தப் பிரச்சினை நீடிப்பதால் அடுத்த போகத்தின் போது பேசித் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் தற்போது விதைக்கப்பட்ட 26 ஏக்கருக்கு ஒரு தடவை நீரை வழங்க வேண்டும் என்றும் பொறியியலாளருக்குக் கடிதம் வழங்கப்பட்டது. பொறியியலாளர் தரப்பிலேயே இந்த விடயம் தாமதமாகின்றது. என்றார்.

இது தொடர்பில் குற்றஞ்சாட்டப்படும் கமக்கார அமைப்பைச் சேர்ந்த குரூஸ் என்பவரிடம் இது தொடர்பாகக் கேட்டபோது, “பல தடவைகள் அறிவுறுத்திய பின்னரும் விதைப்பை மேற்கொண்டமையால்தான் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. சட்டபூர்வமாக விதைக்கப்பட்ட வயல்கள் அறுவடை செய்யப்பட்டதால்தான் கால்நடைக் கட்டுப்பாட்டைத் தளர்த்தினோம். விதைக்கப்பட்ட 26 ஏக்கருக்கும் நீர் வழங்குவதை அனுமதிக்க முடியாது” என்றார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் பி.யதீசைக் கேட்டபோது, “அங்கு விதைப்பு மேற்கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்ட பின்னரும், விதைப்பு நடைபெற்றுள்ளது. அந்தப் பகுதிக்கு நீர் வழங்க வேண்டாம் என்பது சம்மேளனத்தின் முடிவு. அதே நேரம் சிறுபோகப் படியும் ஆரம்பிக்க வேண்டியுள்ளது. எதிர்வரும் 26ஆம் திகதி திட்ட முகாமைத்துவக் குழுக் கூட்டம் உள்ளது. அதில் ஆராய்ந்து ஓர் முடிவை எட்டும் சந்தர்ப்பம் உள்ளது. கால்நடைக் கட்டுப்பாடு என்பது கமநல சேவைத் திணைக்களத்தைச் சார்ந்த விடயம் என்றார்.

கால்நடைக் கட்டுப்பாட்டுக் காலத்துக்கு முன்னரே கால்நடைகளை விடுவிப்பது தொடர்பாக மாவட்டக் கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளரிடம் கேட்டபோது, “வயல் பிரச்சினை இருப்பினும், கால்நடைக் கட்டுப்பாட்டுக் காலம் தீர்மானித்தால் அந்தக் காலம் முடியும்வரை அதைக் கட்டுப்படுத்தியே ஆகவேண்டும். என்றார்.

சர்ச்சைக்குரிய பகுதியில் விவசாயம் செய்யும் மற்றொரு விவசாயி கருத்துத் தெரிவித்த போது:

“எனது பெயரைக் கூற அச்சமாக இருக்கின்றது. எம்மை இங்கிருந்து அகற்றுவதற்குப் புலவுக் காணி என்று கூறுகின்றனர். அதை ஏற்க முடியாது. இங்குள்ள கமக்கார அமைப்பைச் சேர்ந்த பலர் வேறு பகுதிகளில் இவ்வகையான புலவு நிலத்தில் 300க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலத்தை அபகரித்தே வைத்துள்ளனர். அந்தத் தரவுகளை நாம் தற்போது திரட்டியுள்ளோம். அவற்றை நாம் இங்கு கைளிக்க விரும்பவில்லை. ஏனெனில் இங்கு மதம் சார்ந்த முடிவுகளை எடுக்கின்றனர். நாம் இந்த விடயத்தை உரிய அமைச்சுக்களுக்கும், தலைமை அமைச்சரின் கவனத்துக்கும் கொண்டு செல்லவுள்ளோம். என்றார். (எ-105)

## தவக்கால தியானங்கள்

### அன்பு அனைத்தையும் தரும்

“உன் இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக” உன்மீது நீ அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக” இவ்விரு கட்டங்களுமே கிறிஸ்தவத்தின் ஒட்டுமொத்த விளக்கமும் அடிநாதமாகவும் திகழ்கின்றது. கடவுளன்பும் மனித அன்பும் சமாந்தரமாக முன்னெடுக்கப்படவேண்டும்.

பிறரன்பில்லாத இறையன்பு இறைவன் பார்வையில் இகழ்ச்சிக்குரியது. ஏனெனில் ஏழையை ஒடுக்குகின்றவர் அவரை உண்டாக்கியவரை இகழ்கிறார் என்கின்றன நீதிமொழிகள் (14:31)

கடவுளால் எமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வளங்கள் அனைத்தும் கடவுளையும் மனிதரையும் அன்புசெய்யப் பயன்படவேண்டும். ஆனால் இன்று கடவுளையும் மனிதரையும் பயன்படுத்திப் பொருள்களையும் பட்டம் பதவிகளையும் செல்வத்தையும் அன்பு செய்யும் நிலையே தோன்றியுள்ளது. முழு இதயத்தோடும் முழு ஆற்றலோடும் முழு அறிவோடும் பணம் சம்பாதிக்கவும் பூட்டிவைக்கவும் முயற்சிப்பதுபோல் முழு இதயத்தோடு இறைவனையும் அயலவனையும் அன்பு செய்தால் இவ்வுலகம் எவ்வளவு இனிதாய் மாறும்.

அடுத்தவரிலும் ஆண்டவனைக்கண்டு அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவோம். அப்போதுதான் கடவுளின் அன்பை சுவைக்க முடியும். இல்லையேல் வழிபாடும் வாழ்வும் தொடர்வற்றுக் கடவுளை வாழ்விலிருந்து தொலைத்துவிட்டு அமைதியிழக்கும் நிலை தோன்றும்.

- எஸ்.யேசுதாஸ்,
*கொழும்புத்துறை.*

## மகளிர் தின நிகழ்வுகள்

வவுனியா,மார்ச் 22

பன்னாட்டு மகளிர் தின நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று மேலதிக மாவட்ட செயலர் கோ.தனபாலசுந்தரம் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட செயலர் திருமதி றூபவதிகேதீஸ்வரன், சிறப்புவிருந்தினர்களாக முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் திருமதி பூங்கோதை தயாளசீலன், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உமாநிதி புவனராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலக முன்றலில் பெண் முயற்சியாளர்களால் அமைக்கப்பட்ட சந்தையினை முதன்மை விருந்தினர் திறந்துவைத்து நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து முல்லைத்தீவு நகரபகுதியிலிருந்துமாவட்ட செயலகம்வரையான நடைபவனியும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்ட விழா மண்டபத்தில் பல்வேறு கலைநிகழ்வுகளும், சாதனைப் பெண்கள் மதிப்பளிப்பும் இடம்பெற்றது. (ஐ-222)



# கிளிநொச்சி மருத்துவமனையில் இன்று முதல் கண் சத்திர சிகிச்சை

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் இன்று முதல் கண் சத்திர சிகிச்சை இன்று முதல் ஆரம்பிக்கப்பட உள்ளது என்று பிராந்திய சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆரம்பநிகழ்வு காலை 8.30 மணியளவில வைத்தியர் த.காண்டீபன் தலைமையில் இடம்பெறவுள்ளது. கிளிநொச்சி மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம் முதன்மை விருந்தினராக கலந்து கொள்ளும் நிகழ்வில் கண் சத்திர சிகிச்சை விடுதி திறந்து வைக்கப்படவுள்ளது. கண் சத்திர சிகிச்சையும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதுவரை கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கண் சத்திர சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற இடங்களுக்கு நோயாளர்கள் அழைத்து செல்லப்பட்டு அங்கு சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் கண் சத்திர சிகிச்சைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் பிரதேச மக்கள் அனைவரும் நன்மை பெறுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-6)

## கிளிநொச்சியில் கையெழுத்துச் சேகரிப்பு

கிளிநொச்சி, மார்ச் 22

வவுனியா காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கிளிநொச்சியில் கையெழுத்துச் சேகரிக்கும் பணியில் நேற்று ஈடுபட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் விடுதலையை வலியுறுத்தியும், இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவைக்கு அனுப்பி வைக்கும் வகையில் குறித்த கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டன.

கிளிநொச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வழிபாட்டுக்கு வரும் மக்களிடம் இவை சேகரிக்கப்பட்டன. (த-35)



# நீர் இன்றித் தள்ளாடும் எருவிட்டான் கிராமம்

## விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கிராம மக்கள் அவசர கோரிக்கை

மன்னார், மார்ச் 22

பல மாதங்களாகக் குடி தண்ணீர் இன்றிப் பெரும் அவலத்தின் மத்தியில் வாழ்க்கையை நகர்த்துகின்றோம் என்று எருவிட்டான் கிராம மக்கள் விரக்தியுடன் தெரிவித்தனர். இந்தப் பிரச்சினை தொடர்பாக நானாட்டான் பிரதேச செயலர் மற்றும் நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் ஆகியாருக்குத் தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் வேதனை தெரிவித்தனர்.

மன்னார், நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்டது எருவிட்டான் கிராமம். அங்கு 25க்கு மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. அங்குள்ள நீர்த் தாங்கி பழுதடைந்துள்ளது. நீர்க் குழாய்களும் சேதமடைந்துள்ளன. அங்குள்ள மின் மோட்டரும் பழுதடைந்து பல மாதங்களாகின்றன.

அங்குள்ள மக்கள் குடி தண்ணீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அதை விட ஏனைய தேவைகளுக்கும் அங்கு தண்ணீர் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது.

தற்போது கடும் வெப்பமான காலநிலை காணப்படுகின்றது. தண்ணீர் இல்லாது மக்கள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர். அதனால் அங்குள்ள சிறார்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். அதிகாரிகள் விரைவாக நடவடிக்கை எடுத்துத்துத் தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத்தரவேண்டும்என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

இந்தக் கிராமத்தின் குடி தண்ணீர்ப் பிரச்சினை தொடர்பாக இரு நாள்களுக்கு முன்னதாக எழுத்து மூலம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. ஆ னால் இன்றுவரை அந்தக் கிராமத்தைச் சேர்ந்த எவரும் நேரில் வந்து எம்முடன் கதைக்கவில்லை என்று நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் த.பரஞ்சோதி தெரிவித்தார்.

தண்ணீர் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களின் தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க பிரதேச சபை உறுப்பினர்கள் ஊடாக் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கிராமத்தின் அவசர நிலைமையைக் கருத்தில் கொண்டு குடி தண்ணீர் வழங்க விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-56)



## வவுனியாவின் பல இடங்களில் பறக்கும் பௌத்த மதக் கொடி

வவுனியா,மார்ச் 22

திரிபீடக வந்தனா வார்த்தை முன்னிட்டு வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் பௌத்த கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

அரச தலைவரின் ஆலோசனைக்கு அமைவாக கடந்த 16 ஆம் திகதி தொடக்கம் நாளை 23 ஆம் திகதி வரை திரிபீடக வந்தனா (புனித திரிபீடக) வாரமாக நாடு முழுவதும் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.

அரச தலைவர் செயலகம், புத்ததாசன அமைச்சு, வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு என்பன ஏனைய அமைச்சுகள்களுடன் இணைந்து இந்த திரிபீடக வந்தனா வாரத்தில் பல்வேறு நிகழ்வுகளை நடத்தி வருகின்றது.

இதனை முன்னிட்டு வவுனியா கண்டி வீதி ஸ்ரீபோதீதக்சீனாராமய விகாரையில் விகாராதிபதி சியம்பலா லஸ்கர விமல தேரர் தலைமையில் தினமும் மாலை 6 மணியில் இருந்து சிறப்பு பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

வவுனியாவின் பல பகுதிகளின் வீதிகள், திணைக்களங்கள், இராணுவமுகாம்கள், பொலிஸ் நிலையம் என்பவற்றிலும் பௌத்த கொடிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் அதிகமாக தமிழ்மக்களை கொண்டமைந்துள்ள வவுனியா மாவட்டத்தில் சொற்ப அளவில் வசிக்கும் பௌத்த சிங்களமக்களால் கொண்டாடப்படும்,பண்டிகைகள் மற்றும் சமயநிகழ்வுகளின் போது மாத்திரம் வவுனியா நகரம் வண்ணமயமான தோரணங்கள், கொடிகளால் அலங்கரிக்கபட்டு பௌத்தசிங்களவர் பெரும்பான்மையாக வாழும் பகுதி போல காட்சியளிக்கும் நிலை தொடர்ந்து உருவாக்கபட்டு வருவதாக தமிழ்மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஐ-110)

## இவ்வாண்டு பிறக்கும் குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழுடன் அ.அட்டை இல.

முல்லைத்தீவு, மார்ச் 22

எதிர்காலத்தில் பிறப்புச் சான்றிதழுடன் அடையாள அட்டை இலக்கமும் பதிவாகும் டிஜிட்டல் பதிவு நடவடிக்கை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.



பதிவாளர் நாயக திணைக்களத்தின் 'மக்கள் உரிமை பன்னாட்டுத் தரம்' எனும் அறிமுக நிகழ்வு நாடு தழுவிய ரீதியில் நடைபெற்றன. 153ஆண்டுகள் பழமை வாய்ந்த பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் சேவைகளை நவீனமயப்படுத்தல் திட்டம் நாடுதழுவிய ரீதியில் நடைபெற்றுவருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் காணிகளைப் பதிவுசெய்தல். ஒருநாள் சேவை மற்றும் தேசிய பிறப்புச் சான்றிதழ் வழங்கல் என்பன அண்மையில் நடைபெற்றன.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களுக்கான சேவைகள் வழங்குகின்ற எங்களின் செயற்பாடுகளில் நாங்கள் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மக்களின் சேவைகளை துரிதப்படுத்துவது அவசியமாகின்றது. மக்களை அலைக்கழிப்பதை நாங்கள் தவிர்ப்பதும் துரிதமான செயற்பாட்டுக்கும் இது வழி வகுக்கும்.

2019 ஆம் ஆண்டு பிறக்கின்ற பிள்ளைகளுக்கு அவர்களின் பிறப்புப் பதிவு டிஜிட்டல் சான்று பிரதிகள் வழங்கப்படவுள்ளன. அதன் ஊடாக பிறப்புச் சான்றிதழில் அடையாள அட்டை இலக்கம் கூட குறிப்பிடப்படும். அதுமட்டுமல்ல பிறப்புச் சான்றிதழ்கள் இனி வருங்காலங்களில் மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படும். நாட்டில் இருக்கின்ற இரு மொழிபேசும் மக்களுக்கும் அது பயனுள்ளதாகஅமையும். இவ்வாறான நடவடிக்கை மூலம் மக்களின் சேவைகளையும் சிறப்பான முறையில் வழங்குவதற்கு பதிவாளர் நாயகத் திணைக்களம் முன்வந்துள்ளது - என்றார். (ஐ-222)

## கொள்ளை சம்பவம் தொடர்பில் இருவர் கைது

முல்லைத்தீவு, மார்ச் 22

முல்லைத்தீவு நகர் பகுதியில் ஊடகவியலாளர் வீடு உடைத்துக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் இருவரைக் கைது செய்துள்ளனர். திருடப்பட்ட மடிக்கணினி மற்றும் கமராக்கள் என்பவையும் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் கடந்த 18ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-ரி3)



## அடிக்கல் நடும் நிகழ்வு

வவுனியா,மார்ச் 22

வவுனியா சமளங்குளம் அருள்மிகு கல்லுமலை சிறி சித்தி விநாயகர் ஆலய கர்ப்பக்கிரகத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தக் கர்ப்பக்கிரகம் கருங்கல்லினால் கட்டப்படவுள்ளதையடுத்து, கருங்கல் பொழிவு பணியும் இதன்போது வைபவ ரீதியாக ஆலய பரிபாலசபையால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆலய முதன்மைக் குரு சிவசண்முகநாத குருக்களின் தலைமையில் சிறப்பு பூஜை வழிபாடுகள் இடம்பெற்று அடிக்கல் நட்டு வைக்கப்பட்டது.

இந்த ஆலயம் பற்றிய சுருக்கமான வரலாற்றுப் பதிவைக் கொண்ட சிறுநூலும் இதன்போது வெளியிடப்பட்டது.

நிகழ்வில் அரசியல்வாதிகள், பிரதேசசெயலக அலுவலர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-110)





கிளிநொச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் நிகழ்வினை முன்னிட்டு பாரம்பரிய முறைப்படி தென்மராட்சி பிரதேசத்தில் சேகரித்த பண்டங்கள் எடுத்துச் செல்லப்பட்டன. இந்த நிகழ்வு மீசாலை பந்தமரவடியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவல் மாட்டுவண்டில்களில் ஆலயத்துக்கு பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டன. (ஐ - 131)

# தமிழர் பிரச்சினைக்கு முடிவுகட்ட தன்னால் மாத்திரமே முடியுமாம்

## கூறுகிறார் கோத்தபாய

கொழும்பு, மார்ச் 22

சிறுபான்மை மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வளிக்கக்கூடிய ஒருவன் நான் மட்டுமே. அவர்கள் எனக்கு வாக்களிப்பதில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. இவ்வாறு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பு நாரஹேன்பிட்டியவில் உள்ள சிறிகௌதம விகாரையில் நேற்று இடம்பெற்ற பூசை வழிபாடுகளின் பின்னர் உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அமைச்சர் நவீன் திசநாயக்கவும் கலந்து கொண்டார்.

அமைச்சர் நவீன் திசநாயக்க, அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்கவுள்ளவர் கலந்து கொண்டிருக்கும் ஒரு முக்கிய நிகழ்வு. இந்த நிகழ்வைப் போன்று எதிர்வரும் நாள்களில் அவருக்கு அதிகமான நிகழ்வுகள் இருக்கும் என்று நினைக்கின்றேன். சிங்கள பௌத்த வாக்குகளால்தான் எந்த அரசும் ஆட்சியில் அமர்கின்றது. அதேபோன்று வீட்டுக்கும் அனுப்பப்படுகின்றது. அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்கவுள்ளவருக்கு சிறந்த இடம் கிடைக்கவேண்டும் என்று நான் வழிபடுகின்றேன் என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய கோத்தபாய ராஜபக்ச, எனது நண்பர் அமைச்சர் நவீன் திசநாயக்க அரச தலைவர் வேட்பாளராக என்னைப் பிரேரித்தமைக்காக நான் நன்றி கூறுகின்றேன். அவரது தந்தைக்கு கிடைக்காத மிகப் பெரிய இடம் அவருக்காவது கிடைக்க வேண்டும் என்று நான் வழிபடுகின்றேன். நான் அறிந்த வரையில் உங்களுடைய மாமனார் அரச தலைவர் வேட்பாளராக வருவார் என்று கூறப்படு கின்றது. அவருக்கும் உங்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

'அரச தலைவர் தேர்தலில் களமிறங்கத் தயாராகிவிட்டீர்களா? கரு ஜயசூரியா உங்களுக்கு சவாலாக அமைவாரா? போருக்குத் தலைமை தாங்கிய ஒருவரால் நாட்டை கொண்டு நடத்த முடியுமா? சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெற முடியுமா?' என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த கோத்தபாய, பொதுமக்கள் முன்னணியின் கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுவதற்கு நான் தயாராகவே உள்ளேன். கரு ஜயசூரியா போட்டியிடுவதாகக் கூறப்படுகின்றது. என்ன நடக்கப் போகின்றது என்று பார்ப்போம். சவால் எதுவும் இல்லை. மக்கள் என்னை வேட்பாளராகக் களமிறங்குமாறு கோருகின்றனர். அதற்கு நான் தகுதியானவன் என்று மக்கள் கருதுகின்றார்கள். நாட்டை நிர்வகிக்கும் வல்லமை என்னிடத்தில் இருக்கின்றது. அதனால்தான் மக்கள் அவ்வாறு கோருகின்றார்கள்.

சிறுபான்மை மக்கள் ஏனைய பொதுமக்களைப் போன்று நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். அதிலிருந்து மீள்வது என்றால் அதற்கான வழி என்னைத் தெரிவு செய்வதாகத் தான் இருக்கும். அதனை அவர்கள் உணர்ந்து செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது - என்றார்.

(ஒ.5,31)

## இணக்கப்பாடுள்ள இந்த ஆட்சியில் மதக் குழப்பங்களுக்கு தீர்வில்லை

### ஏன் என்று கேட்கிறார் மாநகர உறுப்பினர்

கொழும்பு, மார்ச் 22

இணக்கப்பாடுகள் காணப்படும் இந்த ஆட்சியில், மதக் குழப்பங்கள் ஏற்பட்டபோது அரசு அவற்றைக் கவனத்தில் கொள்ளாதது ஏன்? என்று கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ராஜ் பாஸ்கரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஐக்கிய தேசியக் கட்சி அரசு எப்போது ஆட்சிக்கு வந்தாலும் இனம் மதங்களுக்கு இடையிலான இணக்கப்பாடுகளே இடம்பெறுகின்றன.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தில் கடந்த சிவராத்திரி அன்று சிலைகள் மற்றும் லிங்கம் என்பன உடைக்கப்பட்டன. இந்தச் சம்பவம் திருகோணமலையில் நடந்தன. தொடர்ந்து மன்னார் திருக்கேதீச்சரத்திலும் இதேவிதமான சம்பவம் இடம்பெற்றது. ஆனால் ஐக்கிய தேசிய முன்னணி அரசு எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

சகல இன மக்களும் வழிபடும் வழிபாட்டு தலமான சிவனொளிபாதமலையின் பெயர் பதாகையில் உள்ள தமிழ், ஆங்கிலம் சொற்கள் அழிக்கப்பட்டு சிங்களத்தில் மட்டும் பெயர் பதிக்கப்பட்டுள்ளது. இதைச் செய்தது யார்? ஆளும் கட்சியிடம் இதைப் பற்றிக் கேட்டால் பொதுமக்களையே குறி வைக்கின்றனர்.

அரசிடம் வேலைவாய்ப்பைப் பற்றிப் பேசினால் எங்களின் உரிமையைப் பெற்றுக் கொள்ள முடியாது என்று இரா.சம்பந்தன் கூறுகிறார். எமது உரிமையில் ஒன்றுதான் வேலை வாய்ப்பு. அதற்காகவும் தான் போராட்டம் இடம்பெறுகின்றது. வேலை வாய்ப்பு எமது பங்கு. இலங்கையில் நூற்றுக்கு 20 வீதமான தமிழர்கள் வாழ்கின்றார்கள். இருக்கும் வேலைவாய்ப்பில் 20 வீதம் தமிழர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்- என்றுள்ளது.

(து)

## வடக்கு, கிழக்கு பெண்களுக்கு உதவி ஏதும் கிடைப்பதில்லை

### சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 22

கடந்த அரசு எவ்வளவோ நல்ல விடயங்களைச் செய்தது. தற்போதைய அரசு, வடக்குக் கிழக்குப் பெண்களின் தேவைக்காக ஒரு தொகை நிதியையேனும் ஒதுக்கீடு செய்யவில்லை. இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தெரிவித்தது.

இதுபற்றி அந்த அமைப்பின் பேச்சாளர் க.மகேஸ்வரி விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த அரசு வடக்கின் வசந்தம் என்ற செயற்றிட்டத்தின் ஊடாக கடன் வசதி, வீதி அபிவிருத்தி. கணவனை இழந்த பெண்களுக்கு சுயதொழில் பயிற்சி அழித்து,தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தது. அப்போது பெண்களுக்கு பாதுகாப்பு இருந்தது. பெண்கள் வீட்டில் இருந்தவாறே சுயதொழில் செய்தனர். கடந்த அரசு வழங்கிய பல சலுகைகளைத் தற்போதைய அரசு நிறுத்திவிட்டது. இந்த வரவு செலவுத் திட்டத்தில் விதவைகளுக்கோ பெண்களுக்கோ எந்தவிதமான ஒதுக்கீடும் செய்யப்படவில்லை என்றுள்ளது.

(து)

## பெண்களுக்கு தனியான நீதிமன்று

### இப்படியொரு வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 22

பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை உடனுக்குடன் தீர்த்து வைக்க வேண்டுமாக இருந்தால் எமது நாட்டிலும் பன்னாடுகளிலும் பெண்களுக்கென ஒரு தனி நீதிமன்றத்தை ஏற்படுத்திச் செயற்படுத்த வேண்டும். அப்படிச் செய்ய முடியுமாக இருந்தால் நிச்சயமாகப் பெண்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியும்.

இவ்வாறு கூறியுள்ளார் அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன்.

மலையக மக்கள் முன்னணியின் மகளிர் தின நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசு பெண்களின் நலனைக் கருத்திற் கொண்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர்கள் குறிப்பாக தாய்மார்களுக்கு உரிய பதிலை மிகவிரை வில் பெற்றுக் கொடுத்து அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம். - என்றார்.

(து)

## கூறுபவற்றைக் கேட்காதுவிட்டால் அமைச்சரவையிலிருந்து நீக்குக

### சேமசிங்க எம்.பி. தெரிவிக்கிறார்

கொழும்பு, மார்ச் 22

அரசதலைவர் கூறியவற்றைச் செய்யவில்லையெனில், அயலுறவு அமைச்சரை அமைச்சரவையிலிருந்து நீக்குங்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜெனிவாவில் இலங்கை மீதான தீர்மானம் குறித்துக் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு அமைவாக அயலுறவு அமைச்சர் தலைமையிலான தூதுக்குழுவினர் ஜெனிவாவில் செயற்படவில்லை என்றால் உடனடியாக அயலுறவு அமைச்சரை அமைச்சரவையிலிருந்து நீக்குவதோடு தொடர்புபட்ட ஏனையவர்களையும் பதவிகளிலிருந்த உடன் இடைநிறுத்த வேண்டும். நாட்டைக் காட்டிக்கொடுப்பதற்கு இடமளிக்க முடியாது - என்றார்.



(து-61)

## மலையகம் முன்னேறுவதற்கு தலைவர்களை மாற்றுங்கள்

### அமைச்சர் திகாம்பரம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 22

மலையகத்தில் மாற்றத்தைக் கொண்டுவரவேண்டுமானால் மலையகத்துக்கும் மலையக மக்களுக்கும் துரோகம் செய்யும் தலைவர்களிடமிருந்து மலையகத்தை மாற்றியமைக்கவேண்டும். அதற்கு எதிர்கால சந்ததியினர் முன்வரவேண்டும் என்று மலைநாட்டு புதிய கிராமங்கள்தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

பன்னாட்ட மகளிர் தினத்தையொட்டி, தொழிலாளர் தேசிய சங்கத்தின் மகளிர் பிரிவின் மகளிர் தின நிகழ்வு ஹற்றன் டி.கே. டபிள்யூ கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலையகத்தில் உள்ள பெண்கள் அரசியலிலும் கலந்து கொண்டுமலையகத்தில் முன்மாதிரியாக விளங்கவேண்டும். நாட்டில் பெண்கள் பல்வேறு அபிவிருத்தியோடுவாழ்ந்து வருகிறார்கள். மலையகப் பெண்கள் கொழுந்து பறிப்பதும் காலையில் இருந்து மாலைவேலை தொழில்புரிவதை வழக்கமாக செய்து வருகிறார்கள். இதற்குக் காரணம் மலையக தொழிற்சங்கத் தலைவர்கள்.

(து)

## நீங்கள் மீண்டு வருவீர்கள்

# மகிந்தவிடம் கூறிய சிவ்சங்கர் மேனன்

கொழும்பு, மார்ச் 22

கடந்த அரச தலைவர் தேர்தலில் நீங்கள் (ராஜபக்ச) தோற்றாலும் மீண்டும் இலங்கை அரசியலில் எழும்பி வந்துவிடுவீர்கள் என்பது எனக்குத் தெரியும். இவ்வாறு மகிந்த ராஜபக்சவிடம் நேரடியாகத் தெரிவித்திருக்கின்றார் சிவ்சங்கர் மேனன்.

பாத்பைண்டர் அமைப்பின் நிகழ்வில் கலந்து கொள்ள வந்திருந்த இந்திய முன்னாள் அயலுறவுத் துறை செயலர் சிவ்சங்கர் மேனன் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

வெளியுறவுத் துறை செயலராக இருந்து தேசிய பாதுகாப்பு ஆலோசகராக கடமையாற்றிய மேனன் இலங்கை விடயங்களை கையாண்டவர். பழுத்த இராஜதந்திரி. போர்க் காலத்தில் மகிந்த அரசுடன் மிகவும் ஒத்துழைத்து செயற்பட்டவர். அப்படி கடந்த காலங்களில் அளித்த ஒத்துழைப்புக்காக அவருக்கு நேற்றுமுன்தினம் சந்திப்பில் தெரிவித்தார் மகிந்த.

அப்போது அவர் அரசியல் பேச்சுக்களுடன் முக்கிய விடயம் ஒன்றையும் குறிப்பிட்டார் மேனன். 'கடந்த அரச தலைவர் தேர்தலில் நீங்கள் (ராஜபக்ச) தோற்றாலும் மீண்டும் இலங்கை அரசியலில் எழும்பி வந்துவிடுவீர்கள் என்பது எனக்குத் தெரியும், என்று கூறியுள்ளார் மேனன். அதனைக் கேட்டு வியந்த மகிந்த, நன்றி. இதே கருத்தை இந்து பத்திரிகையின் ராம் கூட என்னை சந்தித்த போது கூறியிருக்கிறார் என்று அதற்குப் பதிலளித்தார் மகிந்த.

(ஒ.5)

# மந்த கதியில் இலங்கை

## சாடுகிறது சுவிஸ்

கொழும்பு, மார்ச் 22

மனித உரிமைகள் தொடர்பான விடயங்களைச் செயற்படுத்தும் இலங்கையின் மந்தகதியான செயற்பாட்டுக்கு சுவிஸ்லாந்து எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற 40 ஆவது கூட்டத் தொடரில் உரையாற்றிய போதே சுவிஸ்லாந்து பிரதிநிதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மனித உரிமைகள் விடயங்களில் இலங்கையின் மந்தமான செயற்பாடு மற்றும் பன்னாட்டு மனிதாபிமான சட்ட மீறல்களுக்கு சுவிஸ்லாந்து எச்சரிக்கை விடுத்தது.

தேர்தலை நடத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதம் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி பணிகளில் உள்ள மந்தச் செயற்பாட்டுக்கு சுவிஸ்லாந்து கண்டனம் தெரிவித்துள்ளது. (ஒ.5)

# மைத்திரியின் அறிவிப்பு கவலையளிக்கின்றது

## ஜேர்மன் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 22

சாவுத் தண்டனையை மீண்டும் செயற்படுத்தும் இலங்கையின் நடவடிக்கை கவலையளிப்பதாக ஜேர்மனி தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற 40 ஆவது கூட்டத் தொடரில் உரையாற்றிய போதே ஜேர்மன் பிரதிநிதி இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்று வரும் இடைக்கால செயற்பாடுகளில் உள்ள முன்னேற்றத்தை ஜேர்மனி இதன்போது பாராட்டியுள்ளது.

மீள்குடியேற்றங்கள் தொடர்பான விடயங்களிலும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணியகத்தின் செயற்பாடுகளில் காணப்படும் முன்னேற்றத்துக்கும் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளது.

இலங்கையின் ஜனநாயக கட்டமைப்புக்களை மேம்படுத்தும் செயற்பாட்டுக்கு ஜேர்மனி தொடர்ந்தும் தமது ஆதரவை வழங்கும் என்று ஜேர்மன் பிரதிநிதி கூறியுள்ளார்.

இதேவேளை இலங்கையில் மீண்டும் சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டுக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரும் கவலை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## அனைவரும் ஏற்கும் வேட்பாளர் வருவார்!

ஐ.தே.கட்சி கூறுகிறது

கொழும்பு, மார்ச் 22

அனைத்து தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வேட்பாளரையே எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில் களமிறக்க எதிர்பார்த்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

காலியில் நேற்றுமுன்தினமிரவு நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

நாடே ஏற்றுக் கொள்ளும், நாடே அன்பு செலுத்தும் அனைத்து தரப்பினர்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வேட்பாளரையே எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி களமிறக்கவுள்ளது.

அந்த விடயம் தொடர்பாக இப்போதே கருத்து தெரிவிப்பது தகுந்ததல்ல.

மரியாதைக்குரிய கட்சி என்ற ரீதியில் அனைவரது ஆசியுடனும் குறித்த விடயத்தை வெளியிடுவோம். அதற்காக அனைவரது ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (த)

## விபத்தில் இருவர் சாவு

கொழும்புகண்டிமுதன்மை வீதியின் கேகாலை, கரண்டுபன பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தும் வான் ஒன்றும் மகிழுந்து ஒன்றும் ஒன்றுடன் ஒன்று நேற்றுமுன்தினம் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

மகிழுந்தில் 5 பேர் பயணித்தனர். அதில் பயணித்தவர்களில் இருவரே உயிரிழந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் கேகாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பேருந்து ஓட்டுநர் கைதுசெய்யப்பட்டுள்ளார். விசாரணை நடக்கிறது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-222)

போர்க் குற்றம் புரிந்தோருக்கு

# இலங்கை நீதிமன்றால் தண்டனை வழங்கலாம்!

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 22

போர்க் குற்றம் புரிந்தவர்கள் உள்ளனர்தான். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் அறிவிக்கப்பட்டுத் தான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றில்லை. இலங்கையில் நீதித்துறை தற்போது சுயாதீனமாகச் செயற்படுகின்றது. ஆகவே இலங்கையில் காணப்படுகின்ற சட்டங்களுக்கு அமைவாக அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் பொன்சேகா தெரிவித்தார்.

ஜெனிவாவில் இலங்கை மீதான தீர்மானம் குறித்துக் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

படைவீரர்கள் போர் நடைபெற்ற காலத்தில் எந்தவிதமான குற்றங்களையும் இழைக்கவில்லை. போர் நிறைவடைந்ததன் பின்னர் சில படை அதிகாரிகள் மற்றும் வீரர்கள் சில குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளனர். இந்த விடயத்தில் கவனம் செலுத்தி, மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் அறிவிக்கப்பட்டுத் தான் அவர்களின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றில்லை. இலங்கையில் நீதித்துறை தற்போது சுயாதீனமாகச் செயற்படுகின்றது. ஆகவே இலங்கையில் காணப்படுகின்ற சட்டங்களுக்கு அமைவாக அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றார்.

வெள்ளைக்கொடி விவகாரத்தில் தங்கள் மீது குற்றச்சாட்டுக்கள் உள்ளனவே? என்று கேள்வி எழுப்பியபோது, என்னிடத்தில் சாட்சியங்கள் உள்ளன. யார்யார் பேசினார்கள். என்ன பேசினார்கள் என்பது தொடர்பில் வீடியோ உள்ளிட்ட சாட்சி ஆதாரங்கள் உள்ளன. ஆகவே தேவைப்படுமானால் அவற்றை முன்வைப்பதற்கும் நான் தயங்கப்போவதில்லை. குற்றமிழைத்தவர்கள் நான்கு ஐந்து பேர் உள்ளார்கள். அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும் - என்றார். (த-61)

## விபத்தில் 6 பேர் காயம்

கொழும்பு, மார்ச் 22

கொழும்பு - புத்தளம் முதன்மை வீதியின் கலாஓயா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஆறு பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு தனியார் பேருந்துகள் நேற்று நேருக்கு நேர் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரின் நிலமை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிப்பதாக இராஜாங்கனைப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

# இலங்கை விவகாரத்தில் குற்றவியல் தீர்ப்பாயம் மூலமே நீதியை நிலைநாட்ட முடியும்

## ஐ.நா. ஆணையர் ஏற்பாரா என்று கஜேந்திரகுமார் கேள்வி

ஜெனிவா, மார்ச் 22

போர் நிறைவடைந்து 10 ஆண்டுகள் ஆகின்ற நிலையில், இலங்கையை பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுவதன் மூலம் அல்லது இலங்கைக்கான சிறப்பு பன்னாட்டுக் குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றை நிறுவுவதன் மூலம் மாத்திரமே பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான குற்றவியல் நீதியை நிலைநாட்டலாம் என்பதை ஆணையாளர் ஏற்றுக் கொள்வாரா? இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கை மீதான இடையீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு, மனித உரிமைகள் சபையின் தலைவரிடம் கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்;த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இது தொடர்பில் அவரது கட்சியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான விசாரணை அறி க்கை 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வெளியான போது, இலங்கையின் பாதுகாப்பு மற்றும் நீதித்துறை கட்டமைப்பு ரீதியான சீர்குலைவு மற்றும் கட்மைப்பு ரீதியான ஊழல் காரணமாக எந்தவொரு உள்ளக பொறுப்புக்கூறல் பொறிமுறையும் போதுமானதாக அமைந்திராது என்பது அந்த அறிக்கையின் முக்கிய முடிவு களில் ஒன்றாக அமைந்திருந்தது. இந்தப் பின்னணியிலேயே அந்நாள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உள்ளக பொறுப்புக்கூறலை விடு த்து கலப்பு நீதிப்பொறிமுறை ஒன்றை நிறுவ வேண்டும் என்று பரிந்துரை செய்திருந்தார்.

இலங்கை அரசானது வெறுமனே கடமைக்காவே ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் தொடர்பாடலை பேணுகிறதே தவிர, பொறுப்புக்கூறல் தொடர்பில் தான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்று 2018 ஆம் ஆண்டு மார்ச், மனித உரிமைகள் சபையின் 37 ஆவது அமர்வின் போது மனித உரிமைகளை ஆணையாளர் அலுவலகம் அளித்த வாய்மூல விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டது. இதனடிப்படையில், இலங்கையில் குற்றவியல் பொறுப்புக்கூறலை நிலைநாட்டுவதற்கு பன்னாட்டு நியாயாதிக்கம் உட்பட்ட 'மாற்று வழிகளை' உறுப்பு நாடுகள் ஆராய வேண்டும் என்று மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் கேட்டுக் கொண்டது.

இந்த அமர்வுகள் நடந்தேறிக்கொண்டிருக்கும் இதே வேளை, குற்றவியல் பொறுப்புக்கூறலை கோரி போராடி வரும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடம் இலங்கையின் தலைமை அமைச்சர் அக்குற்றங்களை மன்னித்து மறந்துவிடுமாறு வெளிப்படையாகக் கோரியுள்ளார். இலங்கை அரசின் உயர் மட்ட தலைவர்கள் குற்றவியல் பொறுப்புக்கூறலை தொடர்ந்தும் ஒருமனதாக நிராகரித்து வரும் நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் இந்த அடிப்படை அபிலாசையை நிறைவேற்ற முடியாது என தெட்டத் தெளிவாக புலப்படுகிறது.

போர் நிறைவடைந்து 10 வருடங்கள் ஆகின்ற நிலையில், இலங்கையை பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுவதன் மூலம் அல்லது இலங்கைக்கான சிறப்பு பன்னாட்டுக் குற்றவியல் தீர்ப்பாயத்தை நிறுவவதன் மூலம் மாத்திரமே பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான குற்றவியல் நீதியை நிலை நாட்டலாம் என்பதை ஆணையாளர் ஏற்றுக்கொள்வாரா? என்று கேள்வி எழுப்பியதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஒ.5)

# விபச்சாரம் செய்துகொண்டு அதைத் தடுக்க விழிப்புணர்வு

## பிரிட்டனின் செயற்பாடு இப்படியே என்று கூறுகிறார் வீரவன்ச எம்.பி.

கொழும்பு, மார்ச் 22

விபச்சாரம் செய்துகொண்டு மறுபக்கத்தில் விபச்சாரம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் பரப்புரைச் செயற்பாடு போன்றுதான் பிரிட்டனின் செயற்பாடுகள் உள்ளன.

இவ்வாறு கூறியுள்ளார், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏமக்குச் சொந்தமான கோடிக்கணக்கான பெறுமதி வாய்ந்த தொன்மையான பொருள்களைப் பிரிட்டன் தங்கள் வசம் வைத்திருக்கின்றது. இவ்வாறு வெட்கமின்றிச் செயற்படுகின்ற பிரிட்டனுக்கு இலங்கையின் மனித உரிமைகள் பற்றிப் பேசுவதற்கு என்ன அருகை இருக்கின்றது? ஜெனீவாவில் இணை அனுசரணை வழங்குவதன் மூலம் அரசியல் ரீதியான பலவீனமும் வெளிநாடுகளின் தலையீடுகளும் தான் அதிகரிக்கப்போகின்றது. - என்றார். (த-61)

# பாணந்துறை பதற்றம் தணிந்து இயல்புநிலை

கொழும்பு, மார்ச் 22

பாணந்துறை, சரிக்கமுல்ல திக்கல பகுதியில் இரண்டு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலை அடுத்து, அந்த பகுதியின் பாதுகாப்புத் தொடர்ந்தும் பலப்படுத்தப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு நிலவிய பதற்றநிலை தணிந்துள்ளது. இயல்பு நடவடிக்கை வழமைக்கு திரும்பியுள்ளது.

பாணந்துறை பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு இரண்டு குழுக்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவிக்கின்றது.

வாகன விபத்தொன்றால் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுவடைந்த நிலையிலேயே, இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மூவர் காயமடைந்துள்ளதுடன், அவர்கள் பாணந்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் நேற்றுமுன்தினம் இரவே ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பாணந்துறை, திக்கல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தை அடுத்து, சிங்களவர் ஒருவருக்கும், முஸ்லிம் ஒருவருக்கும் இடையிலேயே இந்த வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதன் போது, நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து, மோதல் சம்பவம் வலுப்பெற்றதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

சம்பவத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக சம்பவ இடத்துக்கு சிறப்பு அதிரடிபடையினர் வரவழைக்கப்பட்டனர். பாணந்துறை பகுதியின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தொடர்ந்தும் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பாணந்துறை வடக்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ.5)

# மகிழ்ச்சி குறைந்தோராக மாறும் இலங்கையர்கள்

## ஐ.நா. அறிக்கை கூறுகிறது

*கொழும்பு, மார்ச் 22*

*உலக மகிழ்ச்சி சுட்டெண்ணில், 2018ஆம் ஆண்டு 116ஆவது இடத்திலிருந்த இலங்கை 14 இடங்களை இழந்து 130ஆவது இடத்துக்குச் சென்றுள்ளது.*

ஐக்கிய நாடுகள் சபையானது கடந்த 2012ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் திகதியை உலக மகிழ்ச்சி நாளாக அறிவித்தது. உலகளவில் மகிழ்ச்சியாக உள்ள 156 நாடுகளைப் பற்றிய தரவரிசை அடங்கிய அறிக்கையினை ஐ.நா. வெளியிட்டு வருகிறது.

இந்த அறிக்கையானது நாடுகளில் வருமானம், சுதந்திரம், நம்பிக்கை, ஆரோக்கிய வாழ்க்கைக்கான வளம், சமூக ஆதரவு, இரக்க குணம் ஆகிய 6 முக்கிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையின்படி, கடந்த சில வருடங்களில் ஒட்டுமொத்த உலக மகிழ்ச்சியானது குறைந்துள்ளது என்று தெரிய வந்துள்ளது.

நாட்டு மக்கள் எப்படி மகிழ்ச்சியுடன் உள்ளனர் என்பது பற்றிய உலக நாடுகளின் அறிக்கையில், துன்பம், வருத்தம் மற்றும் கோபம் உள்ளிட்ட எதிர்மறை எண்ணங்கள் அதிகரித்து உள்ளன எனவும் குறிப்பிடப்பட்டு உள்ளது.

இந்த அறிக்கையில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக பின்லாந்து முதல் இடத்தில் உள்ளது. இதனை தொடர்ந்து டென்மார்க், நோர்வே, ஐஸ்லாந்து மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன.

(ஒ.5)

## அர்ஜுன் மகேந்திரன் விவகாரம்

# சிங்கப்பூரோடு மோதுகிறது மைத்திரிபாலவின் தரப்பு

கொழும்பு, மார்ச் 22

அர்ஜுன் மகேந்திரனை இலங்கைக்கு கொண்டுவருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசியல் மற்றும் இராஜதந்திர மட்டத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்துள்ளார். இதற்கான சட்டரீதியிலான ஆவணங்களும் இறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பில் அரசதலைவர் தரப்பிலிருந்து விரைவில் சிங்கப்பூருக்கு விளக்கமளிக்கப்படும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெறும் குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ, அர்ஜுன் மகேந்திரனை இலங்கையிடம் ஒப்படைப்பதில் சிங்கபூர் மந்தகதியில் செயற்படுகின்றது. அந்நாட்டு தலைமை அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தும் பயன் இல்லை என்ற தொனியில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கருத்து வெளியிட்டிருந்தார். சிங்கபூர்நாட்டின்சட்டத்தின்பிரகாரம்நடவடிக்கைஎடுப்பதற்கு தேவையான ஆவணங்களை இலங்கை அரசு இன்னும் கையளிக்கவில்லை என்றுசிங்கபூர்தரப்பிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் அரசின் நிலைப்பாடு என்ன? என்று கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர, அர்ஜுன் மகேந்திரனை இலங்கைக்கு கொண்டுவருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசியல் மற்றும் இராஜதந்திர மட்டத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்துள்ளார். இதற்கான சட்ட ரீதியிலான ஆவணங்களும் இறுதிபடுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பில் அரச தலைவர் தரப்பிலிருந்து விரைவில் சிங்கபூருக்கு விளக்கமளிக்கப்படும் - என்றார்.

(ஒ.5)

# கூட்டமைப்பின் தலைமைகள் இரட்டை வேடம் போடுகிறன

## ஆனந்தன் எம்.பி. குற்றச்சாட்டு

வவுனியா, மார்ச் 22

தமிழ் மக்களால் அண்மைய நாள்களில் நடத்தப்படும்போராட்டங்களில்தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்கள் கலந்துகொள்கின்றமை அவர்களின் இரட்டை முகத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனிதஉரிமைப்பேரவையில் 30.1 தீர்மானம் முன்வைக்கபட்டபோது அது பன்னாட்டு விசாரணையா, உள்நாட்டுவிசாரணையா என்று சொற்களில் தொங்கி கொண்டிருக்காமல் அதன் உள்ளடக்கத்தையே பார்க வேண்டும் என்று சுமந்திரன் வலியுறுத்தியிருந்தார். தற்போது புதுக்கதை ஒன்றை கூறுகின்றார், மனித உரிமைப் பேரவைக்குக் காலநீடிப்பு வழங்கப்படவில்லை கண்காணிப்பதற்காகவே இந்த இரண்டு வருடங்கள் வழங்கப்படுகின்றன என்று. இது தமிழ் மக்கள் மீதுள்ள நலனுக்கு மாறாக அரசைப் பாதுகாப்பதாகவே அமைந்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் அமைக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்றில் ஆதரவாக வாக்களிக்கின்றார்கள். அந்த அலுவலகத்தில் நம்பிக்கை இல்லை என்று தமிழ் மக்களால் மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்களிலும் கலந்து கொள்கின்றார்கள். பாதுகாப்புக்காக அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வரவு-செலவுத் திட்டத்தை விமர்சித்துவிட்டு அதற்கு ஆதரவாக வாக்களிக்கின்றார்கள். இது அவர்களுடைய இரட்டைமுகத்தையே காட்டுகின்றது. இத்தகைய முன்னுக்குபின்முரணானதன்மை தொடர்பாகதமிழ்மக்கள்புரிந்து கொள்ளவேண்டும்.

இவர்களால் தெரிவிக்கப்படும்கருத்துக்கள் பன்னாட்டு ரீதியில் அரசுக்குச் சாதகத்தை ஏற்படுத்துகின்றது.

மாற்றுத்தலைமை தொடர்பாக நாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றோம். முதற்தடவையாக ஐந்து கட்சிகள் இணைந்து ஐக்கிய நாடுகள் சபைக்கு மனு அனுப்பி வைத்துள்ளோம். இதிலே சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் போன்றவர்களும்கையெழுத்திட்டுள்ளனர். அவர்கள் வெறுமனே கையெழுத்து மாத்திரம் வைத்துக் கொடுக்கப் போகின்றார்களா அல்லது தமிழ் மக்களின் மாற்றுத் தலைமைக்கான பாதையில் தொடர்ந்து பயணிப்பார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் - என்றார்.

(த-110)

# தண்ணீர் வளத்தைப் பாதுகாக்க சகலரும் பங்களிக்க வேண்டும்

## நீர் தினத்தையொட்டி ரணில் அறிவுறுத்து

கொழும்பு, மார்ச் 22

எம்மிடம் காணப்படும் இயற்கையான தண்ணீர் வளத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டுமாயின் மக்கள் அனைவரினதும் செயற்றிறனான பங்களிப்பு அவசியம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



பன்னாட்டுநீர் தினம் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது. அதையொட்டி அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை நீர் வளத்தைக் கண்ணியமாக நோக்கிய நாடு என்ற வகையில் நினைவுக்கெட்டியகாலந்தொட்டு குடிதண்ணீர் வழங்கல், குடிதண்ணீர் முகாமைத்துவம், நீர்ப்பாதுகாப்புத் தொடர்பாக முக்கிய கவனத்தைச் செலுத்தி வந்துள்ளது. தண்ணீர் முகாமைத்துவம் தொடர்பாகப் புதிய எண்ணக்கருக்களைப் பரீட்சித்துப் பார்த்து நீர்ப்பாசனத் துறையை மென்மேலும் முன்னேற்றி மக்களுக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுத்த தனிச் சிறப்பான நீர்ப்பாசன வரலாறு எமது நாட்டுக்குக் காணப்படுகிறது.

ஐக்கியநாடுகள்அமைப்பு அறிவித்துள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களிடையே அனைவருக்கும் தண்ணீர் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்ளுதல், அவற்றின் நிலைபேறான முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தல் தொடர்பாக முக்கிய கவனஞ் செலுத்தப்படுகிறது. அதன் அங்கத்துவ நாடு என்றவகையில் அந்த நிலைபேறான நோக்கங்களை அடைந்துகொள்ள ஒத்துழைப்பு வழங்குவது எமது பொறுப்பு.

முழு உலகமும் குடிதண்ணீர், பாவனைக்கான தண்ணீர் தொடர்பில் கடுமையான பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள சந்தர்ப்பத்தில், எமது பண்டைய தண்ணீர் முகாமைத்துவ மரபுரிமைக்குப் புதிய பெறுமதியைச் சேர்த்து எமது தண்ணீர் மூலங்களைப் பாதுகாத்தல், அவற்றின் நிலைபேறான முகாமைத்துவம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வது காலத்துக்குத் தேவையான மிக முக்கியமான பணி.

அதற்காகச் சமூகத்துக்கு விழிப்புணர்வு வழங்கி விரிவான வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்த உலக நீர் தினத்தைப் பெறுமதியான சந்தர்ப்பமாக ஆக்கிக் கொள்வோம் -என்றுள்ளது.

(த)

# சம்பூர் அனல் மின்நிலையம் இல்லாததன் அருமை புரியும்

## மகிந்த ராஜபக்ச கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 22

சம்பூரில் மின்சார நிலையமொன்றை அமைப்பதற்கு அனைத்துச்செயற்பாடுகளையும் எடுத்து, அடுத்த கட்டத்துக்கு எடுத்துச்செல்வதற்கான அனைத்து விடயங்களையும் தயாராக வைத்திருந்த நிலையில் ஐ.தே.க அரசு அதனை நிறுத்தியிருந்தது. அதன் தாக்கத்தை எதிர்காலத்தில் அரசு புரிந்துகொள்ளும் நிலை உருவாகும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். தங்காலையில் புதிய கட்டடத்தொகுதியை நேற்றுமுன்தினம் திறந்து வைத்துஉரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள் பங்குபற்றியிருக்கவில்லை. மூன்றாவது வாசிப்பில் அவர்கள் நிச்சயமாக எதிர்த்து தமது வாக்குகளைப் பயன்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

நாட்டில் இருள் சூழ்வதாகக் கூறுகின்றார்கள். நான் எத்தனையோ ஏச்சுக்களை வாங்கிக்கொண்டு தான் நுரைச்சோலையை அமைத்தேன். அதை அமைத்திராவிட்டால் தற்போதைய நிலைமை என்ன? நாட்டுக்கு 40சதவீத மின்சாரத்தை அது வழங்குகின்றது அல்லவா? - என்றார்.

இங்கு உரையாற்றிய நாடாமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர, அரசதலைவர் தேர்தல் தொடர்பில் பொதுமக்கள் முன்னணியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் எவ்வாறு இணையப் போகின்றன, எப்படி வேட்பாளரைத் தெரிவு செய்யப்போகின்றார்கள் என்றெல்லாம் எம்மிடத்தில் கேள்விக்கணைகளைத் தொடுத்துக்கொண்டே இருந்தார்கள். நாங்கள் தற்போது எதிர்க்கட்சியில் இருக்கின்றோம். மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் நோக்கம் எமக்கு இல்லை. அந்தக் கட்சியின் வேட்பாளர் வெற்றி பெறுவதற்கும் இடமளிக்க முடியாது. நாட்டின் எதிர்காலம் சம்பந்தமாக சிறந்த கொள்கைகளுடன் பயணிக்கின்ற செயற்றிட்டம் தான் எமக்கு முக்கியமாகின்றது. - என்றார்.

(த-61)



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலை வாரம் நேற்று ஆரம்பமானது. தமிழர் பாரம்பரியங்களை பறைசாற்றும் நோக்கில் இந்த விழா வருடாந்தம் கடைப்பிடிக்கப்படுகிறது. இதன் ஆரம்ப நிகழ்வு பரமேஸ்வரா ஆலய முன்றிலில் கோலாகலமாக ஆரம்பமானது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் இ.விக்னேஸ்வரன் கலந்து கொண்டார். மாணவர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-7)

## தமது மயானத்தில் தகனம் செய்ய அனுமதிக்கக்கோரிப் போராட்டம்

### வலி.தெற்கு பிரதேச சபையில் இடம்பெற்றது

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் வடக்கில் பிள்ளையான் மயானத்தில் தமது உறவுகளின் உடல்களைத் தகனம் செய்ய அனுமதிக்குமாறுகோரிப் பொது மக்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் கதவுகளை அடைத்துப் போராட்டம் நடத்தினர்.

வலி.தெற்குப் பிரதேச சபையின் முன்பாக நேற்றுக் காலை இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. சபை உறுப்பினர்களும், அலுவலர்களும் உள்நுழையாதவாறு மக்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின்போது, 'சுடலை வேண்டும் சுடலை வேண்டும், அத்துமீறிய குடியேற்றத்தை அமைக்க நாங்கள் கோரவில்லை. பரம்பரையாகப் பயன்படுத்திய சுடலை எமக்கு வேண்டும்' என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட அட்டைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

கூடாதென்று, பிரதேச சபையினர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். நீதிமன்றில் தடை உத்தரவு வழங்கப்பட்டது, 15 அடி உயர மதில்கள் அமைத்தும், மின்சாரம் பயன்படுத்தித் தகனம் செய்வதற்கான அனுமதிகளும் வழங்கப்பட்டன என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். மின்சார தகன இயந்திரம் அமைக்க வலி.தெற்குப் பிரதேச சபைக்கு நீதிமன்று உத்தரவிட்ட நிலையில், இது வரையில் அது அமைக்கப்படவில்லை. மயானத்தில் எரிக்கக்கூடாதென்றும் பிரதேச சபையினர் தடை விதிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச சபையினர், நீதிமன்றுக்கு உரிய பிரச்சினையைத் தெரிவித்து, பரம்பரையாகப் பயன்படுத்திய அந்த மயானத்தில் எரிப்பதற்கான அனுமதியைப் பெற்றுத்தர வேண்டும். அனுமதி பெற்றுத்தராதவிடத்து, வலி.தெற்குப் பிரதேச சபையில் இறந்த



புன்னாலைக்கட்டுவன் வடக்கு பிள்ளையான்காடு மயானத்தை 5 தலைமுறையாக அந்தப் பகுதி மக்கள் தகனம் செய்வதற்காக பயன்படுத்தி வந்துள்ளனர். மயானத்துக்கு அருகாமையில் பிரதேச செயலகத்தினர் மக்களைக் குடியமர்த்தினர். மயானத்துக்கு அருகாமையில் குடியமர்த்தி விட்டு, எமது மயானத்தில் தகனம் செய்ய வேண்டாம் வேறு மயானத்தில் தகனம் செய்யுமாறு பிரதேச சபையினர் எம்மைக் கட்டாயப்படுத்துகின்றனர். இதை ஏற்றுக் கொள்ள முடியாது.

சடலங்களை எமது மயானத்தில் தகனம் செய்யக் உறவுகளின் உடலை தகனம் செய்வோம் என்றும் எச்சரிக்கை விடுத்தனர்.

சபைக்கு வந்த தவிசாளரை போராட்டகாரர்கள் சபைக்குள் செல்ல அனுமதிக்கவில்லை. சபை அமர்வில் இந்தப் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடி, நீதிமன்றுக்குத் தெரியப்படுத்துவதாகவும், உறுப்பினர்களை சபைக்குள் செல்ல அனுமதித்துக் கதவைத் திறக்குமாறும் தவிசாளர் கேட்டுக் கொண்டார். உரிய நடவடிக்கை எடுக்காவிடின் போராட்டம் முன்னெடுப்போம் என்று போராட்டக்காரர்கள் கூறிக் கலைந்து சென்றனர். (து-106)

### 16 பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக்குதல்

# ஆளுநரினுடைய நடவடிக்கைகள் மாகாண அரசை மலினப்படுத்தும்



யாழ்ப்பாணம், மார்ச் 22

**வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள 14 பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக மாற்றுவதற்கு வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் மேற்கொள்ளும் நடவடிக்கையானது மாகாண அரசை மலினப்படுத்தும் செயல் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

13ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையில் உள்ள ஒரு சபையின் ஆளுநர் மத்திக்கும் மாகாணத்துக்குமான தொடர்பாடலாகவும் மத்தியில் இருந்து மாகாணத்துக்கு அதிகாரங்களைக் கொண்டு வருபவருமாகவே இருத்தல் வேண்டும். அதேநேரம் மாகாண சபைக்கு அளிக்கப்பட்ட சட்ட உரித்தைத் தாண்டிச் செல்லும் இடத்தில் கேள்வி எழுப்ப முடியுமே அன்றி மாகாணத்தில் உள்ள அதிகாரங்களையும் பறித்து மத்திக்குக் கொண்டு செல்லும் பணியை ஆளுநர் மேற்கொள்ள முடியாது. ஒரு புறத்தில் அதிகாரப் பகிர்வு, பகிர்ந்தளித்தல் எனக் கூறிக்கொண்டு இருக்கும் அதிகாரத்தையும் பறித்து வடக்கு மாகாணக் கல்வி அமைச்சை மலினப்படுத்த ஆளுநர் மேற்கோள்ளும் திரை மறைவு நடவடிக்கையினை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அரச தலைவரின் பிரதிநிதியாக ஜெனீவா சென்றாலும் வடக்கு மக்களின் குரலையும் ஒலிப்பேன் எனக் கூறிய ஆளுநர் வடக்கு - கிழக்கு மக்கள் தமக்கான அதிகாரப்பகிர்வாக மாகாண சபை போதாது முழுமையான அதிகாரப்பகிர்வே வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து வரும்இந்தச் சூழலில் ஒரு கரத்தால் கொடுத் ததை மறுகரத்தால்பிடுங்கும்செயற்பாட்டையே மேற்கொள்கின்றார் - என்றார். (ம-105)

## பாடசாலைகளை கொழும்புக்கு கையளித்தல் பொருத்தமற்றது

### ஆளுநரின் முயற்சியை சிவஞானமும் விமர்சிக்கின்றார்



யாழ்ப்பாணம், மார்ச் 22

14 பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக தரமுயர்த்தும் வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் நடவடிக்கை பொருத்தமற்றதொன்று. இந்த நடவடிக்கையால் மாகாண நிர்வாகம் சிறிய பாடசாலைகளுடன் திருப்திப்பட வேண்டியிருக்கும் என்று தெரிவித்தார் வடமாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

இந்த விடயம் தொடர்பில் வடமாகாண அவைத்தலைவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

அரசியல் கொள்ளை ரீதியாக அதிகாரைப்பகிர்வைவேண்டி விரும்பி நிற்கின்ற நாம், ஏற்கனவே எம்மிடம் உள்ள அதிகாரங்களையும் கொழும்புக்கு பாரப்படுத்த முயல்வது பொருத்தமற்றதும் உடன்பட முடியாததுமாகும். வடமாகாணத்தில் உள்ள தரமான பாடசாலைகளை கொழும்புக்கு வழங்கினால்மாகாணநிர்வாகங்கள் சிறிய பாடசாலைகளுடன் திருப்திப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். மாகாணப் பாடசாலைகளில் சில தேவைகளும், குறைபாடுகளும்இருக்கலாம். அவை சரிசெய்யப்பட வேண்டுமே தவிர கொழும்புக்கு கையளித்தல் பொருத்தமற்றது - என்றுள்ளது. (ம)


## சொற்பொழிவு

சாவகச்சேரி நகரசபையினர் புனித திரிபீடக வாரத்தையொட்டி சிறப்புச் சொற்பொழிவை சபையின் பொன்விழா மண்டபத்தில் நேற்று நடத்தினர்.

தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிவஸ்ரீ க.கிருபுனந்தக் குருக்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நாகவிகாராதிபதி விமலசார தேரர்கலந்து கொண்டு சிறப்புச்சொற்பொழிவாற்றினார். (ம-9)



வட்டுக்கோட்டை சங்கரத்தை பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது. திருவிழாவுக்கு வருகைதந்த முன்னாள் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வழிபாட்டில் ஈடுபட்டதுடன் தாகசாந்தி நிலையத்தில் பக்தர்களுக்கு நீராகாரத்தையும் வழங்கி வைத்தார். (ம)







நியூசிலாந்தின் கிறைஸ்ட்சேர்ச் நகரில் உள்ள இரு மசூதிகளில் கடந்த 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட இருவேறு துப்பாக்கிச்சூட்டில் 50 பேர் உயிரிழந்தனர். அவர்களுக்கு நியூசிலாந்தின் பல பகுதிகளிலும் பரவலாக அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது.







## தமிழ்...

ருந்தனர் என்று நீதிமன்றத்துக்கு நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் சலனி பெரேரா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, அந்தக் காலப்பகுதியில் கடற்படையின் தளபதியாக செயற்பட்ட ஜயந்த பெரேரா மற்றும் கடற்படையின் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக செயற்பட்ட ரியல் அட்மிரல் ஆனந்த குருகே உள்ளிட்ட சில உயர்மட்ட அதிகாரிகள் இந்தக் கடத்தல் தொடர்பில் அறிந்திருந்தனர் என்று மன்றுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் சாட்சியாளர்களிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில், விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

கொலைக் குற்றங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் குற்றப்புலனாய்வுத் திணைக்களப் பிரிவின் பொறுப்பதிகாரி நிஷாந்த சில்வா, மேலதிக அறிக்கை ஒன்றினூடாக நீதிமன்றத்துக்கு இந்த விடயங்களை நேற்றுத் தெரிவித்துள்ளார். இதன்போது, வழக்கின் இரண்டாவது சந்தேகநபராகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள, கடற்படையின் லெப்டினன் கமாண்டர் சம்பத் தயானந்தவை எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம், கொழும்பு - கொட்டாஞ்சேனை மற்றும் பொரளை - வெல்லம்பிட்டி ஆகிய பகுதிகளில் வசித்த வடிவேல் லோகநாதன் மற்றும் ரத்னசாமி பரமாநந்தன் ஆகியோர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டனர். இவர்களைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான வானை, 72 துண்டுகளாக வெட்டி, வெலிசர கடற்படை முகாமில் மறைத்துவைத்திருந்தபோது அது கண்டுபிடிக்கப்பட்டது என்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். (ம)

## வடமாகாண...

டார் விளையாட்டுக் கழகமும் இணைந்து முதன்முறையாக வடக்குமாகாணத்தில் கார்ப்பந்தயப் போட்டியை நடத்தவுள்ளன.

இயக்கச்சியில் நாளை மற்றும் நாளைமறுதினம் இந்தப் போட்டி இடம்பெறவுள்ளது. இந்தப் போட்டிக்கான ஆரம்ப நிகழ்வு இன்று இரவு 7 மணிக்கு யாழ்ப்பாணம் மாநகர சபை இயங்கிய வளாகத்தில் இடம்பெறவுள்ளது. ஆரம்ப நிகழ்வுக்கு யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)

## தமிழ்ப்பாடல்.....

மற்றும் தங்க நகைகளை அபகரித்துச் சென்றுள்ளார் என்று சாரதியும், நடத்துனரும் பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஹம்பாந்தோட்டை சென்ற தனியார் பேருந்தில் சிங்களப் பாடல்கள் ஒலிக்க விடப்பட்டுள்ளன. அதில் பயணித்த பயணியொருவர் தமிழ்ப் பாடல் இல்லையா எனக் கேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த பேருந்தின் சாரதியும் நடத்துநரும் பயணியை இறக்கிவிட்டனர் என்று பயணியின் தரப்பால் தெரிவிக்கப்பட்டது. எனினும் சாரதியும் நடத்துனரும், குறித்த நபர் தமது பணம் மற்றும் நகைகளை அபகரித்துச் சென்றுள்ளார் என்று கொடிகாமம் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

வழக்கு விசாரணைக்காக நேற்று எடுக்கப்பட்டது. சந்தேக நபரை இரண்டரை லட்சம் ரூபா பிணையில் செல்வதற்கு நீதிவான் அனுமதித்தார். (ம-9)

## 30/1...

பிரிட்டன், கனடா, ஜேர்மனி, மசிடோனியா, மொன்ரனிக்கோ ஆகிய நாடுகள் இணைந்து முன்வைத்த இந்தத் தீர்மானத்தை திருத்தங்களின்றி இணை அனுசரணை வழங்க இலங்கை இறுதி நேரத்தில் இணங்கிக் கொண்டது.

இதற்கான தீர்மான முன்வரைவு, 'இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்' என்ற தலைப்பில், முன்வைக்கப்பட்டது. இதற்கமைய, 2015ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் சபையில், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, இலங்கை அரசுக்கு, மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடக்கவுள்ள சபையின் 43ஆவது கூட்டத்தொடரில், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரினால் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்குமாறு தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது. 2021 மார்ச் மாதம், விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 2015ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்து, ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் விரிவான அறிக்கையுடன், சபையில் விவாதம் ஒன்று நடத்தப்படும் என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. (ம)

## வலி. வடக்கில்....

2009ஆம் ஆண்டு ஆக்கிரமித்து வைத்திருந்தனர். தமது கட்டுப்பாட்டிலிருந்த காணிகளில் தல்செவன ஹோட்டல் இராணுவத்தினராலும், காங்கேசன்துறையில் அமைக்கப்பட்ட கார்பர் வியூ ஹோட்டல் கடற்படையினராலும் கட்டப்பட்டது. தல்செவன ஹோட்டலுக்கு மக்கள் சென்று வரவும் 2013ஆம் ஆண்டுக்குப் பின்னர் அனுமதிக்கப்பட்டது.

இந்தக் காணிகள் மக்களின் காணிகள். அரச திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளை ஆக்கிரமித்தே அமைக்கப்பட்டுள்ளன. ஆக்கிரமிப்புக் காணிகளை ஹோட்டல்களுக்குச் சட்டரீதியாகப் பெற்றுக் கொடுக்க மகிந்த அணியினர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி அரசியல் சூழ்ச்சியின் ஊடாக ஆட்சிப்பீடமேறியது மகிந்த அணி. அவர்களது காலத்தில், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அரச அலுவலர்களை நாடாளுமன்ற துறைசார் குழுக் கூட்டங்களுக்கு அழைத்துள்ளனர். கார்பர் வியூ ஹோட்டலுக்குரிய காணியை கடற்படையினருக்கும், தல்செவன ஹோட்டலுக்குரிய காணியை இராணுவத்தினருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சிநிலமே அழுத்தம் கொடுத்துள்ளார்.

அதற்குரிய நடவடிக்கைகள் அரச அதிகாரிகளால் எடுக்கப்பட்டிருக்காத நிலையில், நாடாளுமன்ற துறைசார் குழுக் கூட்டத்துக்கு மாவட்ட அதிகாரிகளை மீளவும் அழைத்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சிநிலமே. காணிகளை பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்க நடவடிக்கை எடுக்காத அதிகாரிகளை திட்டித் தீர்த்து எச்சரித்துள்ளார். இதனையடுத்து காணிகளை சுவீகரிப்பு செய்வதற்கு அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஆயத் திணைக்களம், உணவு களஞ்சியம், கே.கே.எஸ். ஆங்கில மகாவித்தியாலயம் என்பவற்றுக்கும் மற்றும் தனியார் சிலருக்கும் சொந்தமான காணிகளையும் உள்ளடக்கியே தல்செவன ஹோட்டல் அமைந்துள்ளது. அந்தக் காணிகளைச் சுவீகரிப்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளாக இருப்பதால் அவற்றை பாதுகாப்பு அமைச்சுக்கு பாரப்படுத்தும் நடவடிக்கையை காணி அமைச்சே முன்னெடுக்கவேண்டும். இதற்குரிய ஆலோசனைகளைக் கோரி, காணி அமைச்சுக்கு யாழ்ப்பாண மாவட்ட அதிகாரிகளால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (ஓ.5)

## தமிழ்க்...

அழுத்தங்களையடுத்து காணி அளவீட்டு நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்துவதற்கான கடிதம், நில அளவைத் திணைக்களத்துக்கு வலி.வடக்குப் பிரதேச செயலரிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது.

வலி. வடக்கில் ஜே/226, ஜே/233, ஜே/234 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய 232 ஏக்கர் காணிகளை கடற்படையின் முகாம் அமைப்பதற்கும், சுற்றுலா அதிகார சபைக்கும் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மகிந்த அரசின் காலத்தில், நகுலேஸ்வரத்தில் ஆடம்பர விடுதி அமைக்கப்பட்டது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் அந்த விடுதியை வழங்குமாறு வடக்கு மாகாணசபை கோரியிருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் கோரியிருந்தது. இறுதியில் சுற்றுலா அதிகார சபைக்கு வழங்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்திருந்தார்.

சுற்றுலா அதிகார சபைக்கு அந்த மாளிகை அதனோடு இணைந்த 62 ஏக்கர் நிலப்பரப்பை சுவீகரிப்பதற்கு அரச தலைவர் நடவடிக்கை எடுக்கப் பணித்திருந்தார்.

இதனையடுத்து கடற்படையினர் தமது முகாமை அந்தப் பகுதியில் அமைப்பதற்கு 160 ஏக்கர்களைச் சுவீகரிக்கக் கோரியுள்ளனர்.

கோயில், மடம், சிமெந்துக் கூட்டுத்தாபனம் மற்றும் தனியாருக்குச் சொந்தமான 232 காணிகளை சுவீகரிப்பதற்காக இன்று அளவீடு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராச, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் காணி அமைச்சர் ஆகியோருடன் பேச்சு நடத்தியிருந்தார். இதனையடுத்து காணி சுவீகரிப்பு நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ஓ.5,26)

## பாதிக்கப்பட்ட...

தெரிவித்தார் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை இம்மனுவல்.


வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனுக்கும் அருட்தந்தை இம்மனுவலுக்கும் இடையில் திடீர் சந்திப்பொன்று ஜெனிவாவில் அமைந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நடைபெற்றது. இலங்கை தொடர்பான விவாதம் நேற்றுமுன்தினம் ஆரம்பமாவதற்கு முன்பு அருட்தந்தைக்கும் ஆளுநருக்கும் இடையில் இந்தத் திடீர் சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே ஆளுநரிடம் மேற்கண்டவாறு எடுத்துரைத்தார் அருட்தந்தை.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் சார்பில் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் உள்ளிட்ட அரச குழுவினர் ஜெனிவா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம22)

## வெப்பத்தால்...

**தித்துறை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப் பட்டது.**

(ம-173,26)

தெற்கு ஆபிரிக்காவைத் தாக்கிய 'இடாய்' புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களில் பலர் வீட்டுக் கூரைகள், மரங்கள், தொங்கு பாலங்கள் ஆகியவற்றில் தொங்கு நிலையில் தஞ்சமடைந்துள்ளனர். இழப்புகள் அதிகமாக இருப்பதால் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதில் கால தாமதம் தவிர்க்க முடியாததாக இருக்கிறது.

## மசூதித் தாக்குதல்களின் எதிரொலி

# துப்பாக்கிக்கு வந்தது தடை நியூசிலாந்தில் புதுச் சட்டம்



வெலிங்டன்,மார்ச் 22

நியூசிலாந்து மசூதிகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களையடுத்து, அந்த நாட்டின் தலைமை அமைச்சர் ஜெசிந்தா ஆர்டன் துப்பாக்கிகளுக்குத் தடை விதிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

நியூசிலாந்தில் நடைமுறையிலுள்ள சட்டப்படி 16 வயதிலே சாதாரண துப்பாக்கியையும், 18 வயதில் தானியங்கித் துப்பாக்கியையும் ஒருவர் வாங்க முடியும். நடைமுறையில் இருக்கும் இந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர வேண்டும் எனக் கோரிக்கைககள் எழுந்தன.

இதையடுத்து, அடுத்த மாதத்திலிருந்து துப்பாக்கிச் சட்டம் புதுப்பிக்கப்படுவதாகத் தலைமை அமைச்சர் ஜெசிந்தா தெரிவித்தார்.

நியூசிலாந்தில் உரிமம் வழங்கப்பட்டிருக்கும் தானியங்கி ரகத் துப்பாக்கிகள், தாக்குதல் துப்பாக்கிகள், தானியங்கித் துப்பாக்கிகளுக்குப் பொருத்தப்படும் குண்டுப் பொதிகள், உதிரிப்பாகங்கள் ஆகியவற்றுக்குத் தடை விதிக்கப்படும். கடந்த வெள்ளி அன்று நடத்தப்பட்ட தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட துப்பாகிகள் நாடு முழுவதும் தடை செய்யப்படும். இந்தத் தடை அடுத்த மாதத்தில் இருந்து நடைமுறைபடுத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**பின்னணி**

நியூசிலாந்தின் கிறிஸ்ட்சர்ச் நகரில் உள்ள 2 மசூதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை தொழுகை நடைபெற்றபோது, திடீரெனப் புகுந்த துப்பாக்கிதாரிகள் அங்குள்ளவர்களைத் தாறுமாறாகச் சுட்டனர். இதில், 49பேர் சாவடைந்தனர். இந்தத் தாக்குதலுக்கு அந்த நாட்டின் தலைமை அமைச்சர் ஜெசிந்தா ஆர்டன் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார்.


## இத்தாலியில் பயங்கரம்

# மாணவர்களை இருக்கையில் கட்டி பேருந்துக்குத் தீ வைப்பு

*மயிரிழையில் காப்பாற்றப்பட்ட சம்பவம்*

உரோம்,மார்ச்.22

இத்தாலியில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று, அதன் ஓட்டு நரால் கடத்தப்பட்டது. பின்னர் அந்த ஓட்டுநர் பேருந்துக்குத் தீ வைத்துள்ளார். இத்தாலியின் மிலன் நகர் அருகே இந்தச் சம்பவம் நடந்தது. 51 பிள்ளைகள் இருக்கைகளோடு கட்டி வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே குறித்த பேருந்துக்குத் தீ வைக்கப்பட்டது.



எரிந்து கொண்டிருந்த நிலையில் பேருந்தின் பின்பகுதிக் கண்ணாடிகள் உடைக்கப்பட்டு அவர்கள் மீட்கப் பட்டனர். மீட்கப்பட்ட வர்களில் 12பேர் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இந்தத் தாக்குதல் நடவடிக்கையிலிருந்து குறித்த மாணவர்கள் தப்பியமை பெரும் அதிர்ஷ்மாகக் கருதப்படுகிறது. 47 வயதான அந்த ஓட்டுநர் கைது செய்யப்பட்டார். இவர் செனகலைப் பூர்விகமாகக் கொண்டவர் என்று முதல் கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இத்தாலியின் குடியேறிகள் தொடர்பான கொள்கை மற்றும் மத்திய தரைக்கடல் பகுதியில் நிகழும் குடியேறிகள் சாவு தொடர்பாகத் தனது கோபத்தை அடிக்கடி வெளிப்படுத்தியதாக ஆசிரியர் ஒருவர் கூறினார். கைது செய்யப்பட்ட நபர், "மத்தியதரைக் கடல் பகுதியில் நிகழும் சாவுகளைத்தடுத்து நிறுத்துங்கள், இல்லாவிடில் நான் ஒரு படுகொலையை நிகழ்த்த போகிறேன் என்று குரல் எழுப்பினார்" என்று பொலிஸ் தரப்பிலும் தெரிவிக்கப்படுகிறது.

# ஊசி மூலம் உடலுக்குள் பழரசத்தை செலுத்திய பெண்

பீஜிங்,மார்ச் 22

பழங்கள் உடலுக்கு நல்லது என்பது மருத்துவர்கள் அடிக்கடி வலியுறுத்தும் ஒரு விடயம்.


அதை ஊசி மூலம் உடலுக்குள் செலுத்துவது பாரதூரமான விளைவை ஏற்படுத்தும் என்பதும் அதே மருத்துவர்கள் கூறும் மற்றொரு விடயம். இவ்வாறு ஊசி மூலம் பழரசத்தை உடலுக்குள் செலுத்திய விநோதச் சம்பவமொன்று சீனாவில் நடந்துள்ளது. ஒரு பெண் பழச்சாறை ஊசி வழியாகத் தனது உடலில் செலுத்திக்கொண்டுள்ளார்.

இதனால் அவர் சாவின் விளிம்பு வரை சென்று திரும்பியுள்ளார். 51வயதுடைய குறித்த பெண்ணின் கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் ஆகியவை இதனால் பாதிப்புக்குள்ளாகின.

மேலும் அவசர சிகிச்சைப் பிரிவில் ஐந்து நாள்கள் உயிருக்காக அவர் போராடியுள்ளார்.

சுமார் 20 வகையான பழங்களைச் சாறாக்கி ஊசி வழியாகச் செலுத்திக் கொண்டதாலேயே அவருக்கு இந்த விளைவு ஏற்பட்டது. இந்த சம்பவத்துக்கு பின்னர் சீனாவில் மக்களுக்கு அடிப்படை மருத்துவஅறிவு அவசியம் தேவை என்ற விவாதம் அந்த நாட்டின் சமூக ஆர்வலர்கள் மத்தியில் எழுந்துள்ளது.









# விடுதியில் இரகசிய கமராக்களைப் பொருத்தி, அந்தரங்கங்கள் பதிந்து, காணொலி வெளியீடு!

*தென்கொரியாவில் சம்பவம் - எதிர்ப்புகள் வலுப்பு*

செயுள்,மார்ச் 22

தென்கொரியாவில் விடுதி ஒன்றில் தங்கியவர்களின் அந்தரங்க விடயங்கள் படம் பிடிக்கப்பட்டு ஆபாசக் காணொலி தயாரிக்கப்பட்டு வலைதளத்தில்வெளியிடப்பட்டுள்ளன. இதனால் ஆயிரத்து 600 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தென்கொரியாவில் பெரும் போராட்டமும் எழுச்சி பெற்றுள்ளது.

விடுதியில் நுண்ணிய மறைகாணிகளைப் பொருத்திய ஒரு குழுவினரே இந்தச் செயலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விவகாரம் தொடர்பாக நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். விடுதி அறைகளில் உள்ள தொலைக்காட்சித் தாங்கிகள், ஏனைய மின் சாதனங்களுக்குள் கண்ணுக்குத் தென்படாத வகையில் புகுத்தப்பட்ட சிறிய ரகக் கமராவைப் பயன்படுத்தியே அந்தக் குழு ஆபாசப் படம் எடுத்திருக்கிறது. இந்தப் படங்கள் மூலமாக 6ஆயிரத்து 200 டொலர்களை அந்தக் குழு வருமானமாகப் பெற்றிருப்பதாகவும் கூறப்படுகிறது. பாலுறவு மற்றும் நிர்வாண கோலத்தில் இரகசியமாகப் படம் பிடிப்பது தென் கொரியாவில் ஒரு தொற்றுநோயாக இருப்பதாக விவரிக்கப்படு கிறது. ஆபாசக் காணொலியைத் தயாரிப்பது, பகிர்வது ஆகியவை தென் கொரியாவில் பெரியளவிலான குற்றமாகும். இதனால் இந்தச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தென் கொரிய மக்கள் பெருமளவில் ஒன்றுகூடிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

## இந்தியத் தேர்தல் களம்



# கேரளாவில் 14 தொகுதிகளில் பா.ஜ.க.

புதுடெல்லி,மார்ச்.22
கேரளாவிலுள்ள 20 மக்களவைத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக ஏப்ரல் 23ஆம் திகதி தேர்தல் நடைபெற உள்ளது. இந்தத் தேர்தலையொட்டி, பாரத் தர்ம ஜன சேனா (பிஜேடிஎஸ்) கட்சியுடனும் பி.சி.தாமஸ் தலைமையிலான கேரள காங்கிரஸுடனும் பா.ஜ.க. கூட்டணி அமைத்துள்ளது. இந்த நிலையில் கூட்டணிக் கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு இறுதி முடிவு செய்யப்பட்டுள்ளதாக பா.ஜ.க. அறிவித்தது.

இதில் மொத்தமாகக் கேரளாவில் பா.ஜ.க. 14 தொகுதிகளில் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கேரளாவின் திருவனந்தபுரம் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் சசி தரூரை எதிர்த்து மிசோரம் முன்னாள் ஆளுநர் கும்மணம் ராஜசேகரன் போட்டியிடவுள்ளதாகப் பா.ஜ.க. வட்டாரங்கள் தெரிவித்தன. ச்பரிமலை விவகாரத்தின் எதிரொலி இந்தத் தொகுதியில் தேர்தல் முடிவுகளில் செல்வாக்குச் செலுத்தும் என்று அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது.

# குஷ்பு, ஈ.வி.கே.எஸ்ஸுக்கு காத்திருக்கும் அதிஷ்டம்!

கரூர்.மார்ச்.22
தொகுதியை வாங்கிவிட்டு வலிமையான வேட்பாளரை தேடும் குழப்பத்தில் காங்கிரஸ் கட்சி இருந்து வருவதால் வேட்பாளர் அறிவிப்பதற்குத் தாமதமாகிறது என்று கூறப்படுகிறது. கரூர் உள்ளிட்ட தொகுதிகளில் வேட்பாளர்களை முடிவு செய்வதில் காங்கிரசுக்குக் குழப்பம் நீடிப்பதாகக் கூறப்படு கிறது.

தி.மு.க. தலைவர் கருணாநிதிக்குப்பின் காங்கிரசுக்குப் பல தொகுதிகளைக் கொடுத்தார் ஸ்டாலின். கரூர், கிருஷ்ணகிரி, திருச்சி, விருதுநகர், தேனி உள்ளிட்ட தொகுதிகளை காங்கிரஸுக்கு வழங்கப்பட்டது. கரூர், கிருஷ்ணகிரியில் காங்கிரஸுக்கு வலுவான வேட்பாளர் இல்லாவிட்டாலும் காங்கிரஸ் இந்தத் தொகுதிகளை வலிந்து பெற்றதாகப் பேசப்பட்டது. பல தொகுதிகளை வாங்கிய காங்கிரஸார் இப்போது கரூரில் யாரை வேட்பாளராக நிறுத்தலாம் என யோசித்து வருவதாகக் கூறப்படுகிறது. கிருஷ்ணகிரியையும், கரூரையும் தி.மு.காவிடமே திருப்பிக் கொடுத்துவிடவும் யோசிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் கரூரில் குஷ்புவுக்கும், கிருஷ்ணகிரியில் ஈவிகேஎஸ் இளங்கோவனுக்கும், சிவகங்கையில், விருதுநகரில், தேனியிலும், கன்னியாகுமரியிலும் இந்தத் தேர்தலில் அதிஷ்டம் ஏற்படும் வாய்ப்புகள் இருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# "சரியான நபர் யார்?" சிந்தித்து வாக்களியுங்கள்

முதல்முறை வாக்களிப்பவர்களுக்குத் தேர்தல் அதிகாரி கடிதம்



புதுச்சேரி,மார்ச்.22
எதிர்வரும் இந்தியத் தேர்தலில் முதல்முறை வாக்களிக்க இருக்கும் வாக்காளர்களுக்குத் தேர்தலில் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் கடிதங்களை அனுப்பும் விழிப்புணர்வு இயக்கம் புதுச்சேரி கிரு மாம்பாக்கத்திலுள்ள ராஜீவ்காந்தி பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. முதல்முறை வாக்களிக்கவிருக்கும் வாக்காளர்களுக்கு மாவட்டத் தேர்தல் அதிகாரியின் வேண்டுகோள் கடிதத்தை உதவித் தேர்தல் அதிகாரி ப்ரவிமால் அபிஷேக் பொலுமாட்டலா அளித்து, விழிப்புணர்வு இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்.

அதில், உங்களது வாக்கு உங்கள் எதிர்காலம், வாக்களிப்பது ஓர் புனிதமான கடமை, வாக்காளராக இருப்பதில் பெருமிதம் கொள்வோம்' என்ற வாசகங்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருந்தன. அச்சுறுத்தலுக்கு பணியாதீர்கள், சரியான நபர் யார் என்று சிந்தித்து வாக்களிக்கவும். பணம் மற்றும் அச்சுறுத்தலுக்குப் பணியாதீர்கள் என்றும் குறிப்பிடப்பட்டி ருக்கிறது.

# அ.தி.மு.காவுடன் சமரசமா? மறுத்துரைக்கிறார் தினகரன்

தமிழகம்,மார்ச்.22
அ.தி.மு.காவுடன் அ.ம.மு.காவை இணைப்பதற்கான பேச்சு நடைபெறுவதாக மதுரை ஆதீனம் கூறியிருந்தது. அதைத் திட்டவட்டமாக மறுத்திருக்கிறார் டி டி வி தினகரன். இது தொடர்பாக அவர் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது, 'அ.தி.மு.க.வில் இணைப்பதற்காக தினகரனுடன் சமரசப் பேச்சு நடந்து வருவதாக மதுரை ஆதீனம் சொல்லியிருக்கும் கருத்து அடிப்படை ஆதாரமற்றது. அது உண்மையும் அல்ல. அதற்கு அவசியமும் இல்லை!' என்றுள்ளது.

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் எடப்பாடி அணி, ஓபிஎஸ் அணி என அ.தி.மு.க. இரண்டாகப் பிரிந்தது. மீண்டும் அ.தி.மு.காவில் ஐக்கியமாக ஓ.பி.எஸ். வைத்த நிபந்தனைகளுள் ஒன்று டிடிவி தினகரனை ஓரங்கட்டுவது. இதனால் ஈபிஎஸ் ஓபிஎஸ் அணிகள் ஒன்றாகின. தனித்துவிடப்பட்ட டி டி வி தினகரன் இணைப்பு வியூகத்தை எல்லாம் முறியடித்து ஆர்.கே.நகரில் சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவருடைய குக்கர் சின்னம் பிரபலமானது. அந்த வெற்றியைத் தொடர்ந்து தற்போது மக்களவைத் தேர்தலில் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய நாள்

**மேடம்:** மனதில் இனம்புரியாத சஞ்சலம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை சரிசெய்வது அவசியம். அளவான பணவரவு கிடைக்கும். உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

**இடபம்:** இஷ்ட தெய்வ அருள்பலம் துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். பூர்வ சொத்தில் பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும். உறவினர் வருகை மகிழ்ச்சி வளரும்.

**மிதுனம்:** முக்கியமான செயல் நிறைவேறும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அனுகூல காரணி பலம் பெறும். பணவரவு திருப்திகரமாகும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**கடகம்:** தகுதி மீறிய செயல்களில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரம் மந்தகதியில் இயங்கும். குறைந்த அளவில் பணவரவு கிடைக்கும். முக்கிய வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**சிங்கம்:** சிலர் வீண்பேச்சு பேசுவர். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாக்கவும். சராசரி அளவில் பணவரவு கிடைக்கும். உடல் ஆரோக்கியம் பலம்பெறும்.

**கன்னி:** நண்பரின் ஆலோசனை புதிய வழிகாட்டுதல் தரும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அனுகூல காரணி பலம் பெறும். பணவரவு திருப்திகரமாகும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**துலாம்:** பேச்சு செயலில் உறுதி நிறைந்திருக்கும். கூடுதல் உழைப்பில் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெறுவீர்கள். தாராள அளவில் பணவரவு கிடைக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**விருச்சிகம்:** எவருடனும் பேசுவதில் நிதானம் வேண்டும். தொழில், வியாபாரம் சீராக இருக்க கூடுதல் உழைப்பு உதவும். மிதமான அளவில் பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** ஒருமுகத் தன்மையுடன் செயல்படுவது அவ்சியம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேறும். பணவரவு அளவுடன் இருக்கும்.

**மகரம்:** மனதில் அன்பும், கருணையும் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழித்து புதிய சாதனை இலக்கை அடையும். ஆதாய பணவரவில் சேமிப்பு கூடும்.

**கும்பம்:** உதவி பெற்றவர் நன்றி மறந்து செயல்படுவார். தொழில், வியாபாரம் சீர்பெற கூடுதல் முயற்சி உதவும். அதிக நிபந்தனையுடன் கடன் பெற வேண்டாம்.

**மீனம்:** அடுத்தவர் வியக்கும் வகையில் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அளப்பரிய நன்மை உருவாகும். பணப் பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

# சமூக வலைத்தளங்களில் பரப்புரை போலிப் பதிவுகளால் குழப்பங்கள்

மதுரை.மார்ச்.22
இந்திய நாடாளுமன்றத் தேர்தல் கால மேடைப் பரப்புரை உச்சமடையாத நிலையில், சமூக வலைத் தளங்களில் தி.மு.க., பா.ஜ.காவினரின் பரப்பரை சூடுபிடித்துள்ளது. இதில் கடும் விமர்சனங்கள், போலிப் பதிவுகளால் மக்கள் குழப்பம் அடைந்துள்ளனர். குறித்த கட்சிகள் சமூக வலைத்தளப் பிரிவைத் தொடங்கித் தனியாக நிர்வாகிகளை நியமித்து பரப்பரையில் ஈடுபட்டு வருகின்றன. தேர்தல் கூட்டணி முடிவான நாளில் இருந்தே, குறித்த இரண்டு கட்சிகளும் முகநூல், 'வட்ஸ் அப்', 'இன்ஸ்டாகிராம்' கீச்சகம் போன்ற சமூக வலைத்தளங்களில் பரப்புரையைத் தொடங்கி விட்டன. முதலில் தாங்கள் ஆளும்போது செய்த சாதனைகளைப் பட்டியலிட்ட கட்சிகள் பின்னர் தனி மனிதத் தாக்குதலைக் கையில் எடுத்துள்ளன.



அதைப் பார்க்கும் நடுநிலை வாக்காளர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். சமூக வலைத் தளங்களில் போலிப் பிரச்சாரமும் அதிகரித்துள்ளது. வடிவமைப்புகள் செய்யப்பட்ட ஒளிப்படங்களையும் வலைத் தளங்களில் பரப்பி வருகின்றனர்.

இதன் உண்மைத் தன்மையை அறியாமல் பலரும் பகிர்ந்து வருகின்றனர். இதனால் உண்மை எது? பொய் எது? என்று புரியாமல் பலர் குழப்பம் அடைந்துள்ளனர்.

# விளையாட்டு விழா

தெல்லிப்பழை, மார்ச் 22

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரி வுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பிரதேச விளையாட்டு விழா இன்று பி.ப. 2.30 மணிக்கு தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் இ.குருபரன் வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், மாவட்ட விளையாட்டு அலுவலர் க.விஜிதரன் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அதிபர் ம.மணிசேகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஓ.9)

++++

கரணவாய், மார்ச் 22

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளை யாட்டுக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு வல்லை நெடியகாடு விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலர் ஆ.சிறி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக வடக்கு மாகாண உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆர். இராஜசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

பெண்களுக்கான வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும், ஆண்களுக்கான கால்பந்தாட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக்கழகமும் மோத வுள்ளன. (ஓ.108)



# சாதித்தது சென்.பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 22

சாந்தனின் சிறப்பான கோல் பதிவின் மூலம் யாழ்ப்பாணம் கல்வி வலய மட்ட சம்பியனாது யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி.

யாழ்ப்பாணம் கல்வி வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயது பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பதிவு செய்யாது போக முதற் பாதி ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் முடிவதற்கு 10 நிமிடங்கள் இருக்கையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சாந்தன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார். மேலதிக கோல் பதிவின்றி இரண்டாம் பாதி ஆட்டம் முடிவுக்கு வந்தது. ஆட்ட நேர முடிவில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று யாழ்ப்பாணம் கல்வி வலய மட்ட சம்பியனாது. (ஓ.23)

# போட்டி முடிவுகள்

கம்பர்மலை கலா வாணி சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்து அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வல்லை விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

வல்லை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்லயன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வல்லை விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக வல்லை விளையாட்டுக்கழக அணி வீரர் தாஸ் தெரிவு செய்யப்பட்டார்.

++++

நாவாந்துறை கலைவாணி விளையாட்டு கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதியது.

3:2 என்ற கோல் கணக்கில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. குறிஞ்சிக்கும ரன் விளையாட்டுக்கழக அணி சார்பாக கஜேந்திரன் 2 கோல்களையும், கஜமுகன் ஓர் கோலினையும், ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி சார்பில் நிரோசன், மதி இருவரும் தலா ஒவ்வொரு கோல்களைப் பதிவு செய்தனர். (ஓ.23)

# யங்கம்பன்ஸ் வி.க. இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், மார்ச் 22

கம்பர்மலை கலா வாணி சனசமூகநிலையத்தின்வைரவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பபந்தாட்டத் தொடரில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

கழக மைதானத்தில் இடம்பெற்ற அரை இறுதியாட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொலின் விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா ஒவ்வொரு கோல்களைப் பதிவு செய்ய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றியைத் தீர்மாணிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. 2:1 என்ற கோல் கணக்கில் யங்கம்பன்ஸ்விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. சிறந்த ஆட்ட நாயகனாக யங்கம்பன்ஸ் அணி வீரர் தெரிவு செய்யப்பட்டார். (ஓ.23)

# இமையாணன் மத்தியும் இறுதிக்குள் நுழைந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 22

கம்பர்மலை கலா வாணி சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டக் கால்பந்தாட்டத் தொடரில் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. கழக மைதானத்தில் இடம்பெற்ற அரை இறுதியாட்டத்தில் இமையாணன் மத்தி விளையாட்டுக்கழககழகஅணியை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா 2 கோல்களைப் பதிவு செய்ய ஆட்டம் சம



நிலையில் முடிவடைந்தது.

வெற்றியைத் தீர்மாணிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது.

3:2 என்ற கோல் கணக்கில் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. ஆட்ட நாயகனாக இமையாணன் மத்தி அணி வீரர் சுலக்சன் தெரிவு செய்யப்பட்டார். (ஓ.23)

# இன்றைய ஆட்டங்கள்

தெல்லிப்பழை நாமகள் விளை யாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொற்றவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஏழாலை பைஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

++++

கம்பர் மலை கலாவாணி சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்து அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பபந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.


மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில்மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இருதயராஜா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ஓ.23)

# பூப்பந்தாட்டம் காண்டீபன் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 22

அரியாலை 100ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு வடக்கு, கிழக்கு மாகாண ரீதியாக நடத்திய பூப்பந்தாட்ட தொடரின் 40 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய எஸ்.காண்டீபன் கிண்ணம் வென்றார்.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய எஸ். காண்டீபன், வவுனியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய எஸ்.ராஜனை 21:15, 21.13 என்ற நேர்செற் கணக்கில் தோற்கடித்தார். (ஓ.23)






# சென்னை அணி அதிரடி முடிவு

12ஆவது ஐ.பி.எல். போட்டித் தொடர் நாளை ஆரம்பமாகவுள்ளது. இதில் முதல் போட்டியில் நடப்புச் சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் - பெங்களூர் ரோயல் சஞ்சர்ஸ் அணிகள் மோதுகின்றன.
இந்தப் போட்டி சென்னை சேப்பாக்கம், சிதம்பரம் மைதானத்தில் இரவு 8 மணிக்கு ஆரம்பமாகின்றது.
இந்த நிலையில் ஐ.பி.எல். முதலாவது ஆட்டத்தின் ரிக்கெட் மூலம் கிடைக்கும் வருமானத்தை புல்வாமா தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவ வீரர்களின் குடும்பத்துக்கு வழங்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் முடிவு செய்துள்ளது.
சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் டோனி, இராணுவத்தில் கௌரவப் பொறுப்பில் இருப்பதால், நலநிதிக்கான இந்தக் காசோலையை அவர் வழங்கி வைப்பார் என்று கூறப்பட்டது.




# ஆர்.சி.பிக்கு நன்றி கூறுங்கள் கோக்லி

## கேலி செய்த கம்பீர்

ஐ.பி.எல். போட்டியின் 12ஆவது தொடர் நாளை ஆரம்பமாகின்றது. இந்த நிலையில் கோக்லி 2013ஆம் ஆண்டிலிருந்து பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணித் தலைவராக இருந்து வருகின்றார் இதற்காக கோக்லி அந்த அணிக்கு நன்றி கூற வேண்டும் என முன்னாள் இந்திய அணி வீரர் கம்பீர் தெரிவித்தார். .
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
கோக்லியை டோனி மற்றும் ரோகித் சர்மா உடன் ஒப்பிடக் கூடாது. அதற்கு இன்னும் நீண்ட காலம் செல்ல வேண்டியுள்ளது. விராட் கோக்லியை சிறந்த அல்லது சூழ்நிலையை சிறப்பாக சமாளிக்கும் அணித் தலைவராக நான் பார்க்கவில்லை. அவர் இன்னும் ஐ.பி.எல். கிண்ணத்தைக் கூட வெல்லவில்லை.
அவரது சாதனையை வைத்துதான் சிறந்த கேப்டனா? என்பதை தரம் பார்க்க முடியும். டோனி மற்றும் ரோகித் ஆகியோர் தலா மூன்று முறை கிண்ணத்தை வென்றுள்ளனர். ரோகித் சர்மா மற்றும் டோனியுடன் விராட் கோக்லியை ஒப்பிட இயலாது. ஏனென்றால் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிக்காக அவர் கடந்த 7 தொடர்களில்தான் அணித் தலைவராக செயற்பட்டுள்ளார்.
கோக்லி மிகவும் அதிர்ஷ்டசாலி. அத்துடன் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிக்கு நன்றி சொல்ல வேண்டும். ஏனென்றால், இன்னும் அவரை அணித் தலைவராக வைத்துள்ளது. ஒரு அணிக்காக கிண்ணத்தை வென்று கொடுக்க முடியாதவர்கள் ஒரு அணியில் அதிக வருடங்களாக நீடிக்க முடியாது.
ஐ.பி.எல். தொடரில் தவறான முடிவு எடுத்தால், பின்னர் தோல்வியடைய வேண்டியதுதான். மிகப்பெரிய போட்டிகளில் எடுக்கப்படும் முடிவுகள் சரியாக இல்லை- என்றார்.

# லுங்கி நிகிடியின் விலகல் சென்னைக்கு இழப்பு



ஐ.பி.எல். 12ஆவது தொடர் நாளை ஆரம்பமாகின்றது. சென்னையில் நடக்கும் முதல் போட்டியில் நடப்பு சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் - பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதுகின்றன. இதில் சென்னை அணி வீரரான வேகப் பந்து வீச்சாளர் லுங்கி நிகிடி காயம் காரணமாக விலகியுள்ளார்.
கடந்த தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் தென்னாபிரிக்காவின் இளம் வேகப்பந்து வீச்சாளரான லுங்கி நிகிடி இடம்பிடித்திருந்தார். முக்கியமான போட்டிகளில் தனது சிறப்பான பந்து வீச்சால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு வெற்றியைத் தேடிக்கொடுத்தார்.
தற்போது இலங்கை அணிக்கெதிராக ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடினார். ஐந்தாவது போட்டியின்போது இவரது இடுப்புப் பகுதியில் காயம் ஏற்பட்டது. இதனால் ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகியுள்ளார். இவரது விலகல் சென்னை அணிக்கு பாரிய இழப்பாக கருதப்படுகின்றது. சென்னை அணி ஒரு வேகப் பந்து வீச்சை இழந்து நிற்கின்றது.

# பன்னாட்டு பூப்பந்தாட்ட தரவரிசை வெளியீடு

பன்னாட்டு பூப்பந்தாட்டத் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் இந்தியாவின் முன்னணி வீராங்கனைகளான பி.வி சிந்து 6ஆவது இடத்திலும், சாய்னா நேவால் 9ஆவது இடத்திலும் காணப்படுகின்றனர். முதல் இடத்தில் தைபோவின் டாய் சூயிங் வீராங்கனையும், இரண்டாவது இடத்தில் சீனாவின் சென் யுபியும், மூன்றாவது இடத்தில் ஜப்பானின் நோஸோமி ஒகுஹரா காணப்படுகின்றனர்.

# பட்லர் அபாயகரமான துடுப்பாட்ட வீரர்

## சிமித் நெகிழ்ச்சி


பட்லருடன் இணைந்து ஆடுவது மிகவும் சிறப்பாக இருக்கும். ஆஸ்திரேலிய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் ஸ்டீவ் சிமித். ஐ.பி.எல். போட்டியில் ராஜஸ்தான் ரோயல் அணியில் இடம்பிடித்துள்ளார். இவர் பந்தை சேதப்படுத்திய குற்றச் சாட்டில் ஓராண்டு தடை விதிக்கப்பட்டு கடந்த தொடரில் பங்கேற்கவில்லை. தற்போது ராஜஸ்தான் அணியில் பங்கேற்று பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்.
ராஜஸ்தான் ரோயல் அணியில் இங்கிலாந்து அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரராக பட்லர் இடம்பிடித்துள்ளார். அவருடன் இணைந்து துடுப்பெடுத்தாடுவது சிறப்பானதாக இருக்கும் என சிமித் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்;
பட்லர் உடன் இணைந்து விளையாடுவது சிறப்பானது. அவருடன் எதிர்முனையில் துடுப்பெடுத்தாடுவது எனக்கு மிகவும் எளிதாக இருக்கும். அவர் ஒரு அற்புதமான வீரர். அத்துடன் உலகின் அபாயகரமான துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் - என்றார்.

## கொல்கத்தா வீரர்

# அன்ரிச் நோட்ஜ் காயத்தால் விலகல்



ஐ.பி.எல். 12ஆவது தொடர் நாளை ஆரம்பமாகின்றது. தென்னாபிரிக்கா அணியின் அன்ரிச் நோட்ஜ் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக ஒப்பந்தம் ஆகி இருந்தார். இவர் இலங்கைத் தொடரில் சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்தினார். இதனால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் ஆதிக்கம் செலுத்துவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தோள்பட்டை காயத்தால் 6 வாரங்கள் அவர் ஓய்வெடுக்க வேண்டும் என்று தென்னாபிரிக்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்ததையடுத்து ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகியுள்ளார். ஏற்கனவே, கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் ஷிவம் மவி, கம்லேஷ் நகர்கோடி ஆகியோர் காயத்தால் விலகியுள்ளனர். இந்த நிலையில் அன்ரிச் விலகியிருப்பது கொல்கத்தா அணிக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.



நாளை 12ஆவது ஐ.பி.எல். தொடர் ஆரம்பமாகவுள்ளது. இந்த நிலையில் முதலாவது போட்டியாக சென்னை சுப்பர் கிங்ஸ்- பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதுகின்றன. இதற்காக சென்னை அணித் தலைவர் டோனி வலைப் பயிற்சியில் ஈடுபட்டு வரும் காட்சி.

# இலங்கை- தெ.ஆ ரி- 20 இன்று

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் ரி-20 போட்டிகளில் முதலாவது ரி-20 போட்டியில் தென்னாபிரிக்கா அணி சுப்பர் பந்துப்பரிமாற்றத்தின் அடிப்படையில் வெற்றி பெற்றது:
இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி இன்று செஞ்சூரியன் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இரு அணிகளுக்குமிடையில் இரண்டு டெஸ்ட் போட்டிகள், 5 ஒருநாள் போட்டிகள், மூன்று ரி-20 போட்டிகள் இடம்பெறுகின்றன. இதில் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி அபார வெற்றி பெற்றது. ஒருநாள் போட்டியை தென்னாபிரிக்கா அணி 5:0 என்ற கணக்கில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது. இன்று இடம்பெறும் ரி-20 போட்டியில் தென்னாபிரிக்கா அணி வெற்றி பெற்றால் இந்தத் தொடரையும் இலங்கை அணி இழக்க நேரிடும். இன்றைய போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றது. இலங்கை அணி வெற்றி பெற்றால் மூன்றாவது போட்டி பரபரப்பாகக் காணப்படும்.

# மூன்று முறை 'சர் ரிச்சர்ட் ஹாட்லீ' விருதை வென்றார் வில்லியம்சன்

ஆண்டுதோறும் சிறப்பாக விளையாடும் வீரர்களுக்கு நியூசிலாந்து கிரிக்கெட் சபை விருதுகள் வழங்கி கௌரவிக்கின்றது. மிக உயரிய விருதான 'சர் ரிச்சர்ட் ஹாட்லீ' விருதை இந்த முறை வில்லியம்சன் பெற்றார். இவர் ஏற்கனவே இரண்டு முறை இந்த விருதை வென்றுள்ளார். இதன்மூலம் மூன்று முறை 'சர் ரிச்சர்ட் ஹாட்லீ' விருதை பெற்ற முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். நியூசிலாந்து கிரிக்கெட் அணித் தலைவர் வில்லியம்சன். தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராகக் காணப்படுகின்றார். இவரது தலைமையில் மேற்கிந்தியத்தீவுகள், இலங்கை, இங்கிலாந்து, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரை நியூசிலாந்து அணி கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

**வெளிவந்துவிட்டது**
**A/L - Past Paper**
சகல பாடங்களும்
2018 உட்பட (CS/24063)(11.17)
**அன்னை புத்தகசாலை**
**யாழ்ப்பாணம். 021 222 9881**

**பணிப்பெண் தேவை**
வயோதிபத் தாய் ஒருவரைப் பராமரிப்பதற்கு 25 தொடக்கம் 45 வயதுக்குட்பட்ட பெண் தேவை.
**077 769 6771**

## அனைத்து HONDA மோட்டார் சைக்கிள்களிற்கும்
**பதிவுக்கட்டணம் இலவசம்**
தெரிவுகளுக்கு முந்துங்கள்
**இச்சலுகை** (வரை ஸ்டப்ட் மோட்டார் (தனியார்) நிறுவனத்தின் ஏக விநியோகஸ்தர்கள்)
RATNAM BROTHERS
No. 291, STANLY ROAD,
JAFFNA.
HONDA
**021 222 6185, 021 222 9231,**
**077 734 0056** (CS. 24145)(13.17)

**போட்டிப் பரீட்சை விசேட வகுப்புகள்**
நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர்
வடமாகாண வருமான பரிசோதகர்
பிரிவு I சனி 10.00→2.00
பிரிவு II ஞாயிறு 10.00→2.00
வரிமதிப்பீட்டாளர்
சனி 8.30→1.00
நீதிமன்ற பதிவாளர் சட்டமாணி துறை
சனி 10.00→3.30
புள்ளிவிபரவியலாளர்
சனி 10.00→2.30
SLAS, SLEAS
பிரதி ஞாயிறு 9.00→3.30
ஆசிரியர் தெரிவு
பிரதி ஞாயிறு 9.00→3.30
**076 688 3394,**
**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு**
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

## வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
- சுத்திகரிப்பாளர்கள்

ஆர்வம் உள்ளவர்கள் உங்கள் சுயவிவரக் கோவையுடன்
**24.03.2019 ஞாயிற்றுக்கிழமை**
**காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை**
நேரில் சமுகம் தரவும்.
**ES பிறிண்ரர்ஸ்**
**357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**



**தொடர் கருத்தரங்கு**
23.03.2019, 9pm-2pm
பிரதி சனிக்கிழமைகளில்
P.கமல்தாசன்
மற்றும் துறைசார் வளவாளர்
K.குமணன் - SLPS
K.தெய்வேந்திரம் - SLAS - மற்றும் சட்டம்
S.பரணிதரன் LLB, SLPS.
SLAS, SLEAS (Open / Ltd)
வரி மதிப்பீட்டாளர், நீதிமன்ற பதிவாளர், எழுதுநர், வருமான பரிசோதகர், சமயபாட ஆசிரியர் பரீட்சைக்கான வகுப்புக்கள் தனித்தனியாக நடைபெறும்.
**நாவலர் கல்வி நிறுவனம்**
பருத்தித்துறை வீதி- ஆனைப்பந்தி
**077 111 6739,**
**076 166 1986**

## நித்திய பூசகர் தேவை
ஆனைக்கோட்டை குளப்பிட்டி பிரதான வீதிக்கு அருகில் அமைந்துள்ள மாதந்தோறும் பல உபயங்களைக் கொண்ட உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலயத்திற்கு பூசகர் இல்லத்தில் இருந்து 3 கால பூசைகளை செய்வதற்கு பிராமண சமூகத்தைச் சேர்ந்த நித்திய பூசகர் ஒருவர் தேவைப்படுகின்றார். பிற விடயங்கள் நேரில் பேசி தீர்த்துக் கொள்ளலாம்.
**பரிபாலனசபை,**
**உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலயம்**
**077 415 5798, 071 732 2952, 077 885 3954**

## காசி யாத்திரை
**ஆரம்பம் : 15.05.2019 | யாத்திரீகர் : 10 | நாள்கள் : 10**

**தரிசிக்கும் இடங்கள்:**
டெல்லிநாராயணர் கோயில் வேறு இடங்களும் காசியில் 15 இடங்கள், கங்காபூசை, கயா, புத்தகயா, அலகாபாத், (கங்கா, யமுனா, சரஸ்வதி) திருவேணிசங்கமம், சீத்தாமடி, ஆக்ரா(தாஜ்மகால்), மதுரா கிருஷ்ண ஜென்மபூமி, பிரேமந்திர், பிரமாண்டமான கிருஷ்ணர் கோயில், செங்கோட்டை, இராமேஸ்வரம், உத்திர கோசமங்கை, திருப்புலானி, நவபாஷானம், பஞ்சமுக ஆஞ்சநேயர், அப்துல்கலாம் மணிமண்டபம், மதுரை மீனாட்சி அம்பாளையும் தரிசிக்கலாம்.
**ஒரு நாள் சென்னையில் சொப்பிங்**
**பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை**
4 விமான பயணடிக்கட், மூன்று வேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, குடிநீர் 2 பேருக்கு, வெஸ்ரன் கொமட், குளியலறை, இணைந்த அறைகள், பயணம் முழுவதும் A/C வாகன வசதி, யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரவும் திரும்ப யாழ் செல்லவும் வாகன வசதி ஒழுங்குகள் செய்து தரப்படும். பதிவு செய்யவும்.
**"சென்றவர்களைக் கேளுங்கள் சென்று வரலாம் வாருங்கள்"**
**கலாநிதி.T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்**
**59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11**
**077 768 0102/ 077 736 2154** (N 9608)(4.17)
**Email: Sriranganathan2601@gmail.com**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி
பிறப்பு 23 . 11 . 1950



இறப்பு 21 . 02 . 2019

**அமரர் சரஸ்வதிதேவி பரமேஸ்வரலிங்கம்**
திருமதி சரஸ்வதிதேவி பரமேஸ்வரலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (23.03.2019) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அன்றையதினம் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
பத்திரகாளி கோயிலடி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.
**இ.பரமேஸ்வரலிங்கம்**
**(உபதவிசாளர், வலி.தெற்கு பிரதேசசபை)**
**உறவினர்கள்.**

**Macktiles LANKA**
ஏற்றுமதியிலிருந்து அகற்றப்பட்ட
உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான
**50% வரை விலைக்கழிவு**
## மெக்டைல்ஸ் புத்தாண்டு சேல்
2'x2' ரூ.475/=
**2019 பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி முதல் இவ்விடங்களில்...**
- ஹிதாயாஸ் சிட்டி சென்டர், தனித் தென்னை மரச்சந்தி, **காலி.**
- **ராஜகிரிய** மேம்பாலத்துக்கு அருகில் (வெலிகடை பொலிஸ் நிலையத்துக்கு அருகில்)
- இல 12, சீ வீவ் எவனிவ், **கொல்லுப்பிட்டி.**
- இல. 385/7, பன்னிபிட்டிய வீதி, **தலவத்துகொடை.**
- இல. 95, பழைய காலி வீதி, **மொரட்டுவ.** (மொரட்டுவ பொலிஸ் நிலையத்துக்கு அருகில்)
- 121,123, 1ஆம் குறுக்குத் தெரு, **யாழ்ப்பாணம்**
- 539/8, மல்வத்த, நிட்டம்புவ, **திஹாரிய**

காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.